



இணுவைக் கந்தசுவாமி கோயில்

பிரதம குருமணி, பிரதிஷ்டா பூஷணம்

சிவஸ்ரீ நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள்

ஸ்ரீமதி ஸ்ரீ ரஞ்சனியம்மாள் தம்பதிகளின்

# மணிவிழா மலர்

ௐ


இணுவில் கந்தசுவாமி கோயில்

பிரதம குருமணி, பிரதிஷ்டா பூஷணம்

சிவஸ்ரீ நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள்

ஸ்ரீமதி ஸ்ரீரஞ்சனியம்மாள்

தம்பதிகளின்



# மணிவிழா மலர்

தொகுப்பாசிரியர்

சைவப்புலவர்

ஏ.அநுசாந்தன்

27—07—2005

# நூல் வெளியீட்டுத் தரவுகள்

| | |
|---|---|
| நூலின் பெயர் | சிவஸ்ரீ நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஸ்ரீமதி ஸ்ரீரஞ்சனியம்மாள் தம்பதிகளின் மணிவிழா மலர் |
| மொழி | தமிழ் |
| தொகுப்பாசிரியர் | சைவப்புலவர் ஏ.அநுசாந்தன், குப்பிழான் |
| வெளியீடு | சிவஸ்ரீ நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள் குடும்பத்தினர்.<br>கந்தசுவாமி கோவில், இணுவில்.<br>தொ.பே. 021 – 222 – 7731 |
| கணினி வடிவமைப்பு | ஸ்ரீவித்யா கணினி அச்சகம்,<br>இணுவில், சுன்னாகம், ஸ்ரீ லங்கா.<br>தொ.பே. 021 – 222 – 6004 |
| அச்சுப்பதிப்பு | சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்<br>கோண்டாவில்.<br>தொ.பே. 021 – 222 – 6722 |
| வெளியீடு | 27 – 07 – 2005. |

# சமர்ப்பணம்

எம்மைப் பெற்று இனிது வளர்த்தெடுத்து
அறிவையும் ஆற்றலையும் அன்போடு நிறைவித்து
கலைமகளும் அலைமகளும் கருணைசெய்யத் தாம் மகிழ்ந்து
நாம் வாழத் தாம் வாழும் நமது பெற்றோரர்க்கு
நன்றிபாராட்டி விழா எடுக்கவேண்டும் என்பது எமது விருப்பம்.

மனித வாழ்க்கையில் சம்ஸ்காரங்கள் மிக முக்கியமானவை.
அதுபோலவே உரியகாலத்தில் சாந்திகர்மாக்களையும்
செய்துவருவது யாவருக்கும் நன்மையானதன்றோ?

அவ்வகையில்
எமது குடும்ப முதல்வர்களாகிய
**சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள்**
**ஸ்ரீமதி உ. ஸ்ரீரஞ்சனி அம்மா தம்பதிகளின்**
ஷஷ்டியப்தபூர்த்தி விழாவை நாம்
மனநிறைவோடு கொண்டாடி மகிழ்கிறோம்.
இவ்வேளையில்
சைவ மக்களிற்கு உதவும் வகையில்
**இந்த மணி விழா மலரினை**
வெளியிட்டுவைத்துப் பெருமகிழ்வடைகின்றோம்.

இந்நூல் வெளியீடு சிறக்க
ஆசியுரை, வாழ்த்துரை, வழங்கியவர்களுக்கும்
தொகுத்து வழங்கிய சைவப்புலவர் ஏ. அநுசாந்தன்
அவர்களுக்கும் கணினியில் வடிவமைத்து உதவிய
கோப்பாய் சிவம் அவர்களுக்கும் அச்சில் பதித்த
அச்சகங்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
**மக்கள், மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள்**
**பேரப்பிள்ளைகள்.**



இணுவில் கந்தசாமி கோயில்
இணுவில் செகராஜசேகரப் பிள்ளையார் கோயில்
சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் கோயில்
உடுவில் கற்பகப் பிள்ளையார் கோயில்
வேலணை சிற்பனை முருகமூர்த்தி கோயில்
ஆகிய தேவஸ்தானங்களின்

பிரதம குரு, பிரதிஷ்டாபூஷணம், வேதசிவாகம பானு
கிரியாதிலகம், சிவாகமஞான சாகரம்
சிவாகம கிரியா தத்துவநிதி, சிவாகம கிரியாஜோதி

## சிவஸ்ரீ நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள்
## ஸ்ரீமதி ஸ்ரீரஞ்சனியம்மாள் தம்பதிகளின்

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா

காலம் : பார்த்திப வருடம் ஆடி மாதம் 11ம் நாள் புதன்கிழமை
(27.07.2005)

இடம் : கந்தசாமி கோவில், இணுவில்.

ஷஷ்டியப்த பூர்த்தி விழா நடாத்தும் குருமணிகள்

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்** (மயிலாப்பூர், தமிழ்நாடு, இந்தியா)
**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்** (காயத்திரி பீடம், இணுவில்)
**சிவஸ்ரீ விஸ்வநாராயணக் குருக்கள்** (தெல்லியூர் - கொழும்பு)





# மணிவிழாத் தம்பதிகள்



# இதழ் 1



## ஆசிகளும் வாழ்த்துக்களும்.

**பிரதிஷ்டா பூஷணம், சிவாகமஞானபாநு, பிரதிஷ்டா கலாநிதி,**

## சிவாசாரிய சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்

**(ஆதீனகுரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை)**

வழங்கிய

# ஆசியுரை

அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிற ஆழி நீத்தல் அரிது (திருக்குறள்)

கடவுள் வாழ்த்துடன் என் வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன். அந்தணர் என்போர் அறவோர் என்று கூறுகின்றார். அற ஆழி அந்தணன் என்று கடவுளைக் கூறும் வள்ளுவப் பெருமான், கடவுளுக்கு அடுத்ததாக அந்தணரைக் கூறினார். அறனை வலியுறுத்தல் அந்தணர் கடமையாகும். அறனை வலிமை உடைத்து என்பதனை அறிவிப்பதாகும். அதனாற்றான் அந்தணர் என்போர் அறவோர் என்று வலியுறுத்திக் கூறினார். அறம், பொருள், இன்பம் மூன்றினுள் பொருளும் இன்பமும் போலாது இம்மை, மறுமை, வீடு எனும் மூன்றினையும் பயத்ததால் அவற்றின் வலியுடைத்து என்பதாம். வாழ்க்கை அறத்தையே அடிப்படையாகக் கொண்டது. அறத்துப் பாலுக்கும் அடிப்படை அறமே. இன்பத்துப் பாலுக்கும் அடிப்படை அறமே. வாழ்க்கையின் இலட்சியம் வீடுபேறு. வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடித்து வாழ்வது வாழ்க்கையின் இலட்சிய முடிவாகும். இதனால்தான் ஔவையாரும் அறம் செய்ய விரும்பு என்றார். வள்ளுவப் பெருமானும் அறம் என்ற சொல்லைப் பல இடங்களில் குறள்களில் கையாண்டுள்ளார். இது அறிஞர்க்கு விருந்தாகும்.

ஆசார்யாபிஷேகம் என்னால் செய்யப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்பவர் நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள். இணுவில் ஆதீன பரம்பரைப் பூஜகர் விருந்தோம்பி இல்லறம் நடத்தி இயல்பினால் இல்வாழ்வு வாழ்பவர். அவர் தர்மபத்தினி அடிசிற்கினியவள். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் இன்னோரன்ன சிறப்புடையவர். இவர்களது அறுபது ஆண்டு நிறைவுற்று 61ஆம் ஆண்டு தொடங்குகின்ற வேளை பல நற்காரியங்கள், சமய சமூகப்பணிகள் செய்து ஆயிரம் பிறை கண்ட சதாபிஷேக விழா நடைபெற எமது குலதெய்வமாகிய அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருப்பாதங்களைப் பன்முறை வணங்கி நல்லாசி நல்கி நிறைவு செய்கின்றேன்.

**இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர்**

சிவாகம ஞான பாஸ்கரன்

**சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்கள்**

**வழங்கிய**

# ஆசியுரை

வாழ்க்கையில் எல்லோருக்கும் எல்லாப் பேறுகளும் கிட்டுவதில்லை. கிடைத்தவரையில் நற்பேறுகளை மகிழ்வோடு ஏற்று மனநிறைவோடு வாழ்வதுதான் நல்வாழ்க்கை.

இளமையில் கல்வி, இனிய இல்லத்துணை, நன்மக்கட்பேறு, அன்பான சுற்றம், பண்பான அயலவர், போதிய செல்வம் இவையே பொதுவான இன்ப வாழ்க்கைக்கு அடிப்படைகள்.

இவையனைத்தையும் பெற்று நிறைவான வாழ்க்கை வாழும் நமது உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் உரிய காலத்தில் சாஸ்திரங்கள் விதித்தபடி ஷஷ்டியப்தபூர்த்தி விழாவை இப்போது கொண்டாடுகிறார்கள்.

சாந்திகர்மாக்களையும் தானதர்மங்களையும் முக்கிய அம்சங்களாகக் கொண்ட ஷஷ்டியப்த பூர்த்தியை உரிய விதிமுறைப்படி வெகுசிறப்பாகக் கொண்டாடும் குருக்களவர்கள் பந்து மித்திரரகளுடன் மகிழ்வுற்று இன்னுமின்னும் நற்பேறுகளைப் பெற்று இனிவரும் நற்காரியங்களான பீமரத சாந்தி, சதாபிஷேகம் முதலியவற்றையும் கொண்டாடி இனிதே நீடுவாழவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**சர்வதேச இந்துமதகுருபீடாதிபதி, கிரியாகலாபமுக்தாமணி**

## சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்

**(நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீனகுரு,**

**சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதகுரு)**

**வழங்கிய**

# ஆசியுரை

முத்தமிழும் செழித்துத் திகழும் இணுவைக் கிராமத்தில் கந்தப் பெருமானின் பரம்பரைப் பூசகரின் வழித்தோன்றலாக விளங்கி வரும் நடராஜக்குருக்கள் உருத்திர மூர்த்திக் குருக்கள் அவர்களின் அறுபதாவது அகவை (ஷஷ்டியப்தபூர்த்தி) கொண்டாடும் இத்தினத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி என்ற வகையில் எனது மனமுவந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவரது தாயாரும் தகப்பன் வழி பேர்த்தியாரும் நயினை அம்பாளின் பரம்பரைப் பூசகர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

இணுவிலுக்கும் நயினைக்கும் நெடுங்காலம்தொட்டு ஒன்றாகப் பிணைக்கப்பட்ட குடும்பத்தில் உதித்தவர்கள் தான் இன்று விழாக்காணும் விழா நாயகர். இவர் பாரம்பரியமான குருத்துவத்தைத் திறம்படவும் விதிப்படியும் நடத்தி மக்களின் அன்பையும் பாராட்டுக்களையும் பெற்றவர். தெய்வீக நம்பிக்கையுடைவராகவும் ஆசாரசீலராகவும் வாழ்ந்து நல்ல குடும்பம் நல்ல பிள்ளைகள் பெற்று உலகம் போற்றும் குருமணியாகச் சிறந்து விளங்கித் தமது குரு சேவையை மக்களுக்கு ஆற்றிவருவதும் ஒரு சிறப்பம்சமாக விளங்குகின்றது.

ஆகவே இவரது விழா சிறப்புற நடைபெற்று மேலும் தம்பதிகள் பல்லாண்டு காலம் சகல சௌபாக்கியங்களுடன் வாழ்ந்து சதாபிஷேகம் வரை சிரஞ்சீவியாக வாழ எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

கொழும்பு

**வேதாகம வித்யா பூஷணம்**

**பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா அவர்களின்**

**(சர்வ சாதகர், ஆகம ஆலோசகர்)**

# வாழ்த்துரை

உருண்டோடும் உலகியல் வாழ்வில் உயர்ந்த வாழ்வாக மனித வாழ்வு மதிக்கப்படுகின்றது. சாஸ்திர சம்பிரதாய சம்ஸ்காரங்களுடன் நெறிமுறை தவறாது வாழ்வோர் நிலமிசை நீடுவாழ்வார் என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வகையில் இன்று அறுபதாவது வயது பூர்த்தியைத் தனது சுற்றத்தோடு சேர்ந்து கொண்டாடும் இணுவில் சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஸ்ரீரஞ்சனி தம்பதியினர் போற்றுதற்கும், வணக்கத்திற்கும் உரியவர்கள் ஆகின்றனர். வருடங்கள் 60. சுவாமிமலை சுவாமிநாத சுவாமியின் மலைப்படிகள் 60. இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் பரம்பரையில் வந்த ஸ்ரீ நடராஜக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களின் வயது 60. உயர்மரபில் நல்வாழ்வு வாழும் தம்பதியினரின் இல்லறச் சிறப்பு அவர்களின் இல்லச் சிறப்பால் காணப்படும் பிள்ளைகள் அனைவரும் பேரப்பிள்ளைகளோடு சீரும் சிறப்புமாக சீமந்தக் குமாரன் ஸ்ரீ அபராஜிதன் தவிர்ந்த அனைவரும் இங்கிலாந்து தேசத்தில் வாழும் அதே வேளையில் சிவஸ்ரீ அபராஜிதக் குருக்கள் தந்தையாருடன் இருந்து புகழ்பூத்த இணுவில் கந்தனின் பிரதம குருவாக வாழ்கின்றார்.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை என்பதற்கேற்ப ஸ்ரீரஞ்சனி (பாமா) குருக்களின் உயர்வுக்குக் காரணமாகின்றார். சிறந்த வைதீகர்களின் தலைமையில் இன்று ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும் எங்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் மேலும் பலகாலம் சீருடன் வாழ்ந்து சதாபிஷேகம் கொண்டாட எல்லாம் வல்ல கந்தப் பெருமான் அருளவேண்டுமெனப் பிரார்த்தித்து விழாத் தம்பதியினரின் பாதம் பணிந்து அமைகின்றேன்.

**பிரம்மஸ்ரீ Dr. G. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்**

**வேதவாத்யார் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில்,**

**மயிலாப்பூர் - சென்னை-04. அவர்களின்**

# ஆசியுரை

சிவஸ்ரீ ருத்திரமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் துணைவியார் திருமதி ஸ்ரீரஞ்சனி ருத்ரமூர்த்தி அவர்களுக்கும் இன்று மணிவிழா வெகுசிறப்பாக நடைபெற்று மார்க்கண்டேயர் ரிஷி அஸ்வத்தாமாதி சப்தசிரஞ்சீவிகள் சம்வத்ஸர தேவதைகள், குலதேவதைகள் ஆகியோர்கள் அனுக்கிரஹத்துடன் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் ஸ்ரீ கற்கபகாம்பாள் சமேத கபாலீஸ்வரர் ஸ்வாமி பரிபூர்ண அனுக்ரகத்துடன் அரோக த்ருடகாத்ர தீர்க்காயுஷ்யத்துடன் சர்வசௌபாக்யத்துடன் தம்பதிகள் இருக்கும்படி எனது குருநாதரின் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்தி அருள்பாலிக்கிறேன்.

ஸ்ரீமன்தம் சான்த மனசம் சிவபூஜா பாராயணம்<br>
சிவாகம தத்வஞ்யம் ருத்ரமூர்த்திம் அஹம்பஜே

சிவதத்வ விதிகளின் படி வாழ்நாள் பூர்த்தியாக (ருத்ரோவிஸ்வா புவனா விவேச) வேதத்தின்படி உலகமெல்லாம் போற்றும்படி இவர்கள் மேன்மையடைய ஸ்ரீருத்ரவிபூதி வாழ்த்து மடல். (ஜீவேம சரதஸ்சதம்) என்று சூரியபகவானைப் பிரார்த்தித்து இரண்டுகையில் வருத்துல மண்டலத்தில் பார்ப்பதே. தம்பதிகள் வேத விதியின் 100 வயது வாழ்ந்து பந்து மித்ரர்களுடன் வாழவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன். ஷஷ்டிதமாப்த பூர்த்தி என்பது தசாபுத்தி 120 வயதாகும். அதில் பாதி பகுதியை கடக்கும் காலம். ஷஷ்டி அப்த பூர்த்தி. அடுத்த படியாக ஆரம்பவருஷம் ஏகஷஷ்டி வருஷன் என்பதாகும். 1வயதில் அப்த பூர்த்தி 60ஆவது வயது ஷஷ்டியப்த பூர்த்தி என்பதாகும். அதாவது ஷஷ்டிதமாப்த பூர்த்தியைக் காணும் தம்பதிகளுக்கு பூர்ணாபிஷேகம் கிடைக்கும் பாக்யத்தை இறைவன் அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

ஸ்ரீ திரபுரசுந்தரியம்பாள் உடனுறை ஸ்ரீ வேதகிரீஸ்வர சுவாமி துணை

**சர்வசாதக சரபம், சிவாகம சாஸ்திர சக்கரவர்த்தி**

**சிவஸ்ரீ ரீ.சீ. தியாகராஜ சிவாச்சாரியார்**

**திருக்கழுக்குன்றம், தமிழ்நாடு அவர்களின்**

# ஆசியுரை

ஸ்ரீலங்கா தேசத்தின் சைவத்தமிழ் யாழ்.நகரில் இணுவில் கந்தசுவாமி கோவில் பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் தனது சுற்றம் சூழ ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை சாஸ்திரோத்தமாகக் கொண்டாடுவதையறிந்து மகிழ்க்கின்றோம். அவர்கள் நமது பேரன்பிற்குப் பாத்திரரான சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களினால் தீஷை சிவாச்சாரியாபிஷேகம் பெற்றவர் என்பது மேலும் மகிழ்வைத் தருகின்றது.

யாழ்ப்பாண சிவாச்சாரியார்கள் வேத ஆகம சாஸ்திரங்களில் பாண்டித்தியமும் சாஸ்திர சடங்குகளில் சிரத்தையும் உடையவர்கள் என்பதனை நன்கறிவேன்.

மணிவிழாத் தம்பதியினர் திருவருளின் துணையுடன் மேலும் பலகாலம் சீர் சிறப்புடன் வாழ ஆசி கூறி அமைகின்றேன்.

**ஜோதிடமேரு, ஜோதிடபூஷணம்**

**இராம. சத்தியமூர்த்திக் குருக்கள்**

**(இணுவில், கந்தசாமி கோவில்)**

**வழங்கிய**

## ஆசியுரை

சைவத்திற்கும், கலைகளுக்கும் புகழ்பெற்ற இடமாகிய இணுவில் மாநகரில் பக்தியும் அழகும் நிறைந்த கந்தசுவாமி கோவில் அருகாமையில் வசிக்கும் எனது அன்புத் தம்பியான சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் தம்பதியினர் ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும் இவ்வேளையில் எனது பெருமகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு இணுவில் சைவமக்கள் அனைவருக்கும் அவர் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. சமயக் கிரியைகளையும் திருவிழாக்களையும் சிறப்பாக நடாத்திப் பாராட்டுப் பெற்றவர். அவரின் சைவத்தொண்டு மேலும் தொடரவும் எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவருள் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**இணுவில் கந்தசுவாமி கோவில்**

**பரம்பரைப் பூசகர்**

**சிவஸ்ரீ இ. ஸ்ரீகந்தராசக் குருக்கள்**

**வழங்கிய**

# வாழ்த்துரை

இணுவில் கந்தசுவாமி கோவிலின் பரம்பரைப் பூசகர்களாக சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் மகனாகிய நானும் என் சிறியதந்தையார் சிவஸ்ரீ நடராஜக்குருக்களின் புத்திரர் என் அண்ணன் உருத்திரமூர்த்திக் குருக்களும் பணிபுரிந்து வருகிறோம்.

இப்பொழுது தமது 60ஆவது வயதைப் பூர்த்தி செய்து மணிவிழாக்காண இருக்கும் உருத்திரமூர்த்திக் குருக்கள் வேதாசாரத்துடன் மெய்யன்பையும் உறுதியுடன் கைக்கொண் டொழுகுபவர். இறைவன் அருளையே முழுமையாக நம்புவர். அவர் இன்னும் பல வருஷங்கள் வாழ்ந்து இறைவன் திருமேனி தொட்டுப் பூசைபுரியும் ஆனந்தத்தை அனுபவிக்க எல்லாம் வல்ல இணுவை முருகப்பெருமான் கடாட்சம் புரியவேண்டும் என வேண்டிக் குருக்களையும் பாசத்தோடு பல்லாண்டு கூறி வாழ்த்துகின்றேன்.

சிற்பனை முருகன் ஆலய பிரதமகுரு

சிவஸ்ரீ ந. உமேந்திரக்குருக்கள்

வழங்கிய

# பிரார்த்தனை உரை

இலங்கையின் வடபால் யாழ்.நகரில் பிரசித்தி வாய்ந்த அழகிய சிற்பக்கலைகள் நிறைந்த மஞ்சமும் சண்முகப் பெருமானும் காட்சி தரும் இடம்தான் இணுவையம்பதி. அங்கு இசைக் கலைஞர்களும், தவில் நாதஸ்வர வித்துவான்களும், வேதாகமங்கள் அனைத்தையும் கற்ற அந்தண சிவாச்சார்யப் பெருமக்களும் நிறைந்த இடத்தில் இணுவில் கந்தசுாவமி கோவில் சிவாச்சார்யர்களில் குமாரசாமிக் குருக்கள் நடராஜக்குருக்களின் பாரம்பரியமாக வந்த எங்கள் மூத்த சகோதரர் நடராஜக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் பல கும்பாபிஷேகம், மஹோற்சவங்களைச் சிறப்பாக நடாத்தியுள்ளார். அதுமட்டுமல்லாமல் நாங்கள் பங்குபற்றும் உற்சவங்களுக்கும், வைபவங்களுக்கும் முன்னோடியாக நின்று வழிநடாத்துகின்ற பெருமைக்குரியவர். உருத்திரமூர்த்திக் குருக்கள் ஸ்ரீரஞ்சனி தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா இனிது சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இணுவில் சண்முகப் பெருமானைப் பிரார்த்தித்து அவரது பாதம் பணிந்து வேண்டுகின்றேன்.

**ஊர்காவற்றுறை, புளியங்கூடல், செருத்தனைப்பதி**

**ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு**

**பிரம்மஸ்ரீ இ. குகதாசஐயர்**

**வழங்கிய**

# வாழ்த்துரை

பல்கலை கற்று நற்கலைஞானத்தின் சொற்சுவை நாடாம் இலங்கையின் இணுவையம்பதியில் பல நீண்ட நாளாக மிகப்பிரசித்தி பெற்ற திருத்தலமாம் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் சிறந்த சிவாச்சார்யராக கடமைபுரியும் சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் காணும் அறுபதாவது அகவை எண்ணி மகிழ்கிறேன். ஒருவர் பிறந்து நிமிடமாகி, நாளாகி, மாதமாகி, வருடமாகி மீண்டும் பிறந்த வருடநாள் ஆகும் தினமே 60 ஆண்டுப் பூர்த்தியாகும். புண்ணியவான்கள் இப்புனிதநாளைக் கொண்டாடப் பலனுண்டு. அரிது அரிது மானிடப் பிறவி அரிது எனும் ஔவையாரின் வாக்கிற்கு இணங்க மனிதப் பிறவி எடுத்த நாம் இப்பூலகில் நல்ல தர்ம தானங்களைச் செய்து வாழ வேண்டும். அவ்வகையில் 60 ஆண்டுகாலமாக வாழ்ந்தவர்கள் தங்களின் குறைகளையும் தோஷங்களையும் நிவர்த்தி பண்ண ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை மேற்கொண்டு தோஷ நிவர்த்தி பண்ணி புதிய ஓர் வாழ்க்கையை மேற்கொள்வர். அந்தவகையில் மணிவிழாக்காணும் நல்மனிதனாம் சிவாச்சார்யமணி சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் தம்பதிகள் மேலும் பலவருடங்கள் இருந்து நற்சேவைகளையும் நல் விழாக்களையும் கண்டு வாழ வாழ்த்தி மகிழ்கின்றேன்.

PROFESSOR EMERITUS BRAHMASRI
K. KAILASANATHA KURUKKAL MEMORIAL SOCIETY
பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள்
ஞாபகார்த்த சபை



வண்கோவில், நல்லூர், யாழ்ப்பாணம்

SIVAN TEMPLE, NALLUR, JAFFNA

**PRESIDENT** / தலைவர்
PROF. BRAHMASRI. P. GOPALAKRISHNA IYER
B.A. (Hons)Cey, Ph.D (Jaff.)
பேராசிரியர் பிரம்மஸ்ரீ.
ப. கோபாலகிருஷ்ண ஐயர்.

**SECRETARY** / செயலாளர்
BRAHMASRI. S. PADMANABAN
B.A. (Hons.) (Jaffna)
பிரம்மஸ்ரீ.ச. பத்மநாபன்.

**TREASURER** / பொருளாளர்
BRAHMASRI. S. KRISHNANANDA SARMA
B.A. (Hons.) (Jaffna)
பிரம்மஸ்ரீ. ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா

**MEMBERS**/ உறுப்பினர்கள்
BRAHMASRI. N. SATHASIVA IYER
பிரம்மஸ்ரீ. ந. சதாசிவ ஐயர்
BRAHMASRI. R. KUMARASWAMY SARMA
B.A. (Cey.)
பிரம்மஸ்ரீ. இ. குமாரசுவாமி சர்மா
BRAHMASRI. S. RAVEENDRA SARMA
B.A. (Cey.)
பிரம்மஸ்ரீ. சி. இரவீந்திர சர்மா
BRAHMASRI. K. LAKSHMANA SARMA
பிரம்மஸ்ரீ. க. இலட்சுமண சர்மா

Date: 19.07.2005

ओम्

आप्यायन्तु ममाङ्गानि वाक् प्राणः चक्षुः ।
श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि ॥

विशेष कुम्भाभिषेक पुण्य महोत्सव दिनेषु
आचार्य पदवीं निर्वहन् निगमोक्त क्रिया
कलाप निरतः, भक्तजन हृदयकमल
विकासनिदानभूतः,
शिवश्री नटराज रुद्रमूर्ति गुरुः श्रीरत्नावली दम्पत्योः
श्री वल्ली देवसेना समेत श्री शिव सुब्रह्मण्य परमेश्वर
पादाब्ज निरन्तर स्मरण परिपूतस्वान्तः,
सुब्रह्मण्य आलयसेवा समाचरण समुत्सुकः,
समाशान जीवी आरोग्यवान् दृढगात्रश्च
पार्वती कुमारं प्रार्थयामहे ॥

शुभम्

பேராசிரியர். கா. கைலாசநாதக்குருக்கள்
ஞாபகார்த்தசபை
சிவன் கோவில் நல்லூர்
யாழ்ப்பாணம்
19.07.2005

ॐ

# नियन्त्री நியந்த்ரீ NIYANTRIE

சிவன் கோவில், நல்லூர் . யாழ்ப்பாணம்

19.07.2005

காப்பாளர்
பேராசிரியர்
பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள்

தலைவர்
பேராசிரியர்
பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்

செயலர்
பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர்

பொருளாளர்
பிரம்மஸ்ரீ சு. ஸ்ரீதர ஐயர்

आमां मेधा सुरभिः विश्वरूपा
हिरण्यवर्णा जगती जगम्या ।
ऊर्जस्वती पयसा पिन्वमाना
सामां मेधा सुप्रतीका जुषन्ताम् ॥

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா நாயகர்களான சிவஸ்ரீ நடராஜ உருததிரமூர்த்திக் குருக்கள் ஸ்ரீரஞ்சனி அம்மா தம்பதிகளுக்கு நியந்த்ரீ அன்னையின் அருளால் சகல வளங்களும் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

சைவமரபும் தமிழ்மொழியும் வாழுகின்ற இணுவையம்பதியில் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் பாரம்பரிய குருவாக விளங்கி சைவத்தையும் தமிழையும் செழித்து ஓங்கச் செய்துகொண்டு சிவபுண்ணியச் செயல்களைக் கடமையாகக் கொண்டு வாழுகின்றவர்கள் விழா நாயகர்கள். தம் புதல்வர்களையும் இறைபணியில் வளர்த்தெடுத்து சிவாச்சார்ய பாரம்பரியத்தை வளரச் செய்பவர்கள். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய சிவஸ்ரீ குருக்கள் தம்பதியினரின் ஷஷ்டியப்தபூர்த்தி சாந்திவிழா சிறப்பாக நடைபெறவும் தம்பதிகளும் அவர்தம் சந்ததியினரும் மண்ணில் நல்லவண்ணம் வாழவும் நியந்த்ரீ தேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

நியந்த்ரீ
சிவன்கோவில்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**வல்வை சிவன்தேவஸ்தான பிரதமகுரு**

**கிரியா க்ரமஜோதி, கிரியா கலாப முக்தாமணி**

**பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள்**

**வழங்கிய**

# வாழ்த்துரை

வாகரத்தாவிவ சம்பிறுக்தௌ வாகர்த்தப் பிரதிபத்தயே
ஜகதப் பிதரௌ வந்தே பார்வதி பரமேஸ்வரௌ

அறுபதாவது வயதில் பிறந்த வருஷம், பிறந்த மாதம், பிறந்த நட்சத்திரம் ஆகிய மூன்றும் மீண்டும் கூடி ஆளுமை பண்ண முற்படுவதால் இதற்காக விசேட ஹோமம், பூஜை ஆகியன செய்து மகிழ்வதே ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி ஆகும்.

சிவாச்சார்ய மரபிலே அறுதொழில்களையும் மேற்கொண்டு சிறப்பாக மக்களின் நன்மதிப்பை பெற்றவர்களுள் ஒருவராக விளங்குகின்றார். இவ்வாறாக அறுபது அகவையிலே மீண்டும் புதுவாழ்க்கை வாழப் புகுகின்ற சிவஸ்ரீ உருத்திரமூர்த்தி குருக்கள் தம்பதியினரை கந்தன் திருவருளினால் சகல செல்வங்களுடனும் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல வாலாம்பிகை பாகர் வைத்தீஸ்வரன் தாள் பணிந்து அவர் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

## இணுவில் கந்தசுவாமி கோயில்

### தர்மகர்த்தா சபையின்

# வாழ்த்துரை

இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களில் ஒருவரான சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி (மணிவிழா) மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.


சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் கந்தசுவாமி கோயில் பரம்பரைப் பூசகர்களில் ஒருவர். ஆகமவிதிகளுக்கு அமைய கோயில் விழாக்கள், பூசைகள் நடைபெற வேண்டும் என்ற விருப்பமுடையவர். நாளாந்தம் நடைபெறும் நைமித்திய பூசைகள், பெருவிழாக்கள் (மஹோற்சவம், கந்தஷஷ்டி) செவ்வனே நடைபெறப் பேருதவி புரிபவர். தேவஸ்தானம் அபிவிருத்தியடைவதற்கு அவரும் குடும்ப உறுப்பினர்களும் அயராது உழைப்பவர்கள். 2001ஆம் ஆண்டு கோயில் புனரமைப்பு நடைபெறுகையில் வசந்த மண்டபத்தைப் புதிதாக அழகுற அமைப்பதற்கு அவரும், பிள்ளைகளும் தமது சொந்தப் பணத்தில் பல இலட்சம் ரூபா செலவு செய்துள்ளார்கள். காலத்துக்குக் காலம் திருத்த வேலைகளையும் செய்து வருகின்றார்கள். அவர்களின் பணி பாராட்டப்பட வேண்டும்.

நொச்சியம்பதியில் வீற்றிருக்கும் முருகன், சண்முகர், சாந்தியடியான் (வயிரவசுவாமி) மீது மிகுந்த பக்தியுடையவர். கோயில் நிருவாகம் செவ்வனே நடைபெறப் பூரண ஒத்துழைப்பு வழங்குபவர்.

குருக்கள் ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து பவளவிழா, நூற்றாண்டு விழாக் காண வேண்டுமென எல்லாம் வல்ல கந்தப் பெருமானையும் வயிரவப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

# இணுவில்
# கந்தசுவாமி ஆலய
# விளாத்தியடி வைரவர்







இணுவில் மேற்கு,
ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார்
ஆலயம்
(பருத்திப் பிள்ளையார்)

**இணுவில்**

**செகராச சேகரப் பிள்ளையார்**

**(பருத்திப் பிள்ளையார்)**

**ஆலய அறங்காவலர் சி. சுந்தரலிங்கம் வழங்கும்**

# வாழ்த்துச் செய்தி

இணுவில் கந்தசுவாமி கோவிலின் பரம்பரைப் பூசகர்களில் ஒருவர் சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள். இவர் இணுவில் செகராச சேகரப் பிள்ளையார் ஆலயத்தின் பூசகராகவும் சிவப்பணியாற்றி வருகிறார்.

குருக்களையா அவர்கள் ஆசாரப் பொலிவும் உருவப் பொலிவும் பக்திப் பொலிவும் மிக்கு விளங்குபவர். இணுவில் கந்தசுவாமி கோவிலின் வசந்த மண்டபத்தைப் புனர்நிர்மாணம் செய்வித்தவர்.

இவர் அருட்கீர்த்தி மிக்க நடராஜக் குருக்களின் சிரேஷ்ட புதல்வராக விளங்குபவர். இவரது குடும்பமும் பரம்பரையும் ஆலயப் பூஜைத் திருத்தொண்டுக்கே தம் வாழ்நாளை அர்ப்பணித்து அறநெறியில் வாழ்பவர்கள்.

இந்தவகையில் தமது அறுபதாம் அகவையை நிறைவுசெய்யும் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் இன்னும் பல தசாப்தங்கள் வாழ்ந்து தம்மையும் தம் வாரிசுகளையும் சிவ கைங்கரியங்களில் ஈடுபடுத்தி மேம்படவேண்டுமென இணுவை செகராச சேகர விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்தி நிற்கிறேன்.

உடுவில் கிழக்கு

ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் ஆலய

பரிபாலனசபையின்

# வாழ்த்துரை

பனை வளங்களும், பச்சைப்பசேல் என்ற தோட்ட நிலங்களும் சூழ இருக்கின்ற ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் இரண்டு தசாப்த காலமாக நித்திய நைமித்திக பூஜைகளில் சிறப்பாகப் பணியாற்றிவருகின்ற சைவமும் தமிழும் நிலைத்து இருக்கின்ற இணுவையம்பதி வாழ் பிரம்மஸ்ரீ நடராசக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்களின் மணிவிழாவை ஏற்று அவரின் சிவாச்சாரிய பணி எமது ஆலயத்திற்கும் ஈழ மண்ணுக்கும் என்றும் கிடைக்க வேண்டும் என்றும் எல்லா நலன்களும் அவருக்கு அருள வேண்டுமென்றும் கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம். இவரின் முயற்சியால் எமது ஆலயத்திற்குச் சித்திரத் தேர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.




உடுவில் – இணுவில்
கற்பகப் பிள்ளையார் ஆலயம்



குப்பிழான், கற்கரை
கற்பக விநாயகர் ஆலயம்

குப்பிழான், கற்கரை கற்பக விநாயகர் ஆலய
கும்பாபிஷேகத்தின்போது விழா நாயகர்



குப்பிழான்

**கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில்**

பரிபாலனசபையினரின்

# வாழ்த்துச் செய்தி

"பாரிசைப் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசைகேட்டு
வேலிமலி பொழிற்கிண்ணை வேதங்கள் பொருள் சொல்லும்"

சீர் இணுவைப் பதியின் தெய்வமறைநாவர் குலக் கொழுந்து ஆய சிவஸ்ரீ நடராஜ.உருத்திரமூர்த்திக் குருக்கள் மணிவிழா நாயகனாதலறிந்து பெரிதும் பூரிப்படைகின்றோம்.

எமது ஆலயத்துடனாய தொடர்பு இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு மேலானது. இருபதாண்டைப் பருவத்துக் கட்டிளங் காளையாகத் தந்தையுடன் வந்த தனயன் 1974இல் சிவாச்சார்யபிஷேகம் பெற்று, 1975 இல் முதலாவது மஹோற்சவக் குருத்துவத்தை நிகழ்த்திப் புகழீட்டியவர்.

ஆழ்ந்தகன்ற புலமையும், சிவாச்சார்ய சிரேஷ்டர்களின் ஸஹாயஸம்பத்தும், எத்திக்கும் மெச்சப்பேசும் பத்தித்திறமும் அமையப்பெற்ற பெருந்தகை எமது குருக்கள் எனல் வெள்ளிடைமலை. ஸர்வ போதகாசாரியாராக இருந்து பல கும்பாபிஷேகங்களையும் மஹோற்சவங்களையும் ஆற்றிய அனுபவமுடையவர்.

2001இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகம், 2002இல் நடைபெற்ற இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் என்பவற்றில் மைத்துனர் சிவஸ்ரீ குமாரராஜக்குருக்கள் தலைமையில் பிரதம சிவாச்சாரியாராகக் கடமை புரிந்து பெரும் பணியாற்றியவர்.

குருக்கள் ஐயா தம்பதிகளும் அவர்கள் சந்ததியாரும் நீடூழி காலம் தழைத்தோங்கி வாழ வேண்டும் என வேண்டுவார் வேண்டுவன யாவுமளித்தருளுங் கற்பகனை வேண்டுகிறோம். வேண்டுதலும், வாழ்த்தும் சுயநலஞ்சார்ந்துதான். குருக்களும், மைத்துனர் குமாரராஜக்குருக்களும் எமது ஆலயத்தின் பணிகளிலிருந்து இப்போ விலகியிருந்தாலும் இவர்களுக்காக ஆலயக் கதவுகள் அகலத்திறந்திருக்கும் என்பதில் ஐயமேயில்லை.


**வேலணை, சிற்பனை**
**முருகன் ஆலய**
**பரிபாலனசபையினரின்**

# வாழ்த்துரை

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப"
(தொல்காப்பியம் - நூற்பா 1434)

மறைமொழியாகிய மந்திரங்கள் நிறைமொழி மாந்தரால் சொல்லப்படுபவன. நிறைமொழி மாந்தர் வரிசையில் வைத்து எண்ணப்படும் தகைமை வாந்தவர் இன்று நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள். ஐயா அவர்களின் 60ஆவது அகவை பூர்த்தி விழா (வைரவிழா) மலருக்கு வாழ்த்துரை வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு சபை பெருமகிழ்வு கொள்கின்றது.

இவர் எம் சிற்பனை வேலவனின் அருளால் ஆட்கொள்ளப்பட்டதுடன் எம் கிராம மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் ஆட்பட்டவர். மஹோற்சவங்கள் விசேட திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் பல சிக்கல்கள் மத்தியில் எம் கிராமத்தில் தங்கியிருந்து நம்மோடு வாழ்ந்து வரும் குருக்கள் ஐயா சமுதாயத்திற்கும் நல்ல தொண்டுகள் ஆற்றி இனிது நீடு புகழுடன் வாழ எல்லாம் வல்ல சிற்பனை வேலவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.



வேலணை, சிற்பனை
முருகமூர்த்தி ஆலயம்



சுதுமலை வடக்கு,
ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயம்

**சுதுமலை, ஈஞ்சடி**

**ஞானவைரவர் ஆலய**

**தர்மகர்த்தா சபையின்**

# வாழ்த்துச் செய்தி

மணிவிழாக் காணும் சிவஸ்ரீ நடராஜ உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறோம். எமது ஈஞ்சடி வைரவர் ஆலயத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக பூசை, திருவிழாக்களைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். அவருடைய சிறப்பான பூசைகள் எம்மை ஆலய வழிபாட்டிலே ஈடுபட வைக்கின்றது. அந்த வகையில் அவரது விழா சிறக்கவும் அவரது பணி எமது மக்களுக்கும் எமது ஆலயத்திற்கும் மென்மேலும் பல ஆண்டுகள் கிடைக்கவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

## இணுவில் கந்தசுவாமி கோவில்
## இளந்தொண்டர் சபையின்
# வாழ்த்துச் செய்தி

இணுவை முருகப் பெருமான் மீது ஆராத மெய்யன்பு கொண்ட அந்தணக் குடியொன்றின் வழித்தோன்றலாகவும் மேற்படி ஆலய பூசகர் பரம்பரையின் ஒரு வாரிசாகவும் விளங்குபவர் சிவஸ்ரீ நடராசக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள்.

அமைதியும் அடக்கமும் சைவாசாரமும் குடிகொண்ட சிவச்செல்வராகிய உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் இணுவைக் கந்தன் ஆலயப் பூசைக கைங்கரியங்களிலும் உற்சவங்களிலும் ஈடுபாடு கொண்டு விளங்குவது போல் இணுவில் கந்தன் இளந்தொண்டர் சபையின் கலை, கல்வி, வளர்ச்சி சமய நிகழ்ச்சி சமூக செயற்பாடுகளுக்கெல்லாம் உறுதுணை புரிந்து வருபவர்.

அவர்தம் பூசைப்பணி, திருப்பணிகள் மக்கள் பணிகளோடு அறுபது அகவையை எட்டியுள்ளன. இவ்வேளையில் இன்று போல் என்றும் பல்லாண்டு வாழ்கவெனவும் பவளவிழா, அமுதவிழா கண்டு மகிழ வேண்டும் எனவும் எமது இளந்தொண்டர் சபை வாழ்த்திக் கந்தக் கடவுளை வேண்டி நிற்கின்றது.

இணுவில், ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

தெற்குவாசல் இராஜகோபுரம்



இணுவில்

அறிவாலயத் தலைவர், எவறெஸ்ற் கல்விநிலைய இயக்குநர்

திரு.இராசா.பாலச்சந்திரன் வழங்கிய

# வாழ்த்துரை

உன்னத மறையும் உயர்கலையும் மலிந்தோங்கும் இணுவையம்பதியில் மகிமையும் பெருமையும் பொருந்திய இணுவைக் கந்தன் திருத்தலத்தில் ஆத்மீகப்பணியையும் அறத்தொண்டையும் உள்ளத்தாலும் உணர்வாலும் சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஐயா இடையறாது ஆற்றி வருகின்றார்.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுரையை ஒழுங்காகவும் உணர்ந்து கோயில் பூசைகளை ஒழுங்காகவும் உரிய காலத்திலும் நடத்தி ஊரையும் உறையுள்களையும் செழித்து வைத்து வருகின்றார்.

சைவசமய ஆசாரஅனுட்டானங்களை ஆன்மார்த்த, பரார்த்த வழிபாடுகளை ஆற்றி எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றியைப் பெறுவதற்கு குருவாய் நின்று அருள்கின்றார்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெல்லாவுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற பொய்யாமொழிப் புலவர் வாக்கிற்கிணங்க மக்களையும் மற்றைய உயிர்களையும் மதிக்கும் பண்புடையவராக விளங்குகின்றார்.

அன்பு, அறம், அடக்கம், ஒழுக்கம், வாய்மை, நேர்மை, தூய்மை நிறைந்த குருக்கள் ஐயா அறுபது வயதிலும் பத்தி என்ற வித்தை விதைத்து உரமூட்டி உலாவி வருகின்ற காட்சி மாட்சியளிக்கின்றது. ஐயாவின் புன்முறுவல் பூத்தமுகமும், பொலி திருநீறும் மறைபேசும் திருவாயும் பூணூல் தாங்கும் திருவுடலும் இளமையை வளர்க்கும் திருவுள்ளமும் கண்டு அகமிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மகத்தான அறிவும் ஆற்றலும் ஆழ்ந்த அனுபவமும் பெற்ற குருக்கள் ஐயாவின் சேவை என்றும் இந்த இணுவையம்பதிக்கும் மக்களுக்கும் தேவை. அவரது பணி நூற்றாண்டுகள் தொடர முருகப்பெருமான் துணை புரிய வேண்டும் என வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுதுமலை, சுஞ்சடி

நாவலர் பாலர்பாடசாலை

நிர்வாக சபையின்

# பாராட்டுச் செய்தி

மணிவிழாக் காணும் சிவஸ்ரீ நடராசக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களின் மணிவிழா மலருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றோம். எமது சிறுவர் முன்பள்ளியின் வளர்ச்சியில் ஆலோசனைகள் வழங்குவதுடன் நடைபெறும் விழாக்களிலும் கலந்து ஆசியுரை வழங்கி எம்மையும் எமது பாடசாலையையும் வளர வாழ்த்துபவர். இன்று மணிவிழா காண்பதையிட்டு எமது சபையினரும் மகிழ்வடைகின்றனர். இவரது பணி சிறக்க எமது பாராட்டுக்கள் உரித்தாகுக.

சுதுமலை, சுஞ்சடி

நாவலர் சனசமூக நிலைய

நிர்வாக சபையின்

# வாழ்த்துப் பா

கந்தனுக்கு மூத்தவனே கணபதியே கற்பகமே
சிந்தனையிற் தூயவெம் குருக்களையா - சந்ததமும்
நந்தாப் புகழோடு நாநிலத்தில் வாழ்ந்திருக்கத்
தந்திமுக னேயருள்வாய் கனிந்து

அகவை அறுபதில் அகமகிழும் எங்கள்
குகனருள் உருத்திரமூர்த்திக் குருக்களையா
இகபர இன்பமெல்லாம் ஈடில்லாது பெற்றுச்
சகத்தினிற் சிறந்து வாழ்க பல்லாண்டே

சிவனருட் செல்வனாய் சீருயர் பணிசெய்யும்
தவமுடைய சிவநெறியாளனாம் குருமூர்த்தி
பவவினை மாற்றும் பார்வையாளன் மண்மேல்
நவமோங்கி வாழியவே பல்லாண்டு வாழியவே

வயிரவப் பெருமானின் பூசையால் அருளதைத்
தயிரினுள் நெய்யாய்க் கடைந்து தருகின்ற
உயிரினும் இனியவெம் குருக்கள் ஐயாவே
பயிரோங்கி வளருமாறு செழிப்புறுவீர் வாழியவே

கருணையின் இருப்பிடமே அடக்கத்தின் தாயகமே
அருளோங்கும் அநதணப் பெரியோய் சிறப்புடனே
அருநோக்கால் அடியாரை அணைக்கின்ற சிவநெறியே
இருமையும் இன்பமுற அடிபணிந்து வாழ்த்துவமே.

சுபம்.

### இணுவில்

### A.T.C கல்வி நிலையத்தினரின்

# வாழ்த்துரை

"அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்"

என்ற முதுவாக்குக்கு அமைவாக இணுவில் கந்தன் ஆலயத்தின் பிரம சிவாச்சாரியராக இருந்து வருகின்ற எமது ஐயா அவர்கள் குருகுலத்தின் ஒரு மணிவிளக்கு எனும் அளவுக்கு உள்ளத்தால் உயர்ந்த உத்தமர். வேதம் ஓதிய வேதியர்க் கோர் மழை என்ற உண்மைத் தத்துவத்துக்கு அமைவாக ஐயா அவர்கள் யாழ்.மாவட்டத்தின் பல இந்து ஆலயங்களில் தனது பணிகளை பல்வேறு காலங்களில் மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. அவரது நற்பண்புகளுக்கு அமைவாக அவரது புதல்வலர்களில் மூத்தவரான அபராஜிதக் குருக்கள் ஐயா இன்று தனது குறைந்த வயதில் பல ஆலய கிரியைகளையும் பூசைகளையும் மஹோற்சவங்களையும் மேற்கொண்டு வருவது

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காட்டப்படும்" என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைவான ஓர் உண்மையாகும். அம்மாவும் அவருக்குப் பொருத்தமான ஓர் இல்லத்தரசியாக வீற்றிருப்பதும் பெருமைக்குரியது. தனது 60ஆவதது வயதில் மணிவிழாக் காணும் ஐயா மேலும் பல ஆண்டுகள் தனது குடும்பத்தாரோடு வாழ்ந்து ஆலய கருமங்களை இனிதே மேற்கொள்ள வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

### இணுவில் மத்திய கல்லூரி

### பாடசாலைச் சமூகத்தினர் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது பெரியோர் வாக்கு. ஆலயமும் பாடசாலையும் ஊரின் இரண்டு கண்கள். சிறார்கள் அறிவைப்பெறப் பாடசாலை பெரிதும் பயன்படுவதுபோல பண்பைப் பெறக் கோவில்களே துணைசெய்கின்றன.

அவ்வண்ணம் நமது இணுவில்பதி மாணவர்கள் நமது பாடசாலையில் கல்வியறிவைப் பெறும் அதேநேரம் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உணர்ந்து சிறந்து வாழ்வதற்கு இணுவில் கந்தசுவாமி ஆலயம், இணுவில் செகராச சேகரப் பிள்ளையார் ஆலயம் முதலிய ஆலயங்களினூடாக நற்பணியாற்றி வருபவர் நமது பெருமதிப்புக்குரிய உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள்.

அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் அனுபவ முதிர்ச்சியும் பெற்றிருக்கும் எங்கள் குருக்களையா அவர்கள் எமது ஊர்மக்களை இன்றுபோல இன்னும் பல்லாண்டுகாலம் தொடர்ந்து வழிநடத்திச் சிறந்து வாழவேண்டுமென வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**இணுவில்**

**உயர்திரு செ.சோதிப்பெருமாள் ஜே.பி**

**அவர்களின்**

# வாழ்த்துரை

இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களில் ஒருவரும் என்னிடம் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் (இணுவில் இந்துக் கல்லூரி) கல்வி கற்றவருமான சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா (மணிவிழா) மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

குருக்கள் ஐயா அவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் பெரியோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடம் பயபக்தியாக நடந்தவர். கல்வி கற்பதில் மிகுந்த ஊக்கமுடையவர். மாணவப் பருவத்தில் சகல மாணவர்களுடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகியவர். தண்டனைகளுக்கு பயந்தவர். மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடந்தவர்.

இணுவில் கந்தசுவாமி கோவில் நிர்வாகத்தினருடன் ஒன்றுபட்டு உழைத்து வருபவர். நல்ல ஆலோசனைகளை வழங்குபவர். அன்னார் நீடூழி காலம் வாழ்ந்து இணுவில் கந்தப்பெருமானுக்குத் தொண்டுகள் செய்யவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இணுவில்

திரு. க. தேவராஜா

(யாழ்.பல்கலைக்கழக

வணிகத்துறைத் தலைவர்)

வழங்கிய

# வாழ்த்துரை

எங்கள் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இணுவைக் கந்தனைத் தினம் பூசிக்கும் பேறுபெற்ற குருக்கள் ஐயா அவர்கள் வாழ்வில் சகல செல்வங்களையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து வருவதைக் கண்டு பெருமை கொள்பவர்களின் நானும் ஒருவன்.

நான் சிறுவயதியிலிருந்தே குருக்கள் ஐயா அவர்களை அறிவேன். எனது தந்தையாருடன் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் கந்தசுவாமி கோவிலுக்கு வரும்போதெல்லாம் ஐயாவைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. வளரும் பயிரை முளையில் தெரியும் என்பது போல் பிற்காலத்தில் சமயக் கிரியைகளில் பாண்டித்தியம் பெறக்கூடியவர் என்பதை இளமைப் பருவத்திலேயே தெரிந்து கொள்ள முடிந்தது.

சிவஸ்ரீ உருத்திரக் குருக்கள் அவர்கள் ஆலயத்தின் பிரதம குருவாக மாறியபோதும் அவரது பண்பு குறைவடையவில்லை. சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரை எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். எத்தகைய சந்தேகங்களை நாம் கேட்டாலும் அதற்கு அடக்கமாக விளத்தைத் தருவதுடன் எம்மை எந்த நடவடிக்கையிலும் மனங்கோணாதிருக்கப் பார்த்துக் கொள்வார். அவர் எப்போதுமே நேர்கணியமாக விடையளிப்பவர் என்பதினால் ஊர்மக்களுடன் கண்ணியமான உறவைப் பேணி வருகின்றார் என்பதனைத் தெரிவிப்பதில் பூரிப்படைகின்றேன்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது போல் ஐயா அவர்களின் குடும்பமும் சகல துறைகளிலும் முன்னேறி வருவதனைக் கண்டு நாம் பெருமை கொள்கின்றோம். இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் ஐயா அவர்களின் குடும்பம் கிளைகளைப் பரப்பியுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றிற்கிணங்க ஐயா அவர்களின் பிள்ளைகள் அவரின் பெயரை மேலும் துலங்க வைப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆதலால் ஐயா அவர்கள் நல்ல உடல்நலத்துடனும் சமூகப் பெருமையுடனும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென எல்லாம்வல்ல முருகப் பெருமானை இறைஞ்சிநிற்கின்றேன்.

**இணுவில்**

**இரா.சுந்தரலிங்கம்**

**(முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் )**

**அவர்களின்**

# வாழ்த்துரை

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருவிடம் இணுவையம்பதி. சான்றாண்மைச் செம்மல்கள் மலிந்த இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த வாழும் பெரியார்களில் மணிவிழாக் காணும் உருத்திரமூர்த்திக்குருக்கள் கணிப்பிற்குரியவர்.

குமாரசாமிக் குருக்களின் மைந்தன் நடராசக்குருக்கள். குமாரசாமிக் குருக்களின் பவுத்திரன் மணிவிழாக் காண்பது நல்லதோர் எச்சத்திற்கு எடுத்துக்காட்டாகும். மேன்மைகொள் சைவநீதி மண்ணில் சிறந்து விளங்கின் வான்முகில் வளாது பெய்யும். மலிவளம் சுரக்கும். கோன்முறை அரசு ஓங்கும். குறைவிலாது உயிர்கள் வாழும்.

மருத நிலப்பரப்பில் நொச்சியம்பதியில் இச்சாசக்தியும், கிரியா சக்தியும், ஞானவேலுடன் இணைய இலங்குவது இணுவை. ஆசார சீலர் அந்தணப் பெரியோர் குமாரசாமி ஐந்துமுறை அழகன் முருகனைத் தங்கச் சிலை வடிக்க முயன்று தோல்வி கண்டார். ஆறாவது முறையாக மாங்கல்யம் கௌடப்பொருளாக கொடியவள் இருவர் குலக்கொழுந்தை வடிவமைப்பித்த பெருமை குமாரசாமிக் குருக்களைச் சாரும்.

அவ்வழித் தோன்றல் உருத்திரமூர்த்திக் குருக்கள் மாசற்ற அந்தணனாய் தேசுற்ற முருக சேவைப் பெரியோனாய் எம்மிடை வாழ்தல் பெருமைக்குரியதே. கண்ணப்பன் கண்ட இறையொன்றிப்பும், அருணகிரி மேவிய தீந்தமிழ்ச் சுவையும், நக்கீரனை ஆற்றுப்படுத்திய அறநெறியும் ஈழத்துத் திருவாரூர் மேய கந்தசுவாமி குடிகொண்டிருப்பது எமது பிறவிப்பயனே.

கார்த்திகை மாதரால் கட்டுண்ட தெய்வம் எங்கள் சொத்தாக பூசாகிரியைப் பணியால் அணிசெய்யும் உருத்திரமூர்த்திக் குருக்கள் வாழையடி வாழையென தெய்வீகப் பணியில் திளைக்க வேண்டும். அப்பணியால் அல்லல் அறுத்து ஆனந்தமாக தொல்லையிரும்பிறவிச் சூழலும் தளைபோக்கும் சேந்தன் சேவற் கொடியோன் பாதார விந்தம் பசும்பொன் ஒளிர எம் பாவவினைகள் பரிதிமுன் பனிபோலாகும்.

நற்பணி நாயகன் அந்தணப் பெரியோன் ஆச்சாரிய வள்ளல் இச்சகத்தில் நல்ல வண்ணம் வாழ குருநாதன் அருள்மழை பொழிய வழுத்துவாம்.

## இணுவில் மேற்கு கிராம அலுவலர்

## திரு க.இரவீந்திரன்

### அவர்களின்

# வாழ்த்துரை

திருக்கோயில்கள் நிரம்பப் பெற்றதும் சிவநெறியும் அருள்நெறியும் தழைத்தோங்குவதும் கவின்கலைகளுடன் பண்பாட்டுச் சிறப்புக்கள் கொண்ட பதியாக விளங்குவது இணுவையம்பதி. இப்பதியில் மஞ்சத்தால் பெயர்பெற்ற முருகப்பெருமான் கோயில் கொண்டிருக்கிறார். இவ்வாலயத்தில் பிரதமகுருவாகவும், பூசை வழிபாடுகள் ஆற்றி வருபவருமாகிய பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஐயா அவர்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு நடைபெறும் மணிவிழாவிற்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் காசிப கோத்திரத்தைச் சேர்ந்தவரும் இவ்வாலயத்தின் மரபுவழிக் குழுக்களும் பூசகருமாக இருந்து வந்த பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் நீலம்மா தம்பதிகளின் பேரனும், பிரம்மஸ்ரீ நடராசக்குருக்கள் இரங்கநாயகி அம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வருமாவார். இவர் இளமைக் கல்வியை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றுத் தேறினார். அத்துடன் வேதசிவாகமங்களையும் உரியவர்களிடம் கற்று குருப்பட்டம் பெற்றார். இவர் நல்லொழுக்கப் பண்புகள் மிக்கவர். இவருக்கு இரு சகோதரிகள் உளர். மூத்த சகோதரி தேவசேனா அம்மா குமாரராசக் குருக்களையும், இளைய சகோதரி ரஞ்சிதமணி அம்மா பரராசசேகரப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு சோமாஸ்கந்தக் குருக்களையும் திருமணம் செய்து கொண்டனர். பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஐயா அவர்கள் தெல்லிப்பளையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் செண்பகலட்சுமி அம்மா தம்பதிகளின் இரண்டாவது மகள் ரஞ்சினி அம்மாவை 1967ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். இவர்களது இல்லறம் சிறக்க அபராஜிதக் குருக்கள், ஆதித்தியக் குருக்கள், அபர்ணாதேவி, அனந்தமூர்த்தி சர்மா ஆகியோரை நன்மக்களாகப் பெற்றெடுத்தார். முறையே மாதினியம்மா, சுபத்திரா அம்மா, கமலநாதக் குருக்கள், ராஜினி அம்மா அவர்கள் நன்மருமக்களாகப் பெற்றுக் கொண்டார்.

பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்தி ஐயா அவர்கள் ஊர்மக்களிடம் அன்பாகப் பழகும் சுபாவமுடையவர். அதனால் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்ட ஒரு பிரதமகுருவுமாவார். அந்தணர் என்போர் அறவோர் என்ற வள்ளுவர் வாக்குக்கமைய வாழ்பவர். மக்களுக்காகவே ஆலயங்கள் அமைந்தன என்ற உண்மையைப் போற்றி மக்களுக்காக வழிபாடுகளைச் செய்தும் குடமுழுக்கு முதலிய திருப்பணிகளை செய்தும் வருகின்றார். இணுவில் கந்தசுவாமி கோவிலுடன் அவரது சிவப்பிணி நின்றுவிடவில்லை. இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோயில், உடுவில் கற்பக விநயகர் கோயில், சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோயில், வேலணை முருகமூர்த்தி கோயில் ஆகிய கோவில்களிலும் அவரது பணி பரந்து நிற்கின்றது. இணுவில் கந்தசுவாமி கோவில் வசந்தமண்டபம், தேவசபை ஆகியன ஐயா அவர்களின் திருப்பணிக்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

இத்தகைய பெருமைகளை உடைய ஐயா அவர்கள் தோற்றத்திலும் சிவப்பிராம்மணராக சுந்தரக்குருக்களாகவே விளங்குகின்றார். அறுபது அகவையைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காண இருக்கும் பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஐயா அவர்கள் மணிவிழாச் சிறப்புறவும் மேன்மேலும் பல சிவப்பணிகள் புரிந்து வாழவும் எல்லாம்வல்ல இணுவைக் கந்தப் பெருமானின் அருள்வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**இணுவில்**

**பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**

**அவர்களின்**

# வாழ்த்துரை

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கின் நோக்கான செம்மை முழுமையாக வெளிப்படும் விதத்தில் வேதியர்க்கான ஒழுக்கம் பேணி வாழ்பவர்கள் சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் வம்சத்தினர். எல்லா உயிர்களிடத்தும் இரக்கமும் எல்லா மனிதர்களிடம் பணிவும் அடியவர்களின் ஆன்மீக ஒழுக்கத்தைப் பொறுத்தே அவர்களுக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கும் வாய்க்கப்பெற்றவர்கள் அன்னாரின் புத்திரர்கள். குறிப்பாக உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள். இளமை குன்றா மனத்தோடும், தோற்றத்தோடும் எளிமை ஒளிர, தெய்வீகம் ஒளிர, குருத்துவம் மிளிர வாழ்ந்துவரும் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் இன்று காணும் மணிவிழாவும் கடந்து பவளவிழா, அமுதவிழாக்களிலும் மெய்யடியார்களின் போற்றுதலும் ஏத்துதலும் பூசனையும் பெற வேண்டுமென இணுவை முருகன் இன்னடிகளை இறைஞ்சுவோமாக.

இணுவில்

வைத்தியகலாநிதி

கந்தையா பாலசுப்பிரமணியம்

வழங்கிய

# வாழ்த்துரை

நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் இராமாயணத்தைப் பற்றியும் ஓரளவு படித்திருந்தோம். இராமயண காவியத்தில் அயோத்தியா காண்டம் உள்ளது. அக்காண்டத்தில் முடிசூட இருக்கும் இராமருக்கு அவருடைய குலகுருவான வசிஷ்ட முனிவர் இராமருக்கு உபதேசம் செய்கிறார். அந்த உபதேசமானது செய்யுள் வடிவில் உள்ளது.

கரிய மாலினும் கண்ணுதலானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்

அதாவது வேதியர்கள் திருமாலை விடவும், பரமசிவனை விடவும், பிரம்ம தேவனை விடவும், பஞ்சபூதங்களை விடவும், சத்தியத்தை விடவும் மேலானவர்கள் என்று மிகவும் உறுதிபடக் கூறுகின்றார். மேற்கண்ட கவிதை அடிகள் இணுவில் கந்தன் ஆலய சந்ததிப் பூசகர் சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்களைக் காணும் போது எனக்கு நினைவிற்கு வருவதுண்டு.

அத்தகைய குருத்துவ பக்குவமும், ஆன்மீக உறுதியும் ஒழுக்கமும், அடக்கமும் மிக்க உருத்திரமூர்த்திக்குருக்கள் மணிவிழா காண்பதையிட்டு மிக மகிழ்ந்து உள்ளத்தால் பேணி வாழ்த்தி முருகன் கருணை முழுமையாக குருக்களவர்களுக்கும் அவரது வழித்தோன்றல்களுக்கும் கிடைக்க எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இணுவில்

முத்துக்குமாரு விஜயரகுநாதன்

(யாழ். போதனா வைத்தியசாலை கணக்காளர்)

வழங்கிய

# வாழ்த்துரை

இறையருளால் எல்லா வளங்களும் நிறையப் பெற்று ஏழிசை வாழ்ந்திடும் இனிய இணுவையம்பதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கந்தப்பெருமானின் திருமேனி தீண்டித் தினமும் பூசை செய்துவரும் வேத சிவாச்சார்ய வழித்தோன்றலில் வந்த பிரம்மஸ்ரீ நடராசக்குருக்களின் தலைமகன் உருத்திரமூர்த்திக் குருக்கள் அகவை அறுபது கண்டு அவருக்கு விழா எடுப்பதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். உருத்திரக்குருக்கள் என எல்லோராலும் அன்புரிமையுடன் அழைக்கப்படும் எமது குருக்கள் யாவருடனும் இன்முகத்துடன் பேசிப் பழகும் பண்புடையவர். பழக இனிய குருக்கள். பிராமண பண்பாட்டுக் கலாச்சாரங்களை சிரத்தையோடு பின்பற்றுபவர். தன் வழியில் தான் பெற்ற பிள்ளைகளையும் ஆசார சீலரகளாக, சிறந்த அர்ச்சகர்களாக, குருக்கள்களாக வழிப்படுத்தி நிறைவு கண்டுள்ளார். குருக்கள் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ வேண்டும். தம் பேரக்குழந்தைகள், பீட்டக் குழந்தைகளையும் வழிப்படுத்தி இணுவில் கந்தனின் நித்திய, நைமித்திக கிரியைகள் சூரிய, சந்திரருள்ளவரை சிறப்புற்றோங்கவும் இணுவில் திருவூர் என்றும் நிறை செல்வமாகத் திகழவும் எம் குருக்கள் பணிபுரிய வேண்டும். அவர்கள் ஆறுமுகப் பெருமானின் திருவருளால் எல்லா சௌபாக்கியங்களையும் பெற்று இன்புற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வேண்டும் என்று இணுவைக் கந்தப் பெருமானை வேண்டி வாழ்த்தி வணங்குகிறேன்.

**இணுவில்**

**கலாநிதி இ. விக்னேஸ்வரன் அவர்கள்**

**(யாழ். பல்கலைக் கழக,**

**விஞ்ஞான பீட, கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்)**

**வழங்கிய**

# வாழ்த்துரை

இணுவில் நொச்சியம்பதி கந்தப்பெருமானிற்குப் பூசை செய்பவரும் பிரதான குருக்களுமாகிய பிரம்மஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக்குருக்கள் அகவை அறுபது எய்தி அவருக்கு விழா எடுப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். உருத்திரமூர்த்திக் குருக்கள் எல்லோருடனும் இனிமையாகப் பழகும் பண்புடையவர். தன் வழியில் தான்பெற்ற புத்திரர்களையும் சிறந்த பூசகர்களாகவும் குருக்கள்களாகவும் வழிப்படுத்தி நிறைவு கண்டுள்ளார். இணுவில் கந்தனின் நித்திய பூசைகள், திருவிழாக்கள் என்பவற்றில் குருக்கள் பங்கேற்றுப் பணி புரிய வேண்டும். குருக்கள் அவர்கள் இணுவில் கந்தப்பெருமானின் திருவருளால் எல்லா சௌபாக்கியங்களையும் பெற்று இன்புற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று ஆறுமுகப்பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

இணுவில்

கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன் அவர்கள்

(பேராதனைப் பல்கலைக் கழக

தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்)

வழங்கிய

# வாழ்த்துரை

இந்துப் பாரம்பரியத்தினை வளர்த்தெடுப்பதிலும் அதனைப் பேணிக்காப்பதிலும் அந்தணப் பெரியோர்கள் நீண்ட காலமாக உழைத்து வந்துள்ளனர். கோயில் என்ற நிறுவனத்தினுடைய சங்காசாரங்களை நிறைவேற்றுவதிலும் சமூகத்தினுடைய சமய அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதிலும் அவர்களின் பணி காலம் காலமாக இந்து சமூகத்திற்கு கிடைத்து வந்துள்ளது. இந்த வகையில் இந்துப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்கும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் ஒன்றான இணுவைத் திருவூரில் குடிகொண்டிருக்கும் கந்தன் ஆலயத்துப் பூசகர்களான அந்தண சிரேஷ்டர்களின் பணியும் போற்றுதற்குரியது.

அநாதியான காலம் தொட்டுக் கோவில் பிரகாரத்தில் வாழ்ந்துவந்த அவர்கள் முப்போதும் திருமேனி தீண்டுவதை ஒரு சம்பிரதாயமாகச் செய்தவர்கள் அல்லர். அதனை அவர்கள் ஆத்மநேயத்துடன் செய்தவர்கள். கோவிலினதும் இணுவைச் சமூகத்தினதும் சமயவாழ்விலும் சமூகவாழ்விலும் உயர்விலும், தாழ்விலும் பங்கு கொண்டவர்கள். மந்திர உச்சாரணத்தை வெறும் வாய்ப்பாடாக அல்லாமல் ஆத்மீகத்துடனும், உயிர்த்துடிப்புடனும் நிகழ்த்தியவர்கள். அவ்வாறானதொரு மேன்மையுடைய மரபில் உதித்தவர் பிரம்மஸ்ரீ நடராஜக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் ஆவர். அவருடைய வேதஞானம், கிரியாநேர்த்தி, சடங்குகளை நிகழ்த்துவதில் காட்டும் ஆர்வம், ஆத்மீக ஞானம், சமூகத் தொடர்பு இவற்றுக்கும் மேலான மானிடநேயம் ஆகியவற்றால் அவர் "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்" எனும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாக வாழும் ஒருவராகத் திகழ்கின்றார். அவர் இன்று ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினைக் கொண்டாடுவதில் நாமெல்லாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். தனது பாரம்பரியமிக்க சந்ததியினரதும் தனதும் பணிகளைத் தொடர்வதற்கு சதுர்வேதிகளாகவும் கிரியாசிரோமணிகளாகவும், சமூக ஈடுபாடு கொண்டவர்களாகவும் தமது புதல்வர்களை உருவாக்கியுள்ளார். குறிப்பாக அந்தண சிரேஷ்டருக்குரிய பக்குவமும், பக்தியும், பணிவும், சமூக ஊடாட்டமும் மிக்க அவரது சிரேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ அபராஜிதக் குருக்களை இந்தப் பாரம்பரியத்தைப் பேணித் தொடரக்கூடிய இளந்தலைமுறையின் வாரிசாக உருவாக்கியுள்ளார். இவ்வாறான சீலம் மிக்க அந்தணப் பெரியார் பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்திக்குருக்கள் பவளவிழா, முத்துவிழா, சதாபிஷேக விழா ஆகியவை கண்டு பெருவாழ்வு வாழ வேண்டும் என்று இணுவைக் கந்தன் பாத கமலங்களைப் பணிகின்றேன்.

**இணுவில்**

**திரு ச.முத்துலிங்கம்**

**அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

பிரம்மஸ்ரீ ருத்திரமூர்த்திக் குருக்கள் பரம்பரை பூசகர்களின் ஒருவராகவும் அறங்காவல் குழுவில் அந்தணர்கள் சார்பில் ஒருவராகவும் செயலாற்றி வருவதோடு கடமையில், அறிவுடமையில் சகலரையும் அனுசரிக்கும் பண்பாடு கொண்டவராகவும் விளங்கிவருகின்றார். மேலும் இடைக்கால தர்மகர்த்தா சபையினரால் நடாத்தப்பட்ட குடமுழுக்கின்போது அன்னார் தெய்வகைங்கரியங்களில் எல்லோரையும் விட முன்னின்று உழைத்தவர். அக் கும்பாபிஷேகத்தை பிரம்மஸ்ரீ ருத்திரமூர்த்திக் குருக்களின் பெரியதகப்பனார் பிரம்மஸ்ரீ இராமநாதக்குருக்களின் மகன் பிரம்மஸ்ரீ ஸ்ரீதரக் குருக்கள் முதன்மைக் குருக்களாக நின்று செயலாற்றியபோது ருத்திரமூர்த்திக் குருக்களின் மூத்த மைத்துனர் பிரம்மஸ்ரீ குமாரராஜக்குருக்கள் இவ்வாலயத்தின் வடபால் அமைந்த வைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை பிரதானகுருக்களாக இருந்து நடாத்தி வைத்தார்.

மேலும் கும்பாபிஷேகத்தின் போது இவ் ஆலயத்திற்கு தொடர்புள்ள பரம்பரை குருக்கள்மார் அத்தனைபெயரும் கலந்து பிரதான கும்பங்களின் குருக்களாக இருந்து செயலாற்றியது இவர் இவ்வாலயத்தின் சிறப்பையும், பூசகர்களின் மதிப்பையும் உயர்த்தி காட்டியதே எம்மால் மறக்கமுடியாதொன்று. தொடர்ந்தும் இவ்வாலயத்தின் முன்னேற்றத்தில் தமது பங்களிப்புக்களையும், பொருட்களையும் கொடுத்து உதவிவருவது அவர்களுடைய நன்மதிப்பை எடுத்துக் காட்டுகிறது.

பிரம்மஸ்ரீ ருத்திரமூர்த்திக் குருக்களின் பிள்ளைகளும் கோவிலின் சிறப்பை விரும்பி செயலாற்றி வருவது கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார் என திருவள்ளுவரும் தம் உயிர்போல் எவ் உயிரும் தாம் எனவே நின்று உணரும் செம்மையர்க்கு ஏவலன்றி செய்வேன் பராபரமே என தாயுமானவரும் கூறிவைத்தனர். பிரம்மஸ்ரீ ருத்திரமூர்த்திக் குருக்களும், பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் நீடூழி வாழ எல்லாம்வல்ல முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

### இணுவில்

### திரு க.இரத்தினபூபாலன்

### (பெரியண்ணை) அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இறையருள் பரவ எங்கும் வேதஒலி ரீங்காரமிட்டு ஒலிக்க வேதாகம வித்தகர் எங்கள் இணுவையூர் தந்த தவச்செல்வர் திருவாளர் பிரம்மஸ்ரீ நடராசக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் அகவை அறுபது நிறைவு காண்பதற்காக தலைவாசலில் அருள்நகையுடன் கந்தசுவாமி வள்ளி, தெய்வானையுடன் வந்தருளியுள்ளார். கந்தக்கடவுளை அகவழிபாட்டாலும், மலர்தூவி மந்திர வழிபாட்டாலும், ஞானப்பழத்தைப் பெற்ற ஐயாவே நிலநோக்கும் என்பார்வையில் உங்கள் ஞானஉருவம் தெரியுதையா. கந்தவேள் அன்னை சிவகாமி, காசிநாதருடன் என்றும் அருள் ஆசி கொடுத்தருள அன்பன் நான் எனது இதய அன்புடன் வாழ்த்துகின்றேன். என்றும் இளமை, என்றும் ஆரோக்கியம், என்றும் அருள் கடாட்சம் கிடைத்தருள்வதாகுக.

**இணுவில்**

**திரு அ.குகதாசன் அவர்களின்**

**(யாழ்ப்பாணம் மக்கள் வங்கி**

**உதவிப்பிராந்திய முகாமையாளர்)**

# வாழ்த்துரை

பிரம்மஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் ஐயா இன்று அகவை அறுபதில் மணிவிழாக் காணுவதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். இணையில்லாச் சிறப்புக்களைக் கொண்டு மிளிரும் இணுவில் மாநகரிலே ஆதிகாலம் தொட்டு சைவமும் தமிழும் போற்றி வாழ்ந்த அந்தணர் மரபில் நடராசக் குருக்களின் மூத்த புதல்வனாய் இணுவிலில் பிறந்து நொச்சிக் கந்தனின் தாள் பணிந்து தங்கள் சேவையை அகிலமெல்லாம் பரப்பி நன்மக்களையும் ஈந்து தங்களின் அரும்பணி ஆற்றிட இணுவில் கந்தசுவாமி கோவில் ஆதீன பிரதம சிவாச்சாரியர்களையும் உருவாக்கி கந்தனின் அருள் கடாட்சம் மாத்திரமன்றி அருள்சேவை செய்து வரும் தங்கள் பணி தொடர்ந்தும் கிடைக்க எல்லாம் வல்ல நொச்சியம்பதியானும் சாந்தியானும் அருள்புரிய வேண்டி நிற்கின்றேன்.

வேலணை

திரு கந்தசாமி இளங்கோவன்

திருமதி சறோஜினிதேவி

தம்பதிகளின்

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் திகழ்ந்தோங்கும் யாழ்ப்பாணத்தின திலகமாகத் திகழும் எழில்சேர் இணுவில் பதியினை பிறப்பிடமாகக கொண்ட குருக்கள் அவர்கள் நாடு போற்றும் நல்லவராக சமய ஆசாரசீலராக வேதம் ஓதி வினைதீர்க்கும் வித்தகராக விளங்குவது எமக்கெல்லாம் மனநிறைவைத் தந்து நிற்கின்றது. இணுவிலில் பிறந்து வளர்ந்தாலும் வேலணையை தனது புகுந்த ஊராகக் கொண்டு கால்நூற்றாண்டு வேலணை மண்ணின் வாழ்வையும் வளத்தையும் தன் சமயப்பணியால் அருள்பாலித்தவர் எங்கள் குருக்கள் ஐயா அவர்கள்.

அன்னாரது சேவையைப் பாராட்டுவதற்குப் பல்லாண்டு காலம் தேகநலத்துடனும் சகல சௌபாக்கியங்களுடனும் நீடுழி வாழ்த்தி வணங்கி அமைகின்றோம்.

## இணுவில் தெற்கு

## திரு து. சிவராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் கமழும் இணுவையம்பதி வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும் வாழ்ந்த சிவபூமியாகி எமது மண் பெருமை பெற்றுள்ளது. பெருமை மிக்க இணுவையம்பதியில் வரலாற்றுப் புகழ் மிக்க இணுவைக் கந்தசுவாமி கோயிலில் நடராஜக் குருக்களின் சற்புத்திரரான பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் பிரதமகுருவாகப் பணிபுரிந்து அருளாசி வழங்கிவருவது சிறப்பான பணியாகும். எமது கிராமத்தின் ஆலயங்களிலும், அயற்கிராமத்து ஆலயங்களிலும் மஹோற்சவங்களை நிகழ்த்தி மக்களுக்கு அருளாசி வழங்கிவருவது எமக்கு பெருமை தருகின்றது.

இவரின் இறைபணிக்கு அயராது ஊக்கமளித்துவரும் இவரது துணைவியாரும் பிள்ளைகளும் எமது பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக இவரது சற்புத்திரர் பிரம்மஸ்ரீ அபராஜிதக் குருக்கள் இவ்வாலயத்தில் தந்தையாருக்கு உறுதுணையாக இருந்து இறைபணியாற்றி வருவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. தனது வாழ்வில் 60ஆவது அகவையை நிறைவு செய்து மணிவிழாக் காணும் பிரம்மஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களும் அவர்தம் குடும்பத்தினர்களும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக உடல் உள ஆரோக்கியத்துடன் இறைபணி ஆற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

### இணுவில்

### ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்

### திருநெறிய தமிழ் மறைக் கழகம்

### வழங்கிய

# வாழ்த்துப்பா

வேதியர் குலத்துத் தோன்றல் நடராஜக் குருக்கள் தந்த
சுந்தரனாம் உருத்திரமூர்த்தி ஐயா
ஓதியுயர் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
சீரிணுவைக் கந்தனுக்குப் பக்தியுடன்
வேதவொலி மந்திரங்கள் மணியோசை நாளுங்கேட்கப் பூசனைகள்
புரிந்து அர்ச்சனைகள் செய்யும்
அதியுயர் அந்தணரே மணிவிழாக் காணும் நாயகரே
வணங்கினோம் வாழ்த்தினோம் நீடுவாழி.

ஆலயப் பணிகளோடு அறப்பணிகள் பலவுமாற்றி மக்கள்
மத்தியில் நன்மதிப்பும் பெற்றோய்
சீலத்தில் உயர்ந்து நின்றோய் சிறப்புக்கள் பலவுங் கொண்டோய்
சீரியபணியால் இன்று மணிவிழாக் கண்டனை
காலத்தால் கந்தக் கடவுளின் அருளும் பெற்றாய் மறையான
நல்லறங்கள் பலபோற்றி நாளும் வாழி
ஞாலமதில் நன்மனையாள் ஸ்ரீரஞ்சனி தேவியுட னுறைந்து
பல்லாண்டு வாழி மகிழ்ந்து.

ஐந்தெழுத்தும் அருமறையும் அணிதிருநீற்றுச் சிறப்பும் ஓங்க
ஆண்டவனின் ஆகுதிகள் பலபெருக
அந்தணர்கள் வாழ்வொழுக்க நெறிசிறக்க ஆனினங்கள் வாழ
சைவநெறி நன்கு தழைத்தோங்க
கந்தக்கடவுளின் அருளினொடு சாந்தியடி வைரவப் பெருமான்
அருளும் பெற்ற அந்தணப் பெருமகனே
சிந்தை நிறை மகிழ்வோடு பல்சிறப்பும் பெற்று மாண்புடனே
மங்கலமாய் பல்லாண்டு வாழி வாழி.

குஞ்சரனாம் பரராசசேகரன் அருகிருக்கப் பேறுபெற்ற கந்தன்
அருள் பொலிய நாளும் வாழி!
மஞ்சுதவழ் மஞ்சமதில் மாமயிலோன் ஏறிவரக் கெஞ்சிவரம்
கேட்கும் பக்தருடன் கூடிவாழி!
விஞ்சுதமிழ் இணுவைநகர் மேன்மேலும் கலைசிறந்து கவின் சிறந்து
கடவுட் பணி சிறந்து நிற்கவாழி!
பொங்கரவம் பூண்ட பெருமான் திருவருளால் மங்கல வாழ்வு பொங்கி
மக்கள் மருமக்கள் பேரருடன் நீடூழி வாழி!

இல்லறத்து நாயகியாம் ஸ்ரீரஞ்சனி தேவியுடன் இணைந்தவாழ்வு
பல்லறப் பணிகளுடன் சிறந்து வாழி
நல்லறங்கள் நானிலத்தோர் காணவாழி! தென்புலத்தார் கடன்கழித்து
தெய்வஅருள் பொலிய வாழி!
வல்லவராய் ஆலயங்கள் தோறும் நல்லகுருப் பணிகள் செய்து
நாடுபோற்றும் புகழினொடு வாழி!
நல்லறப் பண்புமிக்கீர நற்சுகப்பேற்றுடன் நிறை வாழ்வுவாழ
வாழ்த்தி வணங்கி நன்றோம் வாழி! வாழி!.

ஆக்கம்: பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை.

இணுவில்

செஞ்சொற்செல்வர்

திரு ஆறு. திருமுருகன் அவர்களின்

# வாழ்த்துரை

இணுவைக் கந்தனின் பரம்பரைக் குருவும் எங்கள் கிராமத்தின் புரோகிதருமாகிய சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் ஐயாவின் மணிவிழா குறித்து வாழ்த்துவதில் பெரிதும் ஆனந்தமடைகின்றேன். நாவலர் பெருமான் காலத்தில் இணுவில் கிராமத்தில் கல்வியிலும் அறப்பணிகளிலும் முன்னின்று உழைத்த பெருமகன் சிவஸ்ரீ நடராச ஐயர். இவர்கள் வழித்தோன்றலில் உருவாகிய சிவாச்சாரியார் பரம்பரையே மணிவிழாக் காணும் உருத்திரக் குருக்கள்.

தெய்வீகத் தோற்றமுடைய ஐயா அவர்கள் இன்முகத்தோடு எவரையும் வரவேற்கும் பண்புடையவர். பணத்துக்கு முதன்மை கொடாது பண்போடும் பக்தியோடும் விழாக்களை நிறைவாக்குபவர். இணுவில் கந்தசாமி கோவில் திருப்பணியில் தன் குடும்பத்தின் பங்களிப்பு அவசியம் எனக் கூறி வசந்தமண்டபத்தின் புதுப் பொலிவுக்கு வித்திட்டவர்.

இணுவில் அறிவாலயம் திறக்கப்பட்டபோது தம் செலவிலேயே பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றிய பெருந்தகை. இப் பெருமகனாரின் மணிவிழாச் சிறக்க வாழ்த்தி வணங்கி எனது பாராட்டுக்களைச் சமர்ப்பிக்கிறேன்.





# வேலணை, இலந்தைவனம்
# பிள்ளையார் ஆலயம்
# (இலந்தைக்காடு)

# இதழ் 2

# சைவசமயக் களஞ்சியம்

சைவ சமயம் சார்ந்த

பல்வேறு தகவல்களின்

தொகுப்பு

# ஆதி சைவ சிவாசாரியார் பெருமை

சைவம் என்பதற்குச் சிவசம்பந்தம் என்பது பொருளாம். எல்லாச் சமயங்களையும் படிமுறைகளாகத் தன்னுள் அடக்கிக் கொண்டு அவைகளுக்கு எல்லாம் மேலாய் விளங்குவது சுத்தாத்துவித சித்தாந்த சைவ சமயமேயாம். அச்சசைவத்தைப் பற்றி நிற்போர் அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்நிய சைவர் என ஏழுவகைப்படுவர்.

மேற்கூறிய எழுவகையினருள்ளே அநாதி சைவர் எனப்படும் பரபதியாகிய சதாசிவ மூர்த்தியினது ஐந்து திருமுகங்களினின்றும் பிறப்பிக்கப்பட்ட சிவத்துவிச குலத்தவர்களே ஆதிசைவர் ஆவார்.

மக்கள் யாவருக்கும் சமயாதி நான்கு வகைத் தீட்சைகளை அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவாறு செய்துவைத்து உய்வித்தற் பொருட்டு ஆசாரியாதிகாரத்தோடு ஆதியில் தோன்றினமையால் மிகச்சிறந்த சிவத்துவிச குலத்தவர்களை ஆதிசைவ சிவாசாரியார்களென்று உலக முழுவதுங் கூறும்.

தத்தம் பொருட்டு ஆன்மார்த்த பூசைசெய்யும் ஏனையவர் அளவினில்லாது அவ்வான்மார்த்த பூசையைத் தாமுஞ் செய்வதோடுங்கூட, உலகத்திலுள்ளவர் அனைவரும் உய்தற் பொருட்டுப் பரார்த்த பூசையைத் தங்கட்கே உரியது எனப் பாரம்பரியத்திற் கொண்டு முப்பொழுதுந் திருமேனி தீண்டிச் செய்து வருபவர்கள் சிவத்துவிச குலத்தவர்களே ஆவர்.

வேதம், சிவாகமம் என்னும் இரண்டினும் கூறப்படும் அதிகார உரிமை உடையவராய் அவற்றை ஆராய்ந்து அவற்றுள் விலக்கியனவற்றை நீக்கி விதித்தனவற்றைச் செய்யுமாறு அனைவருக்கும் போதிக்கும் ஆற்றல் உடைமையாலும் அனைவருக்கும் சிவதீட்சை செய்து வைக்கும் உரிமை உடைமையாலும், உலகத்தில் குருக்கண்மார் என்ற அளவில் சிறுபான்மை குருத்துவமுடைய அந்நியரை எல்லாம் ஒதுக்கிவிட்டுத் தமக்கு வாய்த்த காரண இடுகுறிப் பெயராய்த் தம்மையே விளக்கி நிற்கப் பெறலாலும் ஆசாரியார், தேசிகர், போதகர், குருக்கள் என்பனவாதியான குருத்துவ விளக்கப் பெயர்கள் எல்லாவற்றையும் வகிக்கத் தக்கவர்கள் சிவத்துவிச குலத்தவர்களே ஆவர்.

ஏனையவர் எல்லாரையும் பரார்த்தம் தீண்டுவதற்கு ஆகாதாரென விலக்கி அதற்கு அருகர் என விதித்த நூல் வழக்காலும், வழிபடும் ஏனையோரைக் காட்டிலும் மூர்த்தியைத் தீண்டி வழிபாடு செய்வார் உயர்ந்தவராதல் வேண்டுமெனக் கருதலளவையாலும் தாம் கொடுக்கும் திருநீற்றை யாவரும் இருகரங்களையும் நீட்டி ஏற்கக் காணும் காட்சி அளவையாலும் தங்கள் பெருமை உலகத்து இனிது விளங்கப் பெற்றவர்கள் சிவத்துவிச குலத்தவர்களே ஆவர். சைவ சமய நெறியில் "விப்ர சைவரிவரே அருச்சனைக்கு என்று எண்" என்பதன் கண்ணும் பெரிய புராணத்தில், "விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன" என்பதன் கண்ணும் உள்ள ஏகாரங்கள் ஏனைய வைதீகப் பிராமணர் முதலியவர்களைப் பரார்த்தம் தீண்டுவதற்கு அருகர் அல்லரென விலக்கியும் சிவத்துவிசர்களே அதற்குரியவர் எனத் தேற்றியும் காட்டவந்த பிரிநிலையோடு தேற்றேகாரங்களாகும். அவ்வாறாதல் ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

அபிடேகாந்த தீட்சை பெற்ற சிவத்துவிசர்களால் பரார்த்த பூசை செய்து வரப்பெறுமானால் உலகத்துக்கு நன்மை உண்டாகும். அவ்விதம் செய்தோர் செய்வித்தோர் என்னும் இருதிறத்தாரும் சிவலோக வாழ்வினராவார்.

வைதீகப் பிராமணர்கள் சைவதீட்சையைப் பெற்றுக் கொண்ட போதிலும் இட்டலிங்கம் என்னும் ஆன்மார்த்தலிங்க பூசையைச் செய்யலாமேயொழியப் பரார்த்தலிங்கத்தைத் தொடுதற்கும் அருகராகார். எக்காரணத்திலாவது வைதீகப் பிராமணர்கள் பரார்த்தலிங்கத்தைத் தொட்டால் தொட்டமைக்குக் கழுவாய் செய்து சிவத்துவிசர்கள் ஏற்றுக் கொண்டு பூசிப்பதே முறையாகும்.

சைவசமயாசாரத்தை விளக்காத இதர சமயநூல் தேர்ச்சியுடையர்க்கு சிவன் செயலை அறியமுடியாது. அதனை நன்கு விளக்குங் காமிகாதி வாதுளம் அந்தமான சிவாகமங்களைத் தமது உரிமையால் ஆராய்ந்துணர்ந்துள்ள ஆதிசைவ சிவாசாரியர்களே அதனை அறியத்தக்கவர்கள். ஆதலால் இவர்களையன்றிச் சிவபெருமானது தத்துவ ஞானத்தைப் பெறுதல் கூடாவாம்.

யாவரும் சிற்றொளிக் கண்களைப் பெற்றிருந்த போதிலும் சூரியனது பேரொளியோடு கலக்கப் பெற்றார்க்கேயன்றி ஏனையோர்க்கு நிலவுலகப் பொருள்களைக் காணமாட்டாமைபோல, பெருஞ் செல்வத்தோடு இயற்கையறிவைப் பெற்றிருந்த போதிலும் இவ்ஆதிசைவ சிவாசாரியர்களின் முகமாய் வேதசிவாகம விதிவிலக்கு உணர்ந்தார்க்கேயன்றி ஏனையோர்க்கு, புண்ணிய பாவ இம்மை மறுமை வீட்டு இயல்புகள் தெரியமாட்டார். ஆகவே அவ்வியல்பு தெரியாதார் செய்யப்புகுந்த பதி புண்ணிய, பசு புண்ணியங்கள் தாழ்ப்பாளில்லாத கதவைப் போன்று பயனற்றதாகும்.

பொதுவாகப் புண்ணியம் அறமென்ற அளவில் பதிபுண்ணியம், பசுபுண்ணியம் என்னும் இரண்டும் அடங்கும். அடங்குமேனும் அவற்றுயர்ந்துள்ள சிவாலயத் திருப்பணியாதி, பதிபுண்ணியங்களை இவ்வாதி சைவ சிவாச்சாரியர்களிடத்துக் கேட்டுத் தெளிந்து அவர்கள் ஒப்புகின்ற முறைப்படி செய்யவேண்டியது மிக்க இன்றியமையாதது. அவ்வாறு செய்தாற்றான் அவைகள் செய்த கருத்தாவுக்குப் பயனையுந் தந்து உலகத்தில் என்றென்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கும். அவ்வாறு கேளாமல் முறையின்றித் தம்மனம் போனவாறே செய்யின் அவை பயன்தராமையோடு தாமும் நிலைக்காமற் கெட்டொழியும் என்பது சிவாகம சம்மதமாகும்.

சிவதீட்சை பெற்றபின்பு ஆராயத்தக்க சிவாகம ஆராய்ச்சியோடு அவ்வாராய்ச்சியின்படி சிவாலயத் திருப்பணி, குடமுழுக்கு, திருவிழா அன்றாட பூசனை முதலியவைகளில் அளவு நியதி, காரணம், காலம், திக்கு, கருத்து, இடம், மந்திரம், தந்திரம், பாவனை முதலியவைகளைத் தமது முன்னோர்களின் கைக்கீழ் வாழையடி வாழை போலிருந்து பழகிவந்த பழக்கம் ஏறியதனால் தேரிய தேற்றமும் வாய்த்திருக்கின்றபடியால் திருப்பணியாதி காரியங்களின் விதிவிலக்குகளைக் கல்வியோடு அநுபவத்திலும் ஒட்டி ஆராய்ந்து விளக்கமாக எடுத்துச் சொல்லத்தக்க வல்லமை உடையவர்கள் ஆதிசைவ சிவாசாரியார்களே ஆவார்கள். இவர்கள்பால் கேட்டு இவர்களது சொற்படிக்கே திருப்பணி செய்வோர் அவைகளைச் செய்யக்கடவர். சிவதீட்சைகளைப் பெற்றுச் சிவாகமங்களைக் கற்றமட்டோடுள்ள ஏனையவர் சொற்படி செய்யல் ஆகாதோவெனில் செய்யல் ஆகாது. எதனாலெனில் சிவத்தொடர்பானவற்றைத் தமதுகுல ஒழுக்கமெனக் கொண்டு எப்போதும் திருக்கோயிலுனுட் புகுந்து அவையனைத்தின்கண்ணும் பலவாற்றால் தேர்ந்து பெற்ற ஆதிசைவ சிவாசாரியர்களினது தேர்ந்த அறிவை ஏனையோர்கள் பெறுவதற்கு இயலாமையால் அவர்களது தேர்ச்சியற்ற சொல்லை மட்டுங் கொண்டு செய்யலாகாதென உறுதியாய் உணர்க.

வேதாகமப் பண்டிதர்களையும் சிவார்ச்சனையாளர்களையும் உலகக் குருவாயும் உள்ள ஆதி சைவ சிவாசாரியர்களுக்கும் பரமசிவனுக்கும் வேறுபாடு இல்லை என்றும் அறியாமையால் வேறுபாடு கற்பிப்பவன் கெடுவான் என்றும் இவர்களைச் சிவமாகவே கருதல் வேண்டும் என்றும் சிவாகமங்களிலே கூறப்பட்டிருக்கின்றன. புராணாதிகளிற் கூறப்பட்டனவோ மிகுதி. கடலும் மலையும் போன்று அளவிடுதற்கு அரிய இவர்களது பெருமையில் இதுகாறுங்கூறியுள்ளது திவலையும் அணுவையும் போலும். சிவத்துவிசப் பெருந்தகையார் குலப்பெருமை யாம் புகழும் பெற்றியதோ எனப் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமானே கூறமுடியாதென்று கைவிடுவாரானால் மற்றறெவர்களால் கூறமுடியுமோ. முற்றக்கூறமுடியாது என்பது தேற்றம்.

**சுப்பிரபேதாகமம் - மொழிபெயர்ப்பு**

இந்தத் தூய சைவாகமம் எல்லாருக்குங் கொடுக்கத் தக்கதுமன்று, விளக்கத்தக்கதும் அன்று. தீட்சை பெற்றவனாய், நிலையுடையோனாய் சிவப்பற்று உடையவனாக இருப்பவனுக்கே விளக்கத்தக்கது. மற்றையோருக்கு விளக்கல் குற்றம் எனப்படும்.

**காமிகாகமம் - மொழிபெயர்ப்பு**

புத்தி முத்திப் பயனைக் கொடுப்பதாகிய சிவார்ச்சனா விதியைச் சொல்லுகிறேன். அது ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகையாகச் சொல்லப்படும்.

தீட்சைக்குப்பின் ஆசாரியனாகவே இலிங்கத்திலாவது தண்டுலம் முதலியவை களிலாவது ஆவாகனஞ் செய்து கொடுக்கப் பெற்றுப் பூசித்தல் ஆன்மார்த்த பூசையாம். அது பூசிப்பவனுக்கு மாத்திரம் பலனைக் கொடுப்பதால் ஆன்மார்த்தம் எனப்படும்.

கிராமம், பட்டணம், நதிதீரம், மலை, அறுபத்தெட்டு திவ்விய தலம் முதலிய புண்ணிய தலங்களிலே சுவாயம்பு, தைவீகம், காணம், ஆரிடம், மானுடம் முதலிய இலிங்கங்களை உடைய திருக்கோயில்களில் பூசிப்பது பரார்த்த பூசையாகும். அரசனுக்கும் மக்களுக்கும் வாழ்நாள் நன்மைகளின் பொருட்டுப் பூசிப்பதே பரார்த்த பூசையாகும்.

ஆதிசைவப் பிராமணர்களே எப்போதும் பரார்த்த பூசை செய்யவேண்டியது. ஏனெனில் அவர்கள் பிராமண மேலோர் என்றும், தார்மிகர்கள் என்றும் சொல்லப்படுவார். மகாசைவர் முதலியோர் ஆன்மார்த்த பூசையே செய்யத்தக்கது. தனக்குரிய ஆன்மார்த்த பூசையை அன்றிப் பரார்த்த பூசையும் செய்வராயின் செய்தவர் நாசத்தை அடைவர்.

சிவத்தோற்றத்தினராகிய ஆதிசைவப் பிராமணர்களன்றிப் பிறர் பிரமாமுகத்துப் பிறந்தவர். அவர் சாமானியர். அந்தச் சாமானியராகிய மகாசைவர் மோகத்தாலே பரார்த்த பூசை செய்வாராயின் அது அரசனுக்கும் நாட்டுக்கும் அழிவை உண்டாக்கும்.

சிவதீட்சை ஆசாரியபிடேகம் பெற்ற சிவப்பிராமணர்களுக்குப் பரார்த்த பூசை செய்யும்படி சிவபெருமான் விதித்திருத்தலினால் பரார்த்த பூசை முதலிய தொழில்கள் செய்தலினால் அவருக்குக் குற்றமில்லை.

ஆதிசைவ மரபினராகிய சிவப்பிராமணர்கள் பிரதிட்டை, முதலிய சருவக் கிரியைளுக்கும் அதிகாரிகள். பிராமணர் முதலிய மற்றை நாலு பிரிவினரும் ஆன்மார்த்தத்துக்கு மாத்திரம் அதிகாரிகள்.

ஆதிசைவராகிய குரு உத்தமரே தீட்சை, பிரதிட்டை, உற்சவம், ஸ்நபநம், புரோட்சணம், பிராயச்சித்தம், அபிடேகம், சைவாகம போதனை, ஆன்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் சமத்த தேவதைகளையும் பூசித்தல் முதலிய சகல கிரியைகளுக்கும் அதிகாரியாவர்.

மேலோராகிய சிவப்பிராமணரை நீக்கி மகாசைவரைக் கொண்டு (மகாசைவர் - சிவதீட்சைபெற்ற வைதிகப் பிராமணர்) பிடிவாதத்தினாலே பூசனைகளைச் செய்வித்தால் அந்த நாட்டு அரசனுக்குப் பெருத்த குற்றம் உண்டாகும். அந்தத் தேசத்துக்கும் பயம் உண்டாகும். செய்வித்தவனுக்கும் அந்த கிராமத்துக்கும் பெருத்த கேடுண்டாம்.

**சந்தானாகமம் - மொழிபெயர்ப்பு**

ஆதிசைவனுக்கு முதன்மை இருத்தலானும் சிவமுகப் பெருமையானும் சிவசாத்திரத் திலே உள்ள சகல காரியங்களிலும் அதிகாரமுண்டு. மகாசைவர் முதலிய பிறருக்கு அதிகாரமில்லை. ஆதலால் பரார்த்தமும் ஆன்மார்த்தமும் ஆகிய தாபனமும் பூசையும் சிவப்பிராமணனால் செய்யப்படுவது. மகாசைவர் முதலிய மற்றையோர்க்கு ஆன்மார்த்தமேயுரியது.

அவர் அப்படியே பொருளாசையாலே பரார்த்தமுஞ் செய்வாராயின் அந்த நாட்டிற்கும் அரசனுக்கும் சீக்கிரத்தில் நாசமுண்டாம் ஐயமில்லை.

**காரணாகமம் - மொழிபெயர்ப்பு**

முதலாவது அநாதி சைவர். அவர் சதாசிவமூர்த்தி. இரண்டாவது ஆதிசைவர். சிவப்பிராமணர் என்று சொல்லப்படுவர்.

ஆதிசைவராவார் அநாதி சைவராகிய சதாசிவ மூர்த்தியால் முதலில் தீட்சை செய்யப் பெற்றவர்கள். அவரது குலத்தில் பிறந்து தீட்சை செய்யப் பெற்றவரே பிரதிட்டை முதலிய சகல கிரியைகளுக்கும் யோக்கியர்.

ஆதிசைவரை ஆதரித்தவர்கள் மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவரென்று சொல்லப்படுவார்கள். அவர்கள் ஆன்மார்த்த பூசை செய்யலாமேயல்லாது பரார்த்த பூசை செய்தல் கூடாது.

ஆதிசைவர்கள் ஆன்மார்த்தம் பரார்த்தம் ஆகிய இருவகைப் பூசைகளும் செய்யலாம். பரார்த்தப் பிரதிட்டை பூசை முதலிய கிரியைகள் ஆதிசைவருக்கே சிறப்பாக உரியன. இக் கிரியைகளை மகாசைவர் முதலியோர் செய்தல் கூடாது. இவர் இக்கிரியைகளைச் செய்வாராயின் அது கொலைப் பொருட்டேயாம்.

பிரதிட்டை முதல் அர்ச்சனை வரை அனைத்துக் கிரியைகளும் ஆதிசைவரே செய்யத் தக்கன. அவரைக் கொண்டு அல்லாமல் வேறு வகையாகச் செய்வித்தால் அது கொலைப் பொருட்டேயாம்.

# சப்த விடங்கத் தலங்கள்

முசுகுந்தச் சோழன் இந்திரனிடம் ஏழு தியாகராஜர் திருவுருவங்களை வாங்கி வந்தான்.

ஏழு தியாகேசர்களையும் முசுகுந்தன் ஏழு திருப்பதிகளில் நிலைபெறச் செய்தான். விடங்கர்களை ஸ்தாபித்த ஏழு திருப்பதிகளையும் சப்த விடங்கத் தலங்கள் என அழைப்பர்.

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில் - பேரான
ஒத்ததிரு வாய்மூர் உகந்ததிருக் கோவில்
சத்தவி டங்கத் தலம்"

என்றதொகைச் செய்யுளால் இதை அறியலாம்.

இவ்வேழு திருத்தலங்களுள் விஞ்சிய பெருமைக்குரியது திருவாரூர். இங்கு இவருக்கு வீதிவிடங்கர் என்று பெயர். வீதிவிடங்கரின் நடனம் அஜபாநடனம் எனப்படும்.

இரண்டாவது தியாகராச மூர்த்தியை முசுகுந்தன் திருநள்ளாறு என்ற சிவத்தலத்தில் ஸ்தாபித்தான். திருநள்ளாறு சனிபகவான் வணங்கி அருள் பெற்ற தலம் என்பது பிரசித்தம். இது காரைக்காலிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ளது. திருஞானசம்பந்தர் மதுரையில் சமணருடன் ஏற்பட்ட அனல் வாதில் வெல்ல திருநள்ளாற்றிறைவர்மேல் தாம் பாடிய "போக மார்த்த பூண்முலையாள்" என்ற பதிகத்தை தேர்ந்தெடுத்தது பலருக்கும் தெரிந்திருக்கும். (தீயில் வேகாததால் இப்பதிகம் பச்சைப்பதிகம் என அழைக்கப்படுகிறது)

நள்ளாற்றில் ஸ்தாபிக்கப்பட்ட தியாகராஜர் நகவிடங்கர் என்று அழைக்கப்படுகின்றார். இவரது நடனம் உன்மத்த நடனம். உன்மத்தம் என்றால் பித்து (பயித்தியம்) பைத்தியம் பிடித்தவன் போல முன்னும் பின்னும் மேலும் கீழுமாகக் குப்புறக் கவிழ்வது போல நடிக்கும் நடனம்.

மூன்றாவது மூர்த்தியை முசுகுந்தன் திருநாகைக்காரோணத்தில் ஸ்தாபித்தான். இத்தலம் இப்போது நாகபட்டினம் என அழைக்கப்படுகின்றது. இங்குள்ள தியாகர் சுந்தரவிடங்கர். இவரது நடனம் பாராவார தரங்க நடனம் (பாரவாரம் - கடல், தரங்கம் - அலை) இந்நடனம் அலை சுருண்டு விழுவது போலத் தியாகரால் முன்பக்கம் கவிழ்ந்து கவிழ்ந்து ஆடப்படுவது.

நான்காவது மூர்த்தி ஸ்தாபிக்கப்பட்ட தலம் திருவாரூருக்குத் தெற்கில் பதின்மூன்று கிலோ மீற்றர் தொலைவில் திருக்காறாயிலில் உள்ளது. இங்குள்ள விடங்கர் ஆதிவிடங்கர் எனவழைக்கப்படுகின்றார். இவரின் நடனம் குக்குடநடனம் (குக்குடம் - கோழி) கோழியைப் போல ஆடுவதால் குக்குட நடனம்.

ஐந்தாவது மூர்த்தி திருக்கோளிலியில் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தலம் இக்காலத்தில் திருக்குவளை என வழங்கப்படுகிறது. திருக்காறாயிலுக்குத் தென்கிழக்கே உள்ளது. திருக்கோளிலி என்றவுடன் நமக்குச் சுந்தரரின் "நீள நினைந்தடியேன்" என்று தொடங்கும் தேவாரம் நினைவுக்கு வரும். ஆம் குண்டையூர்க் கிழார் கொடுத்த நெல்லைத் திருவாரூருக்குக் கொண்டு வர இறைவனின் உதவியைச் சுந்தரர் நாடியது இத்தலத்தில்தான். இங்கு தியாகர்

அவனிவிடங்கர் என்ற நாமத்துடன் அருள் பாலிக்கின்றார். இவரது நடனம் பிருங்கநடனம். (பிருங்கம் - வண்டு) மலர்ந்த பூவைக் கண்டதும் வண்டு மலரைச் சுற்றிச் சுற்றி வந்து மலரின் மீது இருப்பது போலச் சுழன்றும் நிலைக்கு வந்தும் நடிக்கும் நடனம்.

ஆறாவது மூர்த்தி திருவாய்மூரில் ஸ்தாபிக்கப்பட்டது. திருக்கோளிலியிலிருந்து தென்கிழக்கே நான்கு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது திருவாய்மூர். இதுவும் எமக்கு மிகவும் பரிச்சயமான சிவஸ்தலம். திருமறைக்காட்டிற்கு வந்த அப்பரடிகளின் கனவில் தோன்றி "நாம் வாய்மூரில் இருப்போம் வா" என அழைத்து ஆட்கொண்ட தலம். இங்குள்ள தியாகேசர் நீலவிடங்கர் எனப்படுகின்றார். அவரது நடனம் கமலநடனம். நீரில் பூத்திருக்கும் தாமரை (கமலம் - தாமரை) அந்நீரின் அசைவிற்கேற்ப அசைவது போல் ஆடும் நடனம்.

ஏழாவது மூர்த்தி திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வேதாரண்யத்திற்கும் யாழ்ப்பாணத்துக்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது. வேதாரண்யேஸ்வரர் ஆலய அறங்காவலர்களாக இன்னும் யாழ்ப்பாணம் கரணவாய் - வரணி சைவக்குரு பரம்பரையினரே இருந்து வருகின்றனர். மறைகளால் பூட்டப்பட்ட திருக்கதவைத் திறந்தும் பின்னர் அடைத்தும் அப்பரும் சம்பந்தரும் அற்புதம் நடத்திய திருத்தலம் வேதாரண்யம். இங்கு தியாகேசர் புவனிவிடங்கர் என்ற திருநாமம் கொண்டு விளங்குகிறார். இவரது நடனம் ஹம்ஸபாத நடனம் (ஹம்ஸம் - அன்னம்) அன்னப் பறவை மெல்ல அடியெடுத்து நடக்கும் அழகுபோல் ஆடுவதால் ஹம்ஸபாத நடனம்.

மேலே குறித்த ஏழுவகை நடனங்களும் ஆழ்ந்த கருத்துக்கள் உடையன. இந்த நடனத்திற்கு ஏற்ற ஜதி முறைகளும் இருந்தன. சோழர் காலத்தில் சமய, விசேட, நிர்வாண தீட்சை பெற்ற சிவபூசையும் விரத நியமங்களும் உடையவர்கள் அவ்வத்தலங்களில் அத் தலத்துக்குரிய நடனத்துடன் தியாகப் பெருமானைத் தூக்கி நின்றாடி விழாக்கொண்டாடினர். இந்நடன முறைகள் இப்போது பெரிதும் அருகிவிட்டது கவலைக்குரியது.



# அஜபா நடனம்

நடராஜர் போலவே தியாகராஜரும் நடனமூர்த்திதான். ஆனால் அந்த நடனம் நமக்குத் தெரியாமல் இருக்கத் தியாகராஜரது பிம்பத்தில் முகம் தவிர்ந்த மிகுதி அங்கங்கள் அனைத்தும் எப்போதும் மறைக்கப்பட்டிருக்கும்.

நடாஜரின் நடனத்திற்கும் தியாகராஜரின் நடனத்திற்கு வித்தியாசமுண்டு. நடராஜர் தானாகவே இடது காலைத் தூக்கி ஆனந்த தாண்டவம் புரிகின்றார். தியாகராஜர் தாமாகத் தாண்டவம் ஆடவில்லை. மகாவிஷ்ணுவின் இருதயத்தில் சிவன் இருக்கிறார். அதனால் மகாவிஷ்ணு சுவாசிக்கும்போது அவரது மார்புக்கூடு மேலும் கீழுமாக ஏறி இறங்கி அசையும்போதும் மார்பு முன்பு புடைத்தும் பிறகு வற்றியும் முன்னும் பின்னுமாக அசையும் போதும், தியாகராஜரில் ஏற்படும் அசைவுகளில் ஒரு நடனம் அமைந்துவிடுகிறது. இவ்வாறாக மகாவிஷ்ணுவின் இருதய கமலத்தில் அமையும் தியாகராஜரின் நடனம் அஜபா நடனம் எனப்படுகிறது.

ஜபமாக இல்லாதது அஜபா. மற்றெல்லா மந்திரங்களையும் நாம் புத்தி பூர்வமாக அட்சரங்களைக் கொண்டு செபிக்கிறோம். அந்த மந்திர சப்தங்களின் அதிர்வினால் நாடியில் ஏற்படும் சலனங்களிலிருந்து அபூர்வமான தரிசனம், சக்தி, சித்தி, மனத்தெளிவு ஆகியன உண்டாகின்றன. இவை பூரணமாக ஏற்படுவதற்கு அந்த மந்திரங்களைப் பிராணாயாம பூர்வமாக அதாவது தீர்க்கமாக மூச்சை இழுத்து அடக்கி வெளியிடுவதோடு சேர்த்துப் பண்ண வேண்டும்.

மேற்கண்டவாறு மந்திரங்களைச் செபித்தல் இன்றியும் மூச்சை அளவாக ஒழுங்குபடுத்தி வீடுதல் இன்றியும் சித்தத்தைச் சாந்தமாக வைத்துக் கொண்டால் உள்வெளி மூச்சுக்கள் மிகவும் நீண்டுகொண்டே செல்லும். மூச்சு அடங்கி இருக்கும் காலமும் அதிகரித்துக் கொண்டே போகும். பரம சாந்தம் உண்டாகும். இதந்குத்தான் அஜபா என்று பெயர். உபசாரமாக இதையும் ஒரு ஜபம் என்று கூறுவர்.

மகாவிஷ்ணு, குண்டலினிப் பாம்பை வெளியில் ஆதிசேடன் என்ற பாயணையாகக் காட்டிக் கொண்டு யோகநித்திரை கொள்வதைத்தான் திருமால் பள்ளி கொள்வதாகக் கூறுகிறோம். இந்த யோகநித்திரையின்போது மகாவிஷ்ணு அஜபா சாதனை பண்ணி பரமாத்மாவான சிவசொருபத்தில் ஐக்கியப் பட்டிருப்பார். அப்போது மகாவிஷ்ணுவின் பிராண சஞ்சாரத்திற்கு ஏற்ப பரமேஸ்வரன் ஆடுவதுதான் தியாகரின் அஜபா நடனம்.

இதை ஒரு பிம்பமாக விஷ்ணுவின் இருதயத்திலே சிவன் நாட்டியமாடுவது போல் காட்டினால் அதனைச் சாதாரண மக்கள் தப்பாக விளங்கிக் கொள்வர் என்ற காரணத்தினாலேயே திருவாரூர் தியாகராசரின் பிம்பத்தில் எல்லாவற்றையும் நன்றாக மூடி முகத்தை மாத்திரம் காட்டுகிறார்கள்.

திருவாரூர் கோவிலை எடுத்துக் கொண்டால் அக்கோவில் மகாவிஷ்ணுவின் சொருபமாகவே கட்டப்பட்டுள்ளது. அந்தச் சொருபத்தில் இதயம் எங்கே இருக்குமோ அங்கேதான் தியாகராஜரின் பூங்கோயில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

செபிக்கப்படாமலே பிராணனோடு சேர்ந்து இயங்கும் இந்த அஜபா மந்திரத்தைத்

திருமூலர் அசபை என்கிறார். (திருமந்திரம் நான்காம் தந்திரம்).

திருவாரூர் தவிர்ந்த ஏனைய ஆறு விடங்கத் தலங்களில் ஆடும் நடனங்கள் யோகியர்களுக்கு ஆறு ஆதாரங்களில் ஏற்படும் அசைவு, ஓசை இவற்றையே பெரிதும் ஒத்துள்ளதாகக் கூறப்படுகிறது. கடலோசை, வண்டோசை முதலியனவற்றை யோகியர் கேட்பர் என்பது திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆவவே விடங்கர் எனப்படும் தியாகேசர் யோகத்தோடு தொடர்புடையவராய் இருக்க வேண்டும். சிவபரம்பொருள் உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயமாக்கி வீற்றிருந்து யோகசித்தியருளி வீடுபேறு தந்து சிறப்பிக்கும் வள்ளல் தன்மையால் தியாகேசர் எனப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்தப் பூமியை மனித உருவில் அமைந்ததாகக் கொண்டு திருவாரூர் மூலாதாரமாகவும், தருவானைக்கா சுவாதிஷ்டானம் (உந்தி) ஆகவும் திருவண்ணாமலை மணிபூரகமாகவும் திருக்காளத்தி அனாகதமாகவும் (கழுத்து) காசி விசுத்தம் (புருவமத்தி) ஆகவும் சிதம்பரம் இருதய ஸ்தானம் (ஆஜ்ஜை) ஆகவும் சொல்லப்படும். மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தி எழுந்து தலையின் பின்புறமாக உள்ள ஆயிரம் இதழ்த்தாமரையிற் சென்று சேர்வதே யோகம். யோகநெறியில் நனிநின்ற நாயன்மார்கள் அமர்ந்திருக்கும் தேவாசிரிய மண்டபம் திருவாரூரில் அமைந்திருப்பது இத்தலத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மூலாதாரத்தில் உள்ள ஆற்றலைத் தலையில் ஈசானிய திசைக்கு கொண்டு போவதே யோகம் என்று திருமூலர் கூறுகின்றார். அதற்கு ஏற்ப மூலாதாரத் தலமாகிய திருவாரூரில் தவக்கோலத்தில் கமலாம்பாள் ஈசானிய பார்வையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. உருத்திராட்ச மாலை ஏந்தி யோக நிலையில் காட்சி தருவதும் நோக்குதற்குரியது.

ஆறு ஆதாரங்களும் எண்ணிக்கையில் வேறுபட்ட இதழ்கள் கொண்ட தாமரை (கமலம்)களாக உருவகிக்கப்படுவது வழமை. அந்தத் தாமரைகளில் பராசக்தி வாசம் செய்வதாலேயே கமலாம்பாள் எனப் பெயர் பெறுகின்றாள்.

மேற்கூறியவையும் வேறுபல ஆதாரங்களும் திருவாரூர் யோகநெறியின் அடிப்படையில் அமைந்த திருக்கோயில் என்பதைக் காட்டிநிற்கின்றன.

சிவமூர்த்தங்களுள் இல்லறத்தார் வழிபடற்குரிய சிறப்பு வாய்ந்தது சோமாஸ்கந்த மூர்த்தமாகும். குழந்தைப் பேறில்லாதார் தியாகேசப் பெருமானை வணங்கி அருள்பெறுவர். இல்லற மார்க்கத்தையும் யோகமார்க்கத்தையும் அரவணைத்து நிற்கும் அருமையான ஊர் ஆரூர் அல்லவா?

# முகலிங்கங்கள்



சிவாலயங்களில் ஆயிரக்கணக்கான வகையில் அமைந்த லிங்கங்கள் வைத்து வழிபடப் பட்டாலும் முகலிங்கங்கள் அபூர்வமாகவே வழிபடப்படுகின்றன. இவை

ஒரு முகம் கொண்ட ஏகமுகலிங்கம்;

இரண்டு முகம் கொண்ட துவிமுகலிங்கம்;

மூன்று முகம் கொண்ட திரிமுகலிங்கம்;

நான்கு முகம் கொண்ட சதுர்முகலிங்கம்;

ஐந்து முகம் கொண்ட பஞ்சமுகலிங்கம்;

என ஐந்து வகைப்படுகின்றது. ஆறாவது வகையான ஷண்முகலிங்கம் என்ற லிங்கமும் உண்டு. ஆனால் இதனை வழிபடுகிற வழக்கம் காணப்படவில்லை.

முகலிங்கங்களில் உள்ள முகங்கள் சிவபெருமானின் வடிவமான பஞ்சப்பிரம்மங்கள் எனப்படும் சத்யோஜாதர், அகோரர், தத்புருஷர், வாமதேவர், ஈசானர் என்னும் ஐவரின் திருமுகங்கள் என்பர் சிலர்.

சிலர் உலக உற்பத்திக்காகச் சிவபெருமான் கொள்ளும் பஞ்சசாதாக்கிய நிலைகளில் மூன்றாம் நிலையில் ஒருமுகமுடையவராக சிவபெருமான் லிங்கத்தின் நடுவில் தோன்றுகிறார். இந்நிலையே ஒருமுகலிங்கம் அடைவதற்கு காரணம் என்பர்.

இதுபோலவே சிவசாதாக்கியத்தின் நான்காவது நிலையில் நான்கு முகம் கொண்டவராகச் சிவபெருமான் விளங்குகின்றார். இதை உணர்த்துவதாகவே நான்கு முகலிங்கம் அமைகிறது. இந்த நான்கு முகலிங்கம் பிரம்ம லிங்கம் எனவும் அழைக்கப்படுகிறது என்பர்.

மேலும் ஐந்தாவது சாதாக்கிய நிலையில் ஐம்முகம் கொண்டவராக சதாசிவம் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளுகிறார். இந்நிலையைக் குறிக்க அமைந்ததே பஞ்சமுகலிங்கமாகும்.

பொதுவாக நான்கு முகங்கள் கொண்ட லிங்கத்தையே பஞ்சமுகலிங்கம் என அழைக்கின்ற வழக்கமும் உள்ளது. நான்கு திசையை நோக்கியவாறு உள்ள நான்கு முகங்களுடன் உச்சியில் விளங்கும் வழவழப்பான பகுதியை ஐந்தாவது முகமாகவும் கொள்கின்றனர். இத்தகைய ஐந்து முகலிங்கங்கள் பலதலங்களில் அமைந்திருக்கக் காணலாம்.

முகலிங்கங்களை வழிபடுவதால் இம்மையில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் மறுமையில் சிவசாயுஜ்யமும் கிடைக்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

முகலிங்கங்களை அமைக்கும்போது சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் முகத்தை மட்டுமே அமைக்க வேண்டும் என்பது விதியாகும். ஆனாலும் காலப்போக்கில் சிவனின் மார்பகம் வரையில் உருவம் செதுக்கும் நிலை தோன்றியது. தொடர்ந்து இரண்டு கரங்கள் வரையிலாக அமைக்கப் படலாயின. எடுத்துக்காட்டாக, நேப்பாளத்தில் உள்ள பசுபதிநாதர் கோயிலின் மூலலிங்கத்தில் சிவபெருமானின் திருஉருவம் மார்பு வரையில் இரண்டு திருக் கரங்களுடன் அமைந்திருப்பதைக் காணலாம்.

மேலும் சிவசாதாக்கிய நிலையில் சிவலிங்க வடிவின் நடுவில் பெருமான் நான்கு கரங்களில் மான், மழு அபயவரத முத்திரை தாங்கியவராய் விளங்கக் காணலாம். இதுவே வளர்ச்சி அடைந்து திருவண்ணா மலையார் (லிங்கோற்பவ) உருவமாயிற்று என்பர்.

நாட்டுப்புற அமைப்புகளில் அமைந்த பல சிவலிங்கங்களின் நடுவில் முழு உருவில் சிவன் மட்டுமின்றி கணபதியையும் அம்பிகையையும் கூட அமைத்துள்ளனர்.

இனி முகலிங்கங்கள் எழுந்தருளியுள்ள தலங்கள், முகலிங்கங்களின் தன்மை ஆகியவற்றைக் காணலாம்.

# ஏகமுகலிங்கம்

சிவபெருமானின் ஐந்து முகங்களில் கிழக்குநோக்கிய முகம் தத்புருஷம் எனப்படும். இது வெண்மை நிறமும் எல்லையில்லா சாந்த குணமும் கொண்டதாக அமைகிறது. ஒரு முகலிங்கத்தில் அமைவது இந்த தத்புருஷ முகமேயாகும். எனவே இந்த லிங்கம் தத்புருஷ லிங்கம் என்று அழைக்கப்படுகிறது.

ராஜபதவியை விரும்புவர்களும் அஷ்டஐசுவரியங்களை விரும்புகிறவர்களும் இந்த தத்புருஷ லிங்கத்தையே வழிபடுவர்.

இது ஆலயத்தில் நிருதி மூலையில் அமைவதாகும். எனவே இது நிருதிலிங்கம் எனவும் அழைக்கப்படுகின்றது. நிருதி மனிதனை வாகனமாகக் கொண்டவன். எனவே அவனால் தொழப்படும் இந்தலிங்கத்தை வணங்குபவர்கள் மனிதர்களுக்கு அரசனாகி அவர்களை அடக்கி ஆளலாம் என்று நம்புகின்றனர்.

தென்னகத்தில் மூலத்தானத்தில் முதன்மையாக வைத்து விழிபடும் நிலையில் ஏகமுகலிங்கம் இல்லை. திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் பெரிய நாயகர் சந்நிதிக்குத் தெற்கில் நிருதி மூலையில் ஒரு ஏகமுகலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது வனப்பும் வடிவழகும் வாய்ந்ததாகும்.

தில்லைச் சிற்றம்பலத்தில் ரகசியத்திற்கு அருகில் ஒருமுகலிங்கம் அமைந்துள்ளது. இதில் பாணப்பகுதி பாணலிங்கமாகவும் முகம் தங்கத்தாலும் அமைக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா, கேரளா மாநிலங்களில் லிங்கத்திற்கு உருத்திரபாகத்தில் முகம் இல்லாவிட்டாலும் வெள்ளி அல்லது பொன்னாலாகிய கண், மூக்கு, மீசை, வாய் இவற்றை வைத்து முகங்களை அமைக்கின்றனர். சிவதலங்களில் முகம் போன்ற கவசங்களும் அணிவிக்கப்படுகின்றன.

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி ஆலயத்தில் கவசத்துடன் காட்சியளிப்பதைக் காண்கிறோம்.

இந்த லிங்கங்களுக்கு ஏகமுக உருத்திராக்கங்களில் 11, 121 ஆகிய எண்ணிக்கையில் கோர்க்கப்பட்ட உருத்திராக்க மாலையணிவித்து வில்வதளங்களால் ஆராதித்தால் சிறந்த செல்வங்களையும் மனஅமைதியையும் பெறலாம்.

# துவிமுக லிங்கம்

சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு முகங்கள் அமையப்பெற்றதே இருமுகலிங்கமாகும். இதிலுள்ள கிழக்குமுகம் தத்புருஷம் என்றும், மேற்குமுகம் சத்யோஜாதம் என்றும் அழைக்கப்படும்.

தியாகம் புரிய நினைப்பவர்களும் உலகிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்களும் இந்த லிங்கத்தை வழிபடுவர்.

குறிப்பாக வீரசைவர்களே சத்யோஜாத முகத்தை வழிபடுபவர்கள். ஆதலின் இருமுகலிங்கம் அவர்களுக்கே உரியதாகும். இதனை மந்திரலிங்கம் எனவும் அழைப்பர். இதன் சந்நிதிக்கு கிழக்கிலும் மேற்கிலும் வாயில் அமைக்க வேண்டும் என்பது விதியாகும்.

இந்த லிங்கத்தை இரட்டை முக உத்திராட்ச வடம் சூட்டி இருவாட்சி முதலிய மலர்களால் அலங்கரித்து வழிபட்டால் தியாகம் தொண்டு செய்கிற மனமும், புகழும் உண்டாகும் என்பது நம்பிக்கையாகும்.

வழக்கத்தில் ஆலயங்களில் எங்கும் இத்தகைய இருமுகலிங்கம் இல்லை.

## காளத்திவளர் கண்ணப்பலிங்கம்

பண்டைக் காலத்தில் முகலிங்கம் அமைத்து வழிபட்டதைப் பற்றிய நேரடியான குறிப்புகள் சமய நூல்களில் இல்லையென்றாலும் கண்ணப்ப நாயனாரின் கதையை நோக்கும்போது முகலிங்கங்கள் வழிபாட்டில் இருந்ததை உணரமுடிகிறது.

காளத்திமலையில் எழுந்தருளியிருந்த குடுமித் தேவரான லிங்கத்தின் கண்களில் இருந்து இரத்தம் வழிவதைக் கண்ணப்பர் கண்டு தன் கண்ணைப் பெயர்த்து அப்பியதும் அதனைத் தொடர்ந்த வரலாறும் இங்கு நோக்கத்தக்கதாகும். இதனால் காளத்தியில் இருந்த லிங்கம் முகலிங்கம் என்பது அறியப்படுகிறது. இதையொத்து பல ஆலயங்களில் முகலிங்கம் இருந்திருக்கலாம். ஆனால் இக்காலத்தில் திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தைத் தவிர ஏனைய இடங்களில் முகலிங்கங்களைக் காணமுடியவில்லை. காளத்தியிலும் இப்போது



ஒருமுகலிங்கம் மூலத்தானத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கண்ணப்பர் புராணம்**

*வலத்திருக் கண்ணில் தன்கண் அப்பிய வள்ளலார்தன்*
*நலத்தினை பின்னும்காட்ட நாயனார் மற்றைக்கண்ணில்*
*உலப்பில் செங்குருதி பாயக் கண்டனர்..............................இன்னம்*
*உண்டொரு கண் அக்கண்ணை இடந்து அப்புவேன் (என்று முயன்றார்) - பெரியபுராணம்.*

# மும்முகலிங்கம்

சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் முகம் கொண்டது மும்முகலிங்கம் எனப்படும்.

இந்த முகங்களில் கிழக்கில் உள்ளது தத்புருஷம் என்றும் தெற்கில் உள்ளது அகோரம் என்றும் வடக்கில் உள்ளது வாமதேவம் என்றும் பெயர் பெறும்.

இந்த மூன்று முகங்களில் கிழக்கில் உள்ளது ஆண்மையுடன் புன்னகை புரிவதாகவும், வடக்கில் உள்ளது பெண்சாயலுடன் மந்தகாசம் புரிவதாகவும், தெற்கில் உள்ளது கடுத்து விழித்த கோபவடிவம் கொண்டதாகவும் அமைக்கப்படும்.

இந்த லிங்கம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகியோரின் முகங்களைத் தன்னுள் கொண்டதென்பர். எனவே இது திரிமூர்த்தி லிங்கம் எனவும் அழைக்கப்படும்.

எலிபென்டா குகையில் மூன்று முகங்களைக் கொண்ட பெரிய வடிவம் உள்ளது. இதனை அங்கு சதாசிவர் எனக்குறித்துள்ளனர். அஞ்சலட்டைகளிலும் தபால் தலைகளிலும் நீண்டகாலம் இந்த மும்முகமே முத்திரையாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

மூன்று முகங்களையுடைய லிங்கம் தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள திருவக்கரை என்னும் பாடல் பெற்ற திருத்தலத்தில் உள்ள சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தின் கருவறையில் மூலமூர்த்தியாக அமைந்துள்ளது. இதுபோல் மூலமூர்த்தியாக மும்முகலிங்கம் வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பன்னிரு ஜோதிர்லிங்கங்களில் ஒன்றாகிய திரியம்பகத்தில் உள்ள சிவலிங்கத்தின் மீது மூன்று முகங்களை தங்கத்தால் செய்து கவசமாக அணிவித்துள்ளனர்.

ஈரோடு நகரில் அமைந்துள்ள மகிமாலீசுவரர் ஆலயத்தில் உள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க சன்னதியில் அமைந்துள்ள திரியம்பக லிங்கமும் மூன்று முகங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதனைத் தத்துவத்திரைய லிங்கம் என்றும் கூறுவர்.

இம் மும்முக லிங்கத்திற்கு மூனறு வேதங்களை ஓதி மும்முக உருத்திராக்கத்தை அணிவித்து மூன்று தளவில்வங்களால் அருச்சனைபுரிய எண்ணிலாத செல்வங்களை அடையலாம் என்பர்.

# சதுர்முகலிங்கம்

இந்த இலிங்கத்தின் பாணப்பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நான்குமுகங்களை அமைப்பர். இதில் கிழக்கில் தத்புருஷம், தெற்கில் உள்ளது அகோரம், மேற்கில் உள்ளது சத்யோஜாதம், வடக்கில் உள்ளது வாமதேவம் என்று அழைக்கப்படும்.

சிலர் நான்கு முகங்களுக்கு மேலாக வட்டமாக வழவழப்பாக அமைந்திருக்கும் உச்சிப்பகுதியை ஐந்தாவது முகமாக கொள்வர்.

நேபாளத்தில் உள்ள பசுபதிநாதர் கோயிலில் அமைந்திருப்பது இத்தகைய சதுர்முகலிங்கமேயாகும். இங்கு லிங்கத்தின் முகங்கள் மார்புவரை இரண்டு கரங்களுடன் அமைந்துள்ளன. ஒருகையில் ஜெபமாலையும் மற்றோர்கையில் அமுத குடமும் உள்ளன.

இந்தலிங்கத்தின் நான்கு முகங்களையும் நான்கு வேதத்தால் அர்ச்சித்துப் பூசை செய்கின்றனர். இந்த லிங்கம் அமைந்துள்ள ஆலயத்திற்கு நாற்புறமும் வாயில் அமைக்க வேண்டியது முறையாகும். நேபாளத்தில் நாற்புறம் வாயிலைக் கொண்ட கோயிலே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அமையும் கோயில் நான்முகக் கோயில் என்று தமிழிலும் சர்வதோபத்ராலயம் என வடமொழியிலும் அழைக்கப்படும். (ஈழத்தில் இணுவில் காரைக்கால் சிவன் கோவில் இத்தகையதே - தொகுப்பாசிரியர்)

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பண்டிருட்டியில் ஒரு பகுதியாகிய திருவதிகையில் நான்முகக் கோயில் ஒன்று இருந்ததாக வீரட்டேசுவரர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. செங்கல்லால் ஆன அக்கோயில் சிதைந்துவிடவே நூறு வருடத்திற்கு முன்பு அக்கோயிலில் இருந்த நான்முகலிங்கம் இடம்பெயர்த்துக் கொண்டுவரப்பட்டு வீரட்டேசுவரர் கோயிலின் மாளிகை பத்தியில் தென்மேற்கு முனையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இது கலையழகு நிரம்பியதாகும்.

மேலும் திருவண்ணாமலை திருவானைக்கா முதலிய அனேக இடங்களில் சதுர்முகலிங்கமம் அமைந்த சந்நிதிகள் உள்ளன. இச்சந்நிதிகளுக்கு நாற்புறமும் வாயில் அமைக்க முடியாதபோது ஒருபுறம் வாயிலும் மற்றைய பகுதிகளில் ஜன்னல்களும் அமைக்கின்றனர்.

காஞ்சீபுரத்தில் உள்ள கச்சபேசர் ஆலயத்தில் நடராசர் சந்நிதியையொட்டி ஒரு நான்முகலிங்கம் அமைந்த சந்நிதியுள்ளது. இந்த லிங்கத்தின் நான்கு முகங்களில் இருந்து நான்கு வேதமும் வெளிப்பட்டதால் இதனை வேதலிங்கம் என்று குறிப்பிடுகின்றனர். இதனைக் காஞ்சிப் புராணத்தால் அறியலாம்.

இந்தலிங்கத்தை நான்கு முக உருத்திராட்சத்தால் அலங்கரித்து நால்வகை வில்வங்களாய் அர்ச்சிப்பவர் எட்டுத் திக்கிலும் புகழ்பரப்பும் பெரிய அறிஞராக விளங்குவர் என்பது நம்பிக்கையாகும்.

ஸ்ரீகாளத்தியில் கோயிலுக்கு அருகில் உள்ள குன்றின் சாரலில் மகேசுவர மூர்த்திகள் புடைப்புச் சிற்பமாக அமைந்த பாறை உள்ளது. அதன் மீது அமைந்த மண்டபத்தின் மேற்குப் பகுதியில் நான்முகலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கலையழகு நிரம்பியதாகும். இந்த லிங்கம் பிரம்மலிங்கம் எனவும் அழைக்கப்படும். இந்த லிங்கத்தை நான்கு முக உருத்திராட்சங்களால் அலங்கரிப்பர்.



★ சிவாகமம் கூறும் பஞ்சமுகலிங்கம்

## பஞ்சமுகலிங்கம்

நான்கு முகலிங்கங்களையே வழக்கத்தில் பஞ்சமுக லிங்கம் என அழைக்கின்றனர். உண்மையில் பஞ்ச முகலிங்கம் வேறானது. இது நான்கு திசைகளில் உள்ள நான்கு முகங்களுடன் கிழக்குத் திக்கில் உள்ள முகத்தின் மீது ஐந்தாவது முகத்தைக் கொண்டதாக விளங்குகிறது. அபூர்வமாகவே இத்தகைய லிங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

வேலூர் அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள விரிஞ்சிபுரம் மார்க்க சகாய ஈசுவரர் ஆலயத்தில் வெளிப் பிராகாரத்தில் அமைந்த ஒரு சந்நதியில் பஞ்சமுகலிங்கம் அமைந்துள்ளதைக் காணலாம்.


ஸ்ரீகயிலாயத்தில் உள்ள மகா சிவாலயத்தில் பஞ்ச முகலிங்கம் ஒன்று இருப்பதாவும் அதன் ஐந்து ஜடாபாரங்களில் இருந்தும் ஐந்து கங்கைகள் பொங்கி வருகின்றன என்றும் சிவரகசியம் கூறும். அந்த ஐந்து கங்கைகளே பஞ்ச கங்கை எனப்படும்.

வடநாட்டில் இந்நாளில் கட்டப்பட்ட பல ஆலயங்களில் பஞ்ச முகலிங்கம் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இந்த லிங்கத்திற்கு ஐம்முக உத்திராட்சத்தால் விதானம், மாலை ஆகியவற்றை அமைத்து பஞ்சகவ்யத்தால் அபிஷேகித்து, பஞ்ச வில்வத்தால் அர்ச்சித்துப் பஞ்ச வித உபசாரம் செய்து பஞ்ச அன்னங்களை நிவேதித்து வழிபட உலகம் வசியமாவதுடன் எண்ணிய எல்லா நலமும் பெறலாம் என்பது நம்பிக்கையாகும். இந்த ஐந்து முகங்களில் இருந்து ஆகமங்கள் வெளிப்பட்டதால் இதனை சிவாகமலிங்கம் எனவும் அழைப்பர்.

# சிவாகமங்கள் காட்டும் பஞ்சமுக லிங்கம்

இதுவரை நடைமுறையில் உள்ள ஐந்து வகையான பஞ்சமுக லிங்கங்களைப் பற்றிய செய்திகளை நாம் கண்டோம். சிவாகமங்களில்



★ பஞ்சமுகலிங்கம் - ஸ்ரீமார்க்கசகாய சுவாமி கோயில் - விரிஞ்சிபுரம்

பஞ்சமுகலிங்கத்தில் உள்ள முகங்கள் பரசிவத்திடம் இருந்து முதலில் தோன்றிய ஐந்து சாதாக்கிய மூர்த்திகளின் முகங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இனி இவற்றைப்பற்றிய செய்திகளைக் காணலாம்.

பரசிவத்திடமிருந்து முதலில் தோன்றிய அநாசிருதர், அநாகதர், அநந்தர், வியோமரூபர், வியாபகர் என்னும் மூர்த்திகள் ஐவரும் அவரிடத்தில் தோன்றிய ஐந்து சக்திகளான பராசக்தி, ஆதிசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி ஆகியோரைத் துணை கொண்டு ஐந்து சிவசாதாக்கியங்களைத் தோற்றுவித்து அவர்கள் மூலம் ஐந்தொழிலாகிய படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் எனும் ஐந்தொழிலையும் இயற்றிவருகின்றனர். இவர்களுடைய திருமுகங்களே பஞ்சமுகலிங்கத்தில் அமைந்துள்ள திருமுகங்களாகுமென்பர்.

இவர்கள் ஐவரும் ஐந்தொழில் புரியும் காலத்தில் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேச்சுவரர், சதாசிவர் என்று பெயர் பெறுவர். இவர்களின் திருமுகம் அமைந்ததே இந்த முகலிங்கம் என ஆகமங்கள் கூறுகின்றன.

இந்த ஐவரும் ஐந்தொழில் புரிவதோடு தனக்கென திருவுருவம் தாங்கி அத்திரு வுருவத்திற்கான தனிப்பெயர் பூண்டு தமக்குரிய இடத்தில் வீற்றிருப்பர்.

பிரம்மா எனும் அநாசிருதர், பராசக்தியுடன் சகல ஆன்மாக்களின் உள்ளத்திலும் நீங்காது வீற்றிருப்பார்.

அநாகதராகிய விஷ்ணு, பெரிய ஆமை வடிவமாக ஆதாரசக்தி என்ற பெயர் பூண்டு சகல புவனங்களையும் சுமந்து நிற்பார்.

அநந்தர் எனும் உருத்திரன் காலாக்கினி உருத்திரதேவர் என்ற பெயருடன் சராசரங்களிலுள்ள அனைத்துப் பொருள்களையும் இருப்பிடமாகக் கொண்டு அதனை நடத்துவார்.

வியோமரூபர் ஆகிய மகேச்சுவரன் கூர்மாண்டதேவநாயனார் என்ற பெயருடன் இருபத்தெட்டுகோடி நரகங்களுக்கு அதிபதியாக இருந்து அதனை ஆளுவார்.

ஐந்தாவதான வியாபகர் என்னும் சதாசிவன் ஆடகேசுவரர் என்ற பெயருடன் பாதாளத்திற்கு அதிபதியாகி அங்குள்ளோர் தொழ வீற்றிருப்பார்.

இவ்வாறு தனித்தனி மூர்த்திகளாயும் அதே சமயம் மூலசிவத்தை விட்டு நீங்காதவர்களாகவும் இருப்பதைக் குறிக்கும் வகையில் பஞ்சமுகலிங்கம் அமைகிறது என்று ஆன்றோர் கூறுவர்.

— இக்கருத்து சிவபராக்கிரமம் எனும் நூலில் முகலிங்கங்கள் என்ற தலைப்பில் காணப்படுகிறது.



## நேபாளம் பசுபதி நாதர்

நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவை அடுத்துள்ள பசுபதி நாதர் ஆலயத்திலும் நேபாளத்தின் பிறபகுதியில் அமைந்த அனேக ஆலயங்களிலும் சதுர்முகலிங்கங்கள் வைத்து வணங்கப்படுவதைக் காண்கிறோம். இதனால் சதுர் முகலிங்கம் நேபாளத்திற்கே உரியதாகக் கருதப்படுகிறது. இதன் நான்கு முகங்களும் இந்தியாவில் உள்ள நான்கு பெரிய தலங்களில் உள்ள தெய்வங்களின் முகம் என்ற நம்பிக்கை நிலவுகிறது. படத்தில் உள்ளது நேபாளத்தில் உள்ள சதுர்முகலிங்கங்களில் ஒன்றாகும். இதன் விரிவை ஆறாவது மலரான பசுபதியில் காணலாம்.

இதுவரை ஆகம நூல்களில் கூறப்பட்ட சர்வசமம் எனும் முகலிங்கங்களைப் பற்றிய செய்திகளைக் கண்டோம். இனி தொடர்ந்து அன்பர்கள் பலவேறு வகைகளில் அமைத்து வழிபடும் பலவகையான லிங்கங்களைப்பற்றிய செய்திகளைக் காணலாம்.

## ஆறு முகலிங்கம் - ஷண்முகலிங்கம்

சிவபெருமானுக்கு ஆறு முகங்கள் உண்டு. இவற்றில் நான்கு முகங்கள் நான்கு திக்குகளை நோக்கியும் ஐந்தாவது முகம் உச்சியில் வானத்தை நோக்கியும் ஆறாவது முகம் எப்போதும் பாதாளத்தை நோக்கியவாறும் இருக்கும். மேல்நோக்கிய முகம் ஊர்த்துவமுகம் என்றும் கீழ்நோக்கிய முகம் அதோமுகம் எனவும் அழைக்கப்படும்.

இந்த அதோமுகம் எண்ணிலடங்கா ஆற்றல் உடையது. வடவைத் தீயைப் போன்றது. அதனால் பக்தர்களின் கண்ணுக்குப் புலனாகாமல் கீழ் நோக்கியே இருக்கின்றது.

முருகப்பெருமானின் திரு அவதாரத்தின் போது பெருமான் ஐந்து முகங்களுடன் ஆறாவதான இந்த முகத்தையும் சேர்த்து அவற்றின் நெற்றிக்கண்களில் விளைந்த நெருப்புப் பொறிகள் மூலம் அவனை உற்பவித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

இதனை குமரகுருபர சுவாமிகள்

**ஐந்து முகம் தந்து அதோமுகமும் ஆறாக**

என்று கந்தர் கலிவெண்பாவில் அருளிச் செய்துள்ளார்.

பாற்கடல் கடைந்த காலத்தில் பெருகி வந்த ஆலகாலம் பொங்கி எழுந்தபோது அதனை உண்டதும் இத்திருமுகமேயாகும். ஆகையால் நடைமுறையில் ஸ்ரீகண்டத்தையே ஆறாவது முகமாக பாவித்து அர்ச்சிக்கின்றனர்.

நடைமுறையில் ஆறுமுக லிங்கம் எங்கும் அமைக்கப்பட்டதாகவோ வழிபடப்படுவதாகவோ தெரியவில்லை. பெருமானின் ஆறுமுகங்களில் இருந்து உண்டான முருகனே அறுமுகச் சிவனாகக் காட்சியளிக்கின்றான்.

*****

# 28 சிவாகமலிங்கம்

சிவபெருமான் தனது ஐந்து முகங்களின் மூலமாகவும் 28 சிவாகமங்களை அருளிச் செய்தார். இச் சிவாகமங்கள் யாவும் சிவவடிவேயாகும். எனவே 28 சிவலிங்கங்களை 28 சிவாகமங்களாக பாவித்து வணங்குகிற வழக்கம் சிலரால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இப்போது இத்தகைய சிவலிங்கங்கள் பரவலாக காணப்படவில்லை. பாடல் பெற்ற திருத்தலமான திருநெல்வாயில் அறத்துறை என்கின்ற தலத்தில் உள்ள சிவாலயத்தின் மேற்கு பிரகாரத்தில் அமைந்துள்ள ஒரு லிங்கம் சிவாகமலிங்கம் என்று அழைக்கப்படுகிறது. இதன் பாணப்பகுதியில் 28 சிவலிங்கங்கள் அமைந்துள்ளன. இந்த லிங்கத்தை வணங்குவோர் சிவாகமத் தேர்ச்சி பெற்று சிவசாருபம் எய்தி கயிலையங்கிரியில் சிறப்புடன் வாழ்வர் என்று கூறப்படுகிறது.

## சதலிங்கம் (சதருத்திரலிங்கம்)

தன்னுள் நூறு லிங்கங்களைக் கொண்ட லிங்கமே சதலிங்கம் எனப்படும். இது எட்டுத்திக்கிலும் விண்ணிலும் பாதாளத்திலும் சஞ்சரித்துக் கொண்டு உலகினைக் காத்துவரும் சதருத்திரர்களால் வணங்கப்பட்டு ஒன்றான லிங்கமாகும். எனவே, இதனை சதருத்ரலிங்கம் என அழைப்பர்.

இந்த லிங்கத்தை உருத்திரமந்திரத்தால் 100 முறை அபிஷேகித்து 100 உருத்திராக்கங்களால் அலங்கரித்து வழிபட்டால் எல்லையற்ற ஆற்றலும் வலிமையும் உண்டாகும். பகைவர்கள் நாசம் அடைவர் என்று நம்பப்படுகிறது.


## 108 லிங்கம் (சுரேட்டயம்) (அஷ்டோத்திர லிங்கம்)

சிவலிங்கத்தின் நான்கு வகைகளில் இரண்டாவதாக சொல்லப்பட்ட சுரேட்டயம் என்பது இந்த அஷ்டோத்திர லிங்கமாகும். இந்த லிங்கத்தின் பாணப்பகுதியில் 108 சிறு லிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைவதற்கு பலவகையான காரணங்கள் கூறப்பட்டுள்ளன.

சில நூல்கள் நூறு (சத) உருத்திரர்களாலும் அவர்களின் தலைவர்களான அஷ்ட ருத்திரர்களாலும் பூசிக்கப்பட்டு ஒன்றாக்கப்பட்டது இந்த 108 லிங்கம் என்பர். காஞ்சிபுரம், சிதம்பரம், திருவொற்றியூர் முதலிய அனேக தலங்களில் 108 லிங்கம் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சென்னைக்கு வடக்கேயுள்ள பொன்னேரியை அடுத்துள்ள சின்னக் காவணம் எனும் ஊரில் நூற்றெட்டீசுவரர் எனும் சிவாலயம் உள்ளது. ஆனால் இச்சிவலிங்கம் சாதாரண லிங்கமாகவே உள்ளது.

இதனை அகத்தியர் அமைத்தார் என்பர். அவர் நாள்தோறும் ஒன்று வீதம் 108நாட்கள் 108 லிங்கங்களைப் பூசித்து இறுதியில் அவற்றை ஒன்றாக்கி நூற்றெட்டீசுவரர் என்ற பெயரில் நிறுவினார் என்று கூறுவர்.



நூற்றெட்டு லிங்கம்

## சகஸ்ர லிங்கம் (1000 முகலிங்கம்)

இந்த லிங்கம் ஆயிரம் முகங்களைக் கொண்டதாகும், சிவபெருமான் ஆயிரம் கரங்களையும் ஆயிரம் திருவடிகளையும் ஆயிரம் முகங்களையும் உடையவர். இதனை

ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடியானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடையானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீண்முடியானும்
ஆயிரம் பேருகந்தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

- எனும் அப்பரடிகளாரின் தேவாரப்பாடலால் அறியலாம்.


ஆயிரம் என்றசொல் ஆயிரம் என்ற எண்ணைக் குறிப்பதுடன் அளவில்லாதது என்ற பொருளையும் கொண்டதாக உள்ளது. எண்ணிலா முகமும் பாதமும், கரங்களும் கொண்ட பெருமானை ஆயிரம்பெயரால் குறிக்கின்றோம். ஒரு லிங்கத்தில் ஆயிரம் முகங்களை அமைக்க வேண்டியதே முறையாகும். ஆனால் நடைமுறையில் முகங்களாக இல்லாமல் இதனை சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் சிறு சிவலிங்கங்களாகவே அமைக்கின்றனர்.

## 1001 லிங்கம் ஏகாதிக சகஸ்ரலிங்கம்

சிவாகமங்களில் சொல்லப்பட்டுள்ள நான்கு வகை லிங்கங்களுள் ஆட்யம் என்று சொல்லப்படும் லிங்கம் இதுவேயாகும். இந்த லிங்கத்தின் பாணப்பகுதியில் 1001 சிறுலிங்கங்கள் அமைந்துள்ளன. இது சிவபெருமான் எங்கும் பரந்திருக்கின்ற நிலையை உணர்த்துகிறது.

## 1008 லிங்கம் அஷ்ட சகஸ்ரலிங்கம்

சிவபெருமானின் எண்ணிலாது பரந்திருக்கின்ற ஆயிர முகங்களுடன், அளவிலா ஆற்றலும் வரம்பிலா சக்தியும் உடைய அஷ்ட மூர்த்தியின் முகங்களையும் இணைத்து 1008 முகங்களைக் கொண்டதாக அமைந்ததே இந்த அஷ்ட சகஸ்ர லிங்கமாகும்.



சகஸ்ரலிங்கம்
ஸ்ரீகும்பேஸ்சுவரர் ஆலயம் - குடந்தை

ஆயிரத்தெட்டு அண்டங்களில் உள்ள மகாலிங்கங்களை நினைவுபடுத்துவதாக ஆயிரத் தெட்டு லிங்கம் அமைவதால் இதற்கு அண்டலிங்கம் என்ற பெயரும் உண்டு.

நூற்றுக்கு மேற்பட்ட முகங்களை லிங்கத்தில் அமைப்பது நடைமுறையில் இயலாது என்பதாலும் அப்படியே நுணுக்கமாக அமைத்தாலும் தினமும் அபிஷேகிக்கப்படும் லிங்கத்தில் அழுக்கு படிந்து முகங்களை அறிய முடியாது போகும் என்பதாலும் முகங்களை அமைப்பதற்குப் பதில் அழகிய சிறுலிங்கங்களாகவே அமைக்கின்றனர்.

காஞ்சீபுரத்தில் நூற்றெட்டு லிங்கம்,
ஆயிரத்தெட்டு லிங்கங்களும் சிறப்புடன்
திகழ்கின்றன. காளத்தி, திருவானைக்காவல்
முதலிய தலங்களில் சகஸ்ர லிங்கங்கள் உள்ளன.

# தக்ஷ ஸம்ஹாரம்

ஆதிநூல்களான வேதத்திலும், இதிகாசங்களிலும் சிவபெருமான் தட்சனின் யாகத்தை அழித்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது அவற்றுள் சில......

## வேதத்துள் தட்ச சங்காரம்

**தைத்தீரிய யசுர்வேதத்தில்....**

"தேவர்கள் உருத்திரரை யாகத்தினின்று நீக்கினார்கள். அவர் அந்த யாகத்தை அழித்தார். தேவர்கள் அவியைப் பன்னிரு சூரியர்களுள் ஒருவனாகிய பூஷனுக்குக் கொடுத்தார்கள். அதை அவன் உண்ணும்போது உருத்திரர் அவனுடைய பற்களை உடைத்தார்"

**சரபோபநிஷத்தில்...**

"எந்த வீரர் தட்சயாகத்திலே தேவக் கூட்டங்களை ஜெயித்து விஷ்ணுவை நாகபாசத்தால் கட்டினாரோ அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்"

**சதபதப் பிராஹ்மணத்தில்.....**

(தேவர்கள் தட்சயாகத்தில் வலப்பகத்தில் இருக்கும் பகனுக்கு அவிசைக் கொடுத்தார்கள். அவன் அதனைப் பார்த்தான். (உருத்திரர்) அவனுடைய கண்களைத் தகித்தார்.

## மகாபாரதத்தில் தட்ச சங்காரம்

வாஸ்தவத்திலே தேவர்கள் உருத்திரரை அறியாது ஸ்தாணுவாகிய சிவபெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தைக் கொடுத்தாரில்லை. அதனால், மகாதேவர் (வீரபத்திரர்) கோபம் கொண்டு வில்லை எடுத்துக் கொண்டு தேவர்கள் யாகம் செய்யும் இடத்திற்குப் போனார். அதைக் கண்ட தேவர்கள் அங்கிருந்து ஓடத் தொடங்கினர். அவர் சவித்ருவின் தோள்களை வெட்டியதுடன் பகனின் கண்களைப் பிடுங்கினார்.

பூஷன் உண்ணுமாறு தேவர்கள் அவிர்பாகத்தைக் கொடுத்தார்கள் (வீரபத்திரர் வடிவில் வந்த) உருத்திரர் அவன் பற்களை உடைத்தார். தட்சன் முதலான தேவர்கள் சிவபெருமானை யக்ஞத்தினின்று விலக்கியதால் வீரபத்திரர் வடிவம் கொண்ட சிவபெருமான் தட்சனுடைய யக்ஞத்தை அழித்தார்.

## வீரபத்திரர் - விளக்கம்

வீரபத்திரம் என்பதற்குப் பல்வேறு பொருட்கள் அகராதிகளில் சொல்லப்பட்டுள்ளன. அசுவமேதக் குதிரை, பாதுகாப்புத் தருதல், யானைகளின் வரிசை, குதிரைகளின் வரிசை எனப் பலவாகும். வீரம் என்பதற்கு அழகு என்றும் பத்திரம் என்பதற்குக் காப்பவன் என்பதும் பொருளாகும். நம்மைக் காத்து அருள்வதால் சிவகுமாரன் வீரபத்திரன் எனப்பட்டான்.

வீரபத்திரருக்கு வீரேசுவரன் என்ற பெயர் வழங்குகிறது. வீரத்தால் மேம்பட்டவன் என்பது இதன் பொருளாகும். வீரத்தை ஐசுவரியமாக உடையவன் என்றும் கூறுவர்.

## மந்திர, யந்திர நூல்களில் வீரபத்திரர்

மந்திரசாஸ்திர நூல்களில் வீரபத்திரர் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறார். இவை மகாவீரபத்திரரை யந்திர வடிவில் வழிபடும் முறையை விளக்கிக் கூறுகின்றன. அவர் ஆயிரம் திருமுகங்கள் கொண்டவராக இருப்பதுபோலவே அவருடைய யந்திரத்திலும் ஆயிரம் எழுத்துக்கள் இடம்பெறுகின்றன. ஆயிரம் இதழ் கொண்ட தாமரையை வரைந்து அதில் ஆயிரம் அட்சரங்களை முறைப்படி எழுதுவதுடன் மையப்பொகுட்டில் அறுகோணம் அமைத்து அதனுள் வீரபத்திரரின் மூலமந்திரத்தை எழுதுகின்றனர். எட்டுத்திக்கிலும் பூத, பிரேத, வேதாள, யக்ஷ, ராக்ஷச, கின்னர, காளி, கூளி கணங்கள் பரிவாரங்களாக அமைக்கப்படுகின்றன. இந்த யந்திரத்துக்கு தேன், பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்து வெற்றிலைப் பீடத்தில் வைத்து உரிய மந்திரங்களால் அருச்சித்து வடை, பாயசம், மாவுருண்டைகள் முதலியவற்றை நிவேதனமாகப் படைத்து வன்னி சமித்தால் மூலமந்திரத்தைக் கொண்டு ஆயிரம் முறை ஹோமம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் பகைமை அழிவதுடன், அச்சமற்ற வாழ்க்கையும் மனோதைர்யமும் செல்வமும் பெருகும். இப்படி உருவில் பெரியதாகவும் அட்சர எண்ணிக்கையில் அதிகம் (ஆயிரம் அட்சரங்கள்) கொண்டதாகவும் உள்ள யந்திரம் வேறு தெய்வங்களுக்கும் இல்லை என்றே கூறலாம்.

## தட்ச சங்காரம்

பிரம்ம தேவன் தான் செய்துவரும் படைப்புத் தொழிலைப் பெருக்கப் பத்துப் புதல்வர்களைப் பெற்றான். இவர்களில் உயர்ந்தவனாக "தட்சன்" விளங்கினான். அவனை பிரம்மதேவன் மிகவும் விரும்பிப் பிரஜைகளின அதிபதியாக்கித் "தட்சப்பிரஜாபதி" என்று பட்டம் சூட்டினான்.

தட்சன், ஒருசமயம் பிரம்மதேவனிடம் மூலபரம்பொருள் எது எனக்கேட்டான். பிரம்மதேவன் "சிவபெருமானே யாவற்றிற்கும் மூலமான முழுமுதற்பொருள்" என்று பல ஏதுக்களால் கூறினான் அதனால் மனம் தெளிந்த தட்சன் சிவபெருமான் மீது பக்திகொண்டு அவரைத் தரிசிக்க எண்ணினான். அவன் தன் தந்தையாகிய பிரம்மதேவனிடம் உபதேசமும் தீட்சையும் பெற்றுக்கொண்டான். கயிலைமலையின் சாரலிலுள்ள மானசரோவம் என்னும் நீர்நிலையின் கரையில் தபோவனத்தை அமைத்துக் கொண்டான்.

தூய எண்ணத்துடன் சிவபெருமானை நோக்கிக் கடும்தவம் மேற்கொண்டான். பனி, வெயில், மழை, முதலிய இயற்கையின் வேகங்களைப் பொருட்படுத்தாமல் ஒருமனதாகத் தவத்தைச் செய்யத் தொடங்கினான். ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தன. நாளாக ஆக, அவனுடைய தவத்தின் மேன்மையும் வலிமையும் வளர்ந்து கொண்டே சென்றன.

அவனுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் உமையுடன் இடபவாகனத்தில் மீது அவன் முன்னே தோன்றினார். தட்சன் மனம் மகிழ்ந்து அவரை மிகுந்த அன்புடன் போற்றினான். அவனுடைய தோத்திரங்களால் மகிழ்ந்த சிவபெருமான், "தட்சனே நீ விரும்பியதைக் கேள்" என்றார்.

தட்சன், "பெருமானே!" மூவுலகங்களிலும் எனது ஆணை செல்ல வேண்டும், எனது ஆணைக்குட்பட்டே தேவர், முனிவர், மனிதர் அனைவரும் நடக்க வேண்டும். எனக்குப் புத்திர பாக்கியங்கள் பெருகவேண்டும். உமது இடப்பாகத்தில் திகழும் உமாதேவியார் எனக்கு மகளாக வர நான் அவளை உமக்குத் திருமணம் செய்து கொடுக்கத் தாங்கள் ஏற்க வேண்டும்" என்று கேட்டான்.

சிவபெருமான் புன்னகைத்து, "அன்பனே, நீ வேண்டிய வரங்கள் எல்லாவற்றையும் தந்தோம், நீ நல்ல வழியில் நடக்கும்வரை அவை உம்மிடம் பொருந்தியிருக்கும் என்றுகூறி அருள்புரிந்து மறைந்தார்.

தட்சன் மகிழ்வுடன் திரும்பிவந்து பிரம்மதேவரை வணங்கினான். பிரம்மன் அவனுக்குத் "தட்சமாபுரி" என்ற பெருநகரம் ஒன்றைப் படைத்தளித்தான். அந்நகரின் மத்தியிலிருந்த பெரிய அரண்மனையில் அவனுக்கு முடிசூட்டுவிழா நடத்தினர். அவன் சிவபெருமானிடம் பெற்றிருந்த வரத்தின் படி இந்திரன் முதலான தேவர்கள் அவனுக்கு அடங்கி நடந்தனர்.

பிரம்மதேவனின் அருளால் தோன்றிய "வேதவல்லி" என்பவளைத் தட்சனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். நீண்டகாலம் அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

புத்திரப்பேற்றை விரும்பிய தட்சன் வேதவல்லியிடம் ஓராயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களை நன்கு வளர்த்து உபநயனம் முதலான சடங்குகளைச் செய்வித்து வேதங்களைப் பயிற்றுவித்தான். பின்னர் "தவம்செய்து அரிய வரங்களைப் பெற்றுச் சிவனருளால் உலகினைப் படைக்கும் ஆற்றலைப் பெறுங்கள்" என்று கூறி அனுப்பினான். அவர்களும் தந்தையைப் போலவே மானச தடாகத்தின் கரையில் பர்ணகசாலை அமைத்து அரிய தவங்களை மேற்கொண்டனர். அங்கு வந்த நாரத மாமுனிவர் அவர்களுக்கு மோட்ச சாதனங்களை உபதேசித்து மோட்சத்தின் பெருமைகளை விளக்கினார். அதனைக்கேட்டு மகிழ்ந்த அவர்கள் தவம் செய்து மோட்சமடைந்து விட்டனர்.

இதை அறிந்த தக்கன் வருந்தினான் மீண்டும் சிவனருளால் ஓராயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்கள் வளர்ந்தபிறகு உரியவேளை வந்ததும் அவர்களிடம் சிவனை உபாசித்து, படைப்புத்தொழில் புரியும் ஆற்றலைப் பெற அனுப்பினான். அவர்களும் தமது தமையன்மார்களைப் போலவே மானசதாடாகத்தின் கரையில் தவமிருக்கத் தொடங்கினர்.

நாரத முனிவர் அவர்கட்கு ஞானநெறிகளை உபதேசித்தார். அவருடைய உபதேசத்தால் மனம் தெளிந்த அவர்கள் சிவனை உபாசித்து மோட்சமடைந்து விட்டனர்.

இதனைக் கேட்ட தட்சன் மிகவும் வருந்தி தளர்ந்துச் சோர்ந்தான். நாரதமுனிவன் மேல் கோபம் கொண்டான். இனி இவன் ஓரிடத்தும் நில்லாது வருந்தித் திரியக்கடவன் என்று சாபமிட்டான்.

நாட்கள் கடந்தன. அவனுக்குக் குழந்தைகள் பெறவேண்டும் என்ற எண்ணம் மீண்டும் உண்டாயிற்று. "எனது ஆண்மக்கள் எல்லோரும் எனது சொற்கேளாமல் தவம் செய்து மோட்சமடைந்தனர், எனக்குப் புதல்வர்கள் மேல் பற்றில்லை. இனிப் பெண்மக்களையே பெறுவேன்" என்றான்.

அந்த எண்ணம் வலுப்பெற்று இருபத்து மூன்று பெண்களைப் பெற்றான். அவர்களில் முதல் பதிமூன்று பெண்களைத் "தருமன்" என்பான் மணந்து இருபத்தேழு புதல்வர்களைப் பெற்றான்.

தட்சனின் மற்றப் பத்துப் பெண்களும் பத்து முனிவர்களை முறையே மணந்தனர். இவர்களால் தட்சனின் வம்சம் பெருகிப் பல்கியது.

மீண்டும் தட்சனும் - வேதவல்லியும் இருபத்தேழு பெண்களைப்பெற்றனர். அவர்கள் தாரகைகளாக (நட்சத்திரங்களாக) விளங்கினர். அவர்கள் ஒருவரையொருவர் பிரிய மனமின்றி ஒன்றாகவே இருந்தனர். தம் தந்தையான தட்சனிடம் தங்கள் எல்லோரையும் ஒருவனுக்கே மணமுடித்து வைக்க வேண்டினர். அவனும் அவர்களைச் சந்திரனுக்கு மணம் முடித்து வைத்தான்.

(சந்திரன் மனைவிகளை மதியாமல் தட்சனால் சபிக்கப்பட்டு அழிவு நிலை எய்தியதையும் பின்னர் சிவபூசை செய்து மேன்மை அடைந்ததையும் அறியலாம்)

நீண்டகாலங்கள் கழிந்தன. தட்சனுக்கு சிவபெருமான் அளித்தவரத்தின்படி உமாதேவியார் அவனுக்கு மகளாகத் தோன்றத் திருவுள்ளம் பற்றினாள். அவள் இமயமலைச்சாரலில் காளிந்தி நதியில் ஒரு வலம்புரிச்சங்காக மாறித் தவம் புரிந்து கொண்டிருந்தாள்.

மாசிப்புனலாட அங்குவந்த தட்சன் அந்தச்சங்கை எடுத்தான். உடனே அவள் சங்குவடிவம் நீங்கி அழகிய பெண் குழந்தையானாள். அவன் அக்குழந்தையை அன்புடன் உச்சி முகர்ந்தான். குழந்தையை எடுதுக் கொண்டு அரண்மனைக்கு வந்து மனைவியான வேதவல்லியிடம் கொடுத்தான். அவளும் அக்குழந்தையைச் சிவன் தந்த வரமென வாங்கி அணைத்து மகிழ்ந்தாள்.

தட்சனின் மகளானதால் அவளுக்குத் "தாட்சாயணி" என்று பெயர்சூட்டி அன்புடன் வளர்ந்தனர். ஐந்து ஆண்டுகள் உருண்டோடின. ஆறாம் வயது தொடங்கும் வேளையில் அவள் தமது தாய்தந்தையரை நோக்கி, "யான் சிவபெருமானுக்கே மனைவியாகும் ஆவலுடையேன். அந்த ஆசை நிறைவேற அவரைச் சிந்தையில் இருத்தித் தவம் புரிய உள்ளேன். அதற்கேற்ற வசதியைச் செய்து கொடுங்கள்" என்றாள்.

அதைக்கேட்டுத் தட்சனும் வேதவல்லியும் மகிழ்ந்தனர். அவள் விரும்பியபடியே ஊருக்கு வெளியே ஒரு தவமாடத்தை அமைத்து, அங்கு அவளை அனுப்பினர். அங்கு அவள் நியமத்தோடு ஆறாண்டுகள் தவம்புரிந்தாள்.

அவள் தவத்திற்கு, மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்கு அருள்புரிந்து திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார். ஒரு பிரமச்சாரியாக வடிவு கொண்டு அவள் இருக்கும் தவமாடத்தை அடைந்தார். அங்கிருந்த சேடிப் பெண்கள் அவரை வணங்கி வரவேற்று அவளிடம் சேர்ந்தனர். அவள் வந்த பிரம்மச்சாரியைப் பணிந்து "நீங்கள் வேண்டுவது என்ன?" என்றாள்.

பிரம்மச்சாரி. "பெண்ணே! உன்னை மணம் புரியவே வந்தோம். மறுப்புக் கூறாமல் என்னை மணந்து கொள்" என்றார். அதைக்கேட்ட அம்பிகை "சிவசிவ" என்று கூறி, காதுகளைப் பொத்திக் கொண்டாள். "பிரம்மசாரியே! நான் சிவபெருமானுக்கே உரியவள். அவரையே மணப்பேன். இது உறுதி" என்றாள்.

பிரம்மச்சாரி நகைத்து "பெண்ணே! யாவரும் அறிய ஒண்ணா அரும்பொருளாக இருப்பவர் சிவபெருமான். அவர் உன்னை வந்து மணம்புரிதல் அரிது. உன் எண்ணத்தை விடுத்து என்னை மணந்துகொள்" என்றார்.

தேவி மனம் பதைபதைத்தாள். "தகாத வார்த்தை கூறினீர். சிவபெருமான் என்னை வேண்டி விரும்பி மணம்புரியும் வரையில் தவம்செய்வேன், நான் மாண்டாலும் மீண்டும் மீண்டும் பிறந்து அவரை அடைவதற்குத் தவமே புரிவேன், இது நிச்சயம். நீர் இவ்விடம் விட்டு விரைவில் அகலுக" என்றாள்.

அவ்வார்த்தைகளால் மகிழ்ந்த சிவபெருமான். "அவளுக்கு மட்டும் தனது மெய்யுருவைக் காட்டினார்" "பெண்ணே! உன் தவத்தால் மகிழ்ந்தோம். விரைவில் மணம்புரிவோம்" என்றார்.

தேவி அவர் அளித்த வரத்தினால் மகிழ்ந்தாள். உண்மையறியாது இகழ்ந்து பேசியதற்காக மன்னிக்க வேண்டினாள். ஆனந்தக் கண்ணீர் பெருக அவரை அன்புடன் அர்ச்சித்தாள்.

சேடியர், புதியதாக வந்தவன்பால் தேவி அன்பு கொண்டு வணங்கி நின்றதைக் கண்டு ஐயங்கொண்டனர். இவர்கள் முன்னமே சந்தித்து அறிந்தவர்கள் போலிருக்கிறது. இதை தட்சனிடம் சொல்வோம் என்று நினைந்து அரண்மனையை அடைந்தனர்.

சேடிகள் சொன்னதைக் கெட்ட தட்சன், தன் உள் உணர்வால் வந்தவர், "சிவபெருமானே என்பதை உணர்ந்தான். நான் பெற்ற பெண்ணை அவருக்கே மணம் முடித்துத் தருவேன்" என்று பேருவகை கொண்டான்.

அவனும் வேதவல்லியும் கூடி நல்லநாள் பார்த்தனர். இன்றே நல்ல நாளாக இருக்கிறது இப்பொழுதே திருமணம் செய்வோம் என்று முடிவுசெய்தனர். உடனே தட்சன் சகல தேவர்களையும் அழைத்துவரத் தூதுவர்களை அனுப்பினான்.

மங்கலப் பெண்கள் சீர்வரிசைகளை எடுத்துவரத் தன் தேவியுடன் தவச்சாலையை அடைந்தான். அங்கிருந்த பிரம்மச்சாரியை வணங்கி, "பெருமாளே! உம்மை மணம்புரியவே எம்மகள் தவம் செய்தாள். அதன் பயன் இந்நாள் கிடைத்தது. உமக்கு இவளைத் திருமணம் செய்து வைப்பேன். எமது அரண்மனைக்கு எழுந்தருளுக" என்றான். அனைவரும் தட்சன் அரண்மனையை அடைந்தனர்.

வேதவல்லி அம்பிகைக்கு மணப்பெண் அலங்காரம் செய்தாள். கின்னர கிம்புருஷர்கள் கீதம்பாட அரம்பையர்கள் கற்பகமலர்களைத் தூவி வாழ்த்தொலி கூற வேதவல்லி நீர்வார்க்க, தட்சன் கன்னிகாதான மந்திரங்களைக் கூறி, அம்பிகையின் கரத்தைச் சிவபெருமான் கரத்தில் வைத்து தத்தம் செய்தான். "பெருமானே! இவளை உமக்குந் தந்தேன் இவளைப் உங்கள் மனைவியாக ஏற்று அருளும்" என்றான்.

பிரம்மன் வேதச் சடங்குகளைச் செய்யத் திருமால் வேதம் ஓதினார். தேவர்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். அந்த வேளையில் சிவபெருமான் மறைந்தார். அதைக் கண்டு தேவி அயர்ந்து அழுதாள்.

அதைக்கண்டு தட்சன் மிகுந்த கோபம் கொண்டான். வேதவல்லி தேவியைச் சமாதானப்படுத்தினாள். "பெண்ணே, நீ! மீண்டும் கடும்தவம் செய்து உனது கணவனை அடைவாய்" என்று கூறி அவளைத் தவச்சாலையில் விடுத்தாள்.

எனினும் தக்கன் கோபம் எல்லை கடந்தது. சிவன் என்னைச் சிறுமை செய்தான். இந்தத் திருமணத்தில் என்ன குறை கண்டு, ஒருவருக்கும் சொல்லாது மறைந்தான் எனப் பலவாறு இகழ்ந்தான்.

உமாதேவியார் முன்னிலும் கடுந்தவம் புரிந்தாள். ஒரு நல்ல நாளில் சிவபெருமான் வெண்டலை மாலையும், விபூதிப் பூச்சும், உருத்திராட்சமாலையும், சடையும், சூலமும் துலங்க இடபவாகனத்தில் அவள் முன்னே தோன்றினார். அவரைத் தேவி உபசரித்து வணங்கினாள். அவர் அவளைத் தம் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு மறைந்தார். அங்கு நடந்ததைச் சேடிகள் சென்று தட்சனிடம் தெரிவித்தனர். அவன் அதைக் கேட்டு முன்னிலும் மிகுந்த கோபம் அடைந்தான்.

பித்தனான சிவன் முன்பு என் மகளை மணந்து கொள்ள வந்து, மணச்சடங்கு முடியுமுன்பே மறைந்தான். இப்போது தாய் தந்தையரான எங்களுக்குத் தெரியாமல், எமது மகளைக் களவு கொண்டான். இவன் செய்கையால் எமது குலத்திற்கு இழிவையும் தேடி விட்டான் என்று கூறிப் பெருமூச்சுவிட்டான்.

அப்போது தேவர்கள், "சிவபெருமானிடமிருந்து பேரரசும் வரங்களும் பெற்றதை மறந்து தட்சன் இறுமாந்திருக்கிறான். இதனால் இவனுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. இவனோடிருந்தால் நமக்கும் கேடு வருவது உறுதி. நாம் இவனை விட்டு விட்டுச் சென்றாலும் இவன் நம்மை விடமாட்டான். இவனை நல்வழிப்படுத்திச் சிவனோடு உறவுகொள்ள வைப்பது ஒன்றே வழி" என எண்ணினர்.

தட்சனிடம் சென்று, "மன்னனே, பார்வதி உன் மகள் அல்லவா? சிவபெருமான் உனக்கு மருமகன் அல்லவா? குற்றம் பார்க்கின் சுற்றமும் சூழுமா? அவர்கள் அப்படிச் செய்தாலும் உன் தகுதிக்கு அவர்களை இகழ்தல் அழகல்ல. மேலும், சிவபெருமான் அளித்த வரங்களை மறந்துவிட்டாயா? நீ அவர்களைக் கண்டு வருதலே உயர்ந்தது" என்றனர்.

தக்கன் தேவர்களின் வார்த்தைகளால் சமாதானம் அடைந்தான். அவர்கள் கூற்றிலும் நியாயம் இருக்கிறது என்று கோபம் தணிந்தான்.

ஒரு நாள் தனது அணுக்கத் துணைவர்களோடு கயிலையை அடைந்தான். சிவபெருமான் ஆலய வாயிலில் காவல் புரிந்து வந்த பூதர்கள் அவனை உள்ளே செல்லவிடாது தடுத்தனர்.

அவன் பூதர்களே என் மகளையும் என் மருமகனையும் காண வந்தேன் என்றான். அவர்கள், "தட்சனே எமது தலைவனை இகழ்ந்தாய் அவனிடம் எல்லையற்ற வரங்களைப் பெற்று வாழும் நீ நன்றி மறந்தவன், உன்னைக் காண்பதே பாவம். நீ சிவனுக்கு அன்புடையவனாகி அவரை வணங்குவதாயின் இங்கு நில். உறவு முறை கூறி, அகங்கார வார்த்தைகள் பேசுவதாயிருப்பின் இப்பொழுதே இவ்விடம் விட்டு அகலுக" என்றனர்.

அதைக்கேட்ட தட்சனுக்குச் சினம் பொங்கியது. பூதர்களை நோக்கி "அறிவற்றவர்களே நான் பேரரசன், என்னை பிரம்மாதி தேவர்களும் வணங்கி ஏவல் செய்யக் காத்திருக்கின்றனர். அப்படியிருக்க பித்தனாகிச் சுடலையில் திரியும் சிவனை நான் வணங்குவதா? இனி எக்காலத்தும் அவனை மதியேன். வணங்கேன். எம்மை நீர் தடுக்கவில்லை. எம் மகளும் மருகனும் தடுத்ததாகவே எண்ணுகிறேன். இனி, அந்தப் பித்தனை எவரும் வணங்காமலும் புகழாமலும் இருக்கும்படிச் செய்வதுடன், இகழும்படியும் செய்வேன். இது உறுதி" என்று கூறித் தன்னகர் திரும்பினான்.

தலைநகருக்குக்குத் திரும்பிய தட்சன் தேவர்களை அழைத்து நிகழ்ந்ததைக் கூறினான். "இனி நீங்கள் சிவனை வழிபடுவதை விடுங்கள், அவனை மதிக்கவும் வேண்டாம். இது எனது ஆணை! என்றான். அவனுக்கு அஞ்சிய திருமால், பிரமன் உள்ளிட்ட தேவர்கள் "அப்படியே ஆகட்டும்" என்றனர்.

காலங்கள் கடந்தன. வேள்விவேட்பதும் வேதம் ஓதுவதும் நின்றன. ஒருநாள் பிரம்மதேவன் சிவபெருமான் அருளால் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணினான். அதற்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்துக் கொண்டான்.

அவனுடைய அணுக்கத் தொண்டர்கள் "சிவனை அழைக்காமல் வேள்வி செய்ய இயலுமா? அழைத்தால் தட்சன் ஏற்பானா" என்றனர். பிரம்மதேவன். "அன்பர்களே! வேள்வியில் சிவனை அழைத்து அவருக்குரிய அவிசை அளிப்பேன். என் உயிர் போவதானாலும் பரவாயில்லை. இது உறுதி" என்று கூறி "மனோவதி" எனும் நகரில் வேள்விச்சாலையை அமைத்தான்.

தனது புதல்வர்களை அழைத்து "நீங்கள் முறைப்படி திருமால் முதலிய தேவர்களை அழைத்து வருக" என்றான். தானே நேரில் கயிலை மலைக்குச் சென்று, தான் செய்யும் வேள்வியில் கலந்து கொண்டு அவிர்பாகத்தைப் பெற நேரில் வரவேண்டுமென்று சிவபிரானை வேண்டினான்.

அவர் பிரம்மனிடம் "அன்பனே! என் சார்பில் நந்தியம்பெருமானை உனது யாகத்திற்கு அனுப்புகிறேன். அவருக்குச் சிறப்புக்களைச் செய்து அவிர்பாகம் வழங்குக. நானே ஏற்றுக் கொண்டதாக மனம் நிறைவு கொள்" என்று கூறி வரம் தந்து விடை கொடுத்தார்.

பிரம்மன் உரிய நாளில் வேள்வியை வேதவிதிப் படிச் செய்த தொடங்கினார். அதில் கலந்து கொள்ளத் திருமால் பரிவாரங்களுடன் வந்தார். பிரமன் அவரை உரிய ஆசனத்தில் அமர்த்திப் பூசை செய்தான். தட்சன் தன் பரிவாரங்களுடன் வந்தான். பிரம்மன் அவனை அழைத்து உரிய ஆசனத்தில் அமர்த்திக் கௌரவித்தான். யாகத்தைத் தொடங்கிச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தான். அப்போது நூறுகோடி பூதர்கள் இன்னிசை முழக்க நந்திதேவர் யாகசாலைக்கு எழுந்தருளினார். பிரம்மன் அவரை எதிர்கொண்டழைத்து மைய ஆசனத்தில் அமர்த்திப் பூசித்தான்.

அதைக் கண்ட தட்சன் மிகுந்த கோபம் கொண்டான். பிரம்மனை நோக்கி, "அறிவற்றவனே! நீ, என் தந்தையாக இருப்பதால் உன்னை விடுத்தேன். கயிலையைக் காவல்காக்கும் இந்த நந்தியை எங்களுக்குச் சமானமாக அமர்த்தினாய். என்னை மீறி நீ யாகம் செய்யப்போவதைச் சிவனுக்கு அறிவித்தாய். அவன் எனக்கு அஞ்சி இங்கு வராமல் தனது பணியாளனை அனுப்பினான். நீயும் வெட்கமற்று அவனை வரவேற்று யாகம் செய்கிறாய். இதை எம்மால் ஏற்க முடியாது. இந்த யாகத்தை இத்தோடு நிறுத்து,

கடுகாட்டை இடமாகக் கொண்டு பூதங்களோடு அலையும் சிவனை இனி அறவே மதிக்காதே. எந்த வேள்விகளிலும் அவனுக்கு அவிர்ப்பாகம் அளிக்காதே. வேதவாக்கியங்களை மாற்றி, தேவர்களின் தலைவனாகத் திருமாலை முதன்மைப்படுத்தி அவனைப் போற்று, சிவனைப் பெரியவன் என்று கூறும் வேதங்களை உடனே அழித்துவிடு'' என்றான்.

நந்திதேவர் இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கோபித்தார். அவருடைய பொங்கும் சினத்தைக் கண்டு அனைவரும் அஞ்சினர். நந்தி தட்சனைநோக்கி, "மூடனே! சிவனை இகழ்ந்த வாயை இப்போதே கிழிப்பேன். வந்த இடத்தில் அப்படி செய்வது முறையுமன்று. கடவுளின் ஆணையுமன்று. அதனால் நீ பிழைத்தாய். சிவனிடமிருந்து பெற்ற வரங்களால் வாழும் நீ தன்னிலை மறந்து நன்றி கொன்று பேசுகிறாய். சிவபெருமானை ஏற்காத வேள்வி. ஒரு வேள்வியா? அவரை விட்டால் தலைவனாகும் தகுதி எவருக்கு உள்ளது.

நீ திருமாலை வேள்வித் தலைவனாக்குக என்றாய். சிவனை விலக்கி வேள்வி செய்வார் தலை அற்றுவிழும். இது எமது ஆணை! உனது சுற்றமும் நீயும் ஒருநாள் மரணத்தைத் தழுவி மீண்டும் எழுந்து உண்மையை உணர்வீர்கள்'' என்று கூறிக் கணங்களுடன் கயிலைக்குத் திரும்பினார். சிவபெருமானிடம் நிகழ்ந்ததைக் கூறிவிட்டுத் தாம் காத்து நிற்கும் கிழக்கு வாயிலை அடைந்து அப்பணியைத் தொடர்ந்தார். தேவர்கள் மனம் சோர்ந்தனர். ஒருவாறு தேறி தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

காலங்கள் கழிந்தன.

நீண்டகாலம் முனிவர்களும், தேவர்களும், அந்தணர்களும் வேள்விகளைச செய்யாது விட்டனர். ஒருநாள் தட்சன் தம்மிடம் வந்த தேவர்களை நோக்கி, "ஏன் நெடுங்காலமாக வேள்விகளைச் செய்யவில்லை'' என்றான். அவர்கள் அவனைப் பணிந்து, "அரசே! பிரம்மன் செய்த வேள்வியில் நீ சிவனுக்கு அவிர்பாகத்தைக் கொடுக்காதே என்றாய். அதனால் சினந்த நந்தி கடுஞ்சாபம் அளித்துள்ளார். அதற்கு அஞ்சியே நாங்கள் யாகங்களைச் செய்வதில்லை என்றனர்.

அதைக் கேட்ட தட்சன், "தேவர்களே! ஏன் அஞ்சுகிறீர்கள். நானே யாகம் செய்து காண்பிக்கிறேன்.அதைக் கண்டு நீங்கள் மீண்டும் விரும்பிய யாகங்களைச் செய்து மகிழ்க'' என்றான்.

பின்னர், தேவ தச்சனான விசுவகர்மனை அழைத்து "கங்கையாற்றின் கரையில் **"கனகலகம்''** என்னும் இடத்தில் வேள்விச்சாலை அமைத்துத் தருக. யாம் மிகப்பெரிய வேள்வியைச் செய்யப் போகிறோம்'' என்றான்.

அதன்படியே விசுவகர்மன் மிகப்பெரிய நகரை நிர்மாணித்து அதன் நடுவில் வேள்விச் சாலையை அமைத்தான் தட்சன் சங்கநிதி, பதுமநிதி கற்பகவிருட்சம். காமதேனு ஆகியவற்றை அழைத்து வேள்விக்கு வேண்டிய பொருள்களைத் தருக என்றான். அவைகள் அனைத்தையும் தந்தன. தட்சன் உரிய தூதுவர்களை உலகிலுள்ள அனைவரையும் யாகத்துக்கு அழைக்கும் படிச் செய்தான்.

ஒரு நன்னாளில் முப்பதினாயிரம் அந்தணர்களைக் கூட்டி யாகத்தைத் தொடங்கினர். பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்கள், வசுக்கள், மருத்துக்கள், நட்சத்திர தேவதைகள், வித்தியாதரர்,

சித்தர், இயக்கர், கின்னரர், கிம்புருஷர், அசுரர் முதலான அனைவரும் அங்குக் கூடினர். தட்சன் அனைவரையும் அழைத்து உரிய ஆசனத்தில் அமர்த்தி உபசரித்தார்.

தூதுவர்களை அழைத்து "நம் அழைப்பை ஏற்று வந்தவர்கள், வராதவர்கள் யார்? என்று கேட்டான். அதற்கு அவர்கள் "சனகாதியர் நால்வரும், சப்தரிஷிகளாகிய அகத்தியர், அத்திரி, வசிட்டன், பிருகு, ததீசி, பராசரன், துருவாசார் ஆகிய எழுவரும் தவிர நாம் அழைத்த எல்லோரும் இங்கே வந்துள்ளனர். வராமல் நின்றுபோன அவர்கள் சிவனுடைய பக்தர்கள். அவரிடம் மாறா அன்பு கொண்டவர்கள். அவர்கள் நமது தூதுவர்களை இகழ்ந்து பேசி அனுப்பியதுடன் இங்கே வரவும் இல்லை" என்றனர்.

அந்தவேளையில் மேலே வரவில்லை எனக்குறித்த முனிவர்களில் ஒருவரான ததீசி முனிவர் சீடர்கள் சூழ அங்கு வந்தார்.

தட்சன் தம் மனத்திற்குள் இவர் சிவனிடம் அன்பு கொண்டவர் என்றாலும் தனக்கு அஞ்சி இங்கே வந்துள்ளார் என்று மகிழ்ந்து அவரை அழைத்து ஆசனமளித்து அமர்த்தினான். அம்முனிவர் அவனை நோக்கி, "தட்சனே, சிவனே யாகத்தின் உண்மையான தலைவன் அவரைப் புறக்கணித்துச் செய்யும் இந்த யாகம் ஒழுங்காக நடைபெறாது. உனது எண்ணம் கொடியது என்றார். வேதங்கள் கூறும் அனேக மொழிகளால் சிவனது முழுமுதல் தன்மையை விளக்கினார். சிவன் அளவிலா ஆற்றலை உடையவன். முன்பு திரிபுராதிகள் சலந்தரன், யமன், அந்தகன் முதலியோரை வினாடியில் சங்கரித்தவர். தாருகாவனத்து ரிஷிகள் செய்த மந்திர அபிசார வேள்வியை ஒடுக்கியவர். தேவர்களின் வாழ்வுக்காகக் கடலில் பிறந்த நஞ்சை உண்டவர் என்று பலபடச் சிவபெருமானின் வீர பராக்கிரமங்களை விரித்து ஓதினார். அதைக் கேட்டபின்னும் தட்சன் மனம் மாறவில்லை முனிவரை நோக்கி "நான் எண்ணியபடியே இந்த யாகத்தைச் செய்வேன் இது உறுதி". என்றாள்.

ததீசி கோபம் கொண்டார். "தக்கனே! உனது யாகசாலை அழிக" என்றார். அங்கிருந்தவர்களை நோக்கி "வேதம் வல்ல அந்தணர்களே, உண்மையை அறிந்திருந்தும் எடுத்துக் கூறாமல் சிவநிந்தனைக்கு ஆளானீர். நீங்கள் பூமியில் பிறந்து வேதத்திற்குப் புறம்பாக வாழ்ந்து துன்புறுக" என்று சபித்தார். கோபம் மாறாது அவ்விடம் விட்டு அகன்றார்.

அவர்சென்றதும் பலதுர்ச்சகுனங்கள் தோன்றின. தட்சன் மனைவியின் தாலி தானே கழன்று விழுந்தது. வேள்வித் தூணின் மீது காக்கைகளும் கழுகுகளும் அமர்ந்தன. கொடி அறுந்து வீழ்ந்தது. என்றாலும், அவன் பிடிவாதத்துடன் யாகத்தை நடத்தத் தொடங்கினான்.

யாகத்திற்கான மகா சங்கல்பம் செய்து கொண்டான். உரிய தானங்களைச் செய்தான். மங்கல ஒலி முழுங்கியது. அந்தணர்கள் யாகத்தீயை எழுப்பினர். தட்சன் வேள்வித் தீயில் அனைத்து தேவர்களையும் அழைத்து மந்திரத்தால் உபசரித்து அவிசை அளித்தான். அந்த அவிசு அமிர்தத்தைப்போல சுவையுடையதாக இருந்தாலும் சிவபெருமானைப் போற்றாது உண்டதால் நஞ்சை ஒத்தாயிற்று. வேள்வி மேலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நாரதமுனிவன், தன் சகோதரனாகிய தட்சன் செய்யும் வேள்வியைக் கண்டு கயிலைக்குச் சென்று சுவாமி தங்களை விலக்கிவிட்டு தட்சன் யாகம் புரிகின்றான். இது என்ன புதுமை என்றார்.

அவரால் யாகத்தின் பெருமைகளை அறிந்த தாட்சாயணி சிவபெருமானிடம் "அன்பரே!

எம் தந்தை ஆற்றும் வேள்வியைக்காண விழைகிறேன். விடை தருக". என்றாள். சிவன், "உமையே! தட்சன் மிகுந்த அகங்காரத்துடன் உள்ளான். அவன் உன்னை மதிக்கமாட்டான். அங்கே சென்று வீணாக அவமானம் அடையாதே" என்றார்.

உமாதேவி, "சுவாமி அவன் செய்த பிழைகளை மன்னியுங்கள். நானே அவனைத் திருத்த முயல்கிறேன். நான் விரைந்து வேள்விச்சாலை சென்று அவனுக்கு உண்மையை உணர்த்தி மீள்வேன்" என்றாள். பலமுறை மன்றாடியதால் சிவபெருமான் அவளிடம், "நீ தனியே சென்று வருக" என்று கூறி விடைகொடுத்தார்.

உமாதேவி தமது சேடிகளும் கணங்களும் சூழச் சோமாநந்தி தொடரப் புஷ்பக விமானத்தின் மீதேறித் தட்சன் வேள்விச்சாலை அடைந்தாள்.

அவளைக் கண்ட தட்சனுக்குக் கோபம் தலைக்கேறியது. "தாய் தந்தையற்ற சிவனின் மனைவியான நீ ஏன் இங்கு வந்தாய்? உன்னை நான் அழைத்தேனா? உடனே இவ்விடம் விட்டுச் செல்" என்றான்.

அதைக்கேட்ட உமாதேவி, "தந்தையே! எமது தங்கைகளுக்கும் அவர்தம் கணவர்களுக்கும் உரிய சிறப்புக்களைச் செய்தாய். எங்களை மறந்தாய். இது முறையல்ல. வலியவந்த என்னையும் அவமதிக்கின்றாய். இது நல்லதல்ல. பெருங்குற்றம்" என்றாள்.

அதைக்கேட்ட தட்சன் முன்னிலும் கோபம் கொண்டான். "பெண்ணே! பேயோடு ஆடும் பித்தனுக்கு மனைவியானாய். அவனோடு சேர்ந்து நீயும் அகந்தை கொண்டு என்னை இகழ்ந்தாய், உனது தங்கையர்களும் அவர்களது கணவன்மார்களும் எனக்கு இனியவர்கள். அதனால் அவர்களுக்குச் சீர் செய்தேன். மும்மூர்த்திகளும் எம்மைப் புகழ்கின்றனர். நீயும் உன் கணவனும் எம்மை மதிப்பதில்லை. அதனால் உங்களை வெறுக்கின்றேன். உன் கணவனுக்குச் சிறப்பும், அவிர்ப்பாகமும் இனிக் கிடையாது. அவனைப் புகழும் வேதவாக்கியங்களை எனது ஆற்றலால் மாற்றுவேன். நீ இவ்விடம் விட்டு உடனே அகன்று விடு" என்றான்.

உமாதேவியார் அவ்வார்த்தைகளால் உள்ளம் கொதித்தாள். அவளுடைய கோபாவேசத்தைக் கண்டு மூன்று உலகமும் நடுங்கியது. அதைக் கண்டு தேவர்களும் யாவரும் அஞ்சினர். அவ்வேளையில் விமலை எனும் தோழி, "அம்மா உனது கோபம் இங்குள்ளவர்களை நொடியில் அழித்துவிடும். வந்த இடத்தில் இம்மாதிரிச் செய்ய வேண்டாம். பொறுத்தருள்க" என்றாள்.

சற்றுத் தணிந்த தேவி, "தந்தையே நீ என்னை அவமதித்ததைக்கூட நான் பெரியதாகக் கருதவில்லை. இறைவனின் ஒப்பற்ற ஆற்றலை அறியாது இகழ்ந்து பேசிவிட்டாய். வேதங்களும் ஆகமங்களும் "சிவ" என்னும் மந்திரத்தை மேலாகப் பேசுகின்றன. அவற்றிற்கு உரியவரான சிவனை அவமதித்தாய். இதனால் நீ பெரியதண்டனையை அடையப் போகின்றாய், நான் என்ன செய்ய முடியும்." என்று கூறிவிட்டுத் தம் கணங்களுடன் கயிலைமலைக்குத் திரும்பினாள்.

சிவபெருமானைப் பணிந்தாள், "பெருமானே, தக்கன் உம்மை மிகவும் இகழ்ந்தான், அவனுக்கு அறிவு புகட்டும் வகையில் அந்த வேள்வியை அழிக்க வேண்டும்" என்றாள். அதைக் கேட்டும் சிவபெருமான் மௌனமாக இருந்தார். அதைக் கண்டு வருத்தமுற்ற தேவி மீண்டும் பணிந்து "உங்களுக்கு இதில் விருப்பு வெறுப்பு இல்லாவிட்டாலும் எனக்காகவேனும் அந்த யாகத்தை அழித்தருளுக" என்று கூறித் தவத்தில் ஆழ்ந்தாள்.

நீண்டநேரச் சிந்தனைக்குப் பிறகு சிவபெருமான் தட்சனுடைய யாகத்தை அழிக்க எண்ணம் கொண்டார். அவர் கண்டத்திலிருந்து கருத்தவிஷத்தின் ஒரு கூறு அவருடைய நெற்றிக்கண் வழியாக குமாரனாக வெளிப்பட்டது. அக்குமாரன், ஆயிரம் முகங்களும் இரண்டாயிரம் கரங்களும், அவற்றில் உரிய ஆயுதங்களையும் கொண்டவனாக இருந்தான். மணிமாலைகள், ஆமைஓட்டு மாலைகள், பன்றிக் கொம்பு மாலைகள், கபால மாலைகள் ஆகியவற்றை அணிந்திருந்தான். சிங்க முகங்களைக் கோர்த்த மாலையுடன் பாம்பாலான கச்சம் அணிந்திருந்தான். அவனைக்கண்டு பூத, வேதாள கணங்கள் ஆர்ப்பரித்தனர்.

அதேவேளையில் உமாதேவியின் கோபத்தினின்று வீரபத்திரனைப் போலவே ஓராயிரம் முகங்களும் ஈராயிரம் கரங்களும் கொண்ட பத்ரகாளி தோன்றினாள். மகா அஸ்திரதேவர் அஸ்திரதேவியாக விளங்கிய அவர்கள் சிவசக்தியரைப் பணிந்தனர். அவர்களைச் சிவசக்தியர் ஆசி கூறித் தக்கன் வேள்வியை அழித்து மீள்க" என்றனர்.

வீரபத்திரரும் - பத்திரகாளியும் தம்முடைய மூச்சுக்காற்று வியர்வை ஆகியவற்றினின்று எண்ணற்ற சேனைகளைப் படைத்தனர். அந்தச் சேனைகளின் ஆரவாரத்தால் உலகம் நடுங்கியது, அவர்கள் கயிலை மலையை வலம்வந்து வணங்கி, அதிர நடந்து வேள்விச் சாலையை அடைந்தார். யாகசாலையைச் சுற்றிவளைத்துப் படைக்கலங்களை ஒலித்து வீரமுழக்கம் செய்தனர்.

அவர்களைக் கண்டு யாகசாலையில் குழுமி இருந்தவர்கள் அஞ்சி நடுங்கினர். தட்சன் மனம் பதை பதைத்தான். யாகம் அழிவது உறுதி என்று உணர்ந்தான். என்றாலும், வீரபத்திரனை அழைத்து "நீ யார்? எங்கு வந்தாய்? உனக்கு இங்கு என்ன வேலை? உனக்கு வேண்டுவது யாது?" என்றான்.

வீரபத்திரர், "மன்னனே, நான் மகாமகிமையை உடைய சிவபெருமானின் குமாரன். உமது யாகத்தில் அவருக்குச் சேரவேண்டிய அவிர்பாகத்தைப் பெற வந்தோம். அதை அளிப்பாய்" என்றார். தட்சன் பெரியதாக நகைத்து, "வீரா, ஆதிவேதங்கள் உமது தலைவனாகிய சிவபெருமானுக்கு அவிர்பாகம் அளிக்க வேண்டுமென்று கூறுமாயின் நான் கொடுப்பதில் தடையில்லை" என்றான்.

அப்போது வீரபத்தரர் அங்கிருந்த வேதங்களை நோக்கினார். அவை அலறி "நாங்கள் அளிக்க வேண்டாமென்று சொன்னதுண்டா?" என்று கூறி மான்வடிவம் கொண்டு ஓடின.

பலவாறு எடுத்துச் சொல்லியும் உரிய மதிப்பைத் தராததால் வீரபத்திரர், தட்சனின் யாகசாலையை அழிக்கத் திருவுள்ளம் கொண்டார். அதைப் பூதர்களுக்கும் சேனைகளுக்கும் கூறினார். அவருடைய சேனைகள் யாகசாலைக்குள் புகுந்து அதை அழிக்கத் தலைப்பட்டனர்.

வீரபத்திரர் பிரம்மனை இழுத்து அவன் தலை குலுங்கக் குட்டினார். அதைத் தடுக்க வந்த சரஸ்வதியின் மூக்கையும் மார்பையும் அரிந்தார்.

திருமால் கோபம் கொண்டு சக்ராயுதத்தை வீரபத்திரர் மேல் விடுத்தார். வீரபத்திரர் அதைப்பற்றி தம்மார்பில் பதக்கமாக அணிந்து கொண்டார். திருமாலைத் தண்டத்தால் அடித்து வீழ்த்தினார். அவர் மயங்கி வீழ்ந்தார். அடித்த அடியில் கருடன் வீழ்ந்து மாண்டான்.

யாகசாலைக்குக் காவநின்ற யமனைக் கீழே தள்ளி அவன் அலற அலறக் கால்களை வெட்டினார். யக்ஞதேவனின் இரட்டைத் தலைகளை ஒருசேர வெட்டினர். பகன் எனும் சூரியன் அவிசைப் ஆசையோடு பார்த்ததால் அவன் கண்களைப் பிடுங்கினார். பூஷன் என்னும்

சூரியனின் தாடையில் அடித்துப் பற்களை உடைத்தார். இதைக் கண்ட இந்திரன் குயில் வடிவம் கொண்டு ஓடினான். விண்ணில் நின்ற பூதர்கள் அவனைப் பிடித்து இறக்கைகளை வெட்டிப் பூமியில் எறிந்தனர்.

யாககுண்டத்தில் ஒளிந்து நின்ற அக்கினியைப் பிடித்து இழுத்து வந்து அவிசைத் தேவர்களுக்கு அளித்த அவனுடைய ஏழு கரங்களையும் வெட்டினர். அஷ்டதிக்குப் பாலகர்களை உள்ளம் சோரும்படி அடித்துத் துவைத்தனர். வாயுவை மழுவால் தாக்கினர். குபேரனைச் சூலத்தில் குத்தித் தூக்கினர். அசுரேந்திரன் கொல்லப்பட்டான்.

நிருதியைப் பிடித்து அவன் தோலை அறுத்தனர். வருணனின் பருத்த வயிற்றைக் கிழித்து அவனுடைய குடல்களை மாலையாக அணிந்து கொண்டு கூத்தாடினர். குரங்காட்டியின் இஷ்டப்படி ஆட்டுவிக்கப்படும் குரங்கு போலக் குபேரன் சிறுமைப்படுத்தப்பட்டான்.

பூத, வேதாள கண வீரர்கள் யாகசாலையிலிருந்த கங்கா தீர்த்தத்தைப் பருகிக் குடங்களை உருட்டினர். யாக குண்டத்தையும் வேதிகைளையும் இடித்துத் தள்ளினர். அந்த யாகத்தை அதாஹதம் செய்தனர். எங்கும் ரத்தவெள்ளம் ஓடியது வேள்விப் பொருட்கள் நாசமாயின.

தன் கண்முன்னேயே யாகசாலை அழிந்ததைக் கண்டு தட்சன் வருந்தினான். யாகத்தில் கலந்து கொண்டவர்கள் பட்டபாட்டைப் பார்த்து அச்சமுற்றான். உண்மையை உணர்ந்தான். “இனி என்ன பயன்?” என்று திகைத்து நின்றான்.

வீரபத்திரர், “தட்சனே! இப்போதாவது சிவபெருமானுக்கு உரிய அவிர்பாகத்தை அளி” என்றார். தட்சன் எதுவும் பேசாது நின்றான்.

வீரபத்திரன் கடுங்கோபம் கொண்டார். “தட்சனே நீ சிவநிந்தனை புரிந்தவன். உன்னைத் திருத்துதல் இயலாது. உன்னைத் தண்டிப்பதே நல்லது” என்று கூறி வாளை ஓங்கி அவன் தலையை வெட்டி வீழ்த்தினார். அது பூமியில் விழுவதன் முன்னே அதனைப்பற்றி அக்னியிடம் கொடுத்து “உண்க” என்றார். அவனும் உண்டு அந்தத் தலையை அழித்தான்.

அந்த வேளையில் அழுது அரற்றியவாறே தட்சனின் மனைவி அங்குவந்தாள் பத்தரகாளி பாய்ந்து வேதவல்லியின் காதுகளை அறுத்தாள். பூதகணங்கள் அங்குவந்த பெண்களின் தலைகளை வெட்டி விளையாடினர்.

அந்த வேளையில் மயக்கம் தெளிந்து எழுந்த திருமால் மிகுந்த கோபத்துடன் வீரபத்திரனை நோக்கினார். அவனிடம் செல்லக் கருடனை அழைத்தார். கருடன் போரில் மாண்டு விட்டதால் தனது கோபத்தையே கருடனாக்கினார். அதன் மீதேறி வீரபத்திரன் முன் வந்தார். தனது பாஞ்சசன்யத்தை முழங்கினார்.

அந்த ஒலியைக் கேட்ட வீரபத்திரன் பெருஞ் சிரிப்பு சிரித்தார். திருமாலை நோக்கி உன்னை இப்பொழுதே கொல்வேன் என்றார். திருமால் அவர் மீது போர் தொடுத்தார். மாயையால் ஆயிரம் ஆயிரம் விஷ்ணுக்களாகி நின்றார். அவருடைய மாயைக் கண்டு பூதகணங்கள் திகைத்தனர். மாய விஷ்ணுக்களை வீரபத்திரர் ஒரு நொடியில் எரித்தார். விஷ்ணு அஞ்சினார். என்றாலும், ஏராளமான படைக்கலங்களை எறிந்தார். வீரபத்திரர் அவர் ஏவிய படைக்கலங்களை விலக்கி அவரைப் பிடித்து தலையை வெட்ட வாளை ஓங்கினார்.

"கோபத்தை விடுக" என்ற அசரீரி கேட்டு, வீரபத்திரர் சினம் விடுத்து நின்றார். திருமால் பிரம்மா உள்ளிட்ட எஞ்சிநின்ற தேவர்கள் அவருடைய திருவடியில் வீழ்ந்து தம்மை மன்னிக்கும்படி வேண்டினர்.

சிவபெருமான் பார்வதி தேவியுடன் விடை வாகனத்தில் அங்கே தோன்றினார். அங்கங்களையும் உயிர்களையும் இழந்து கோரமாக இறந்து கிடக்கும் தேவர்களையும் அசுரர்களையும் கண்டனர்.

அனேக தேவர்கள் சிவநிந்தனை பாவத்தால் இறந்தபின் பேயாகித் திரிந்தனர். உமாதேவி, சிவபெருமானிடம் "மாண்டவர்களை எழுப்பி மன்னித்தருளுக" என்று வேண்டினாள். அவரும் "அப்படியே ஆகட்டும்" என்றார்.

அனைவரும் பாவங்கள் கழுவப்பட்டும் புதியவர்களாய் மீண்டெழுந்தனர். அவர்கள் சிவசக்தியரையும் வீரபத்திரரையும் பணிந்து வாழ்த்தினர். தக்கன் மட்டும் பிழைத்தெழாததைக் கண்டு அவனையும் எழுப்புக என்றனர். அவனது தலை அழிக்கப்பட்டுவிட்டதால் அவன் உயிர்பெற்றெழவில்லை. வீரபத்திரர் யாகப் பசுவாக நின்ற செம்மறி ஆட்டின் தலையை வெட்டித் தட்சனின் உடலில் பொருத்தி அவனை உயிர்ப்பித்தார்.

அவன் உயிர்த்தெழுந்து எல்லோரையும் வணங்கித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். எல்லோரும் அவனுக்கு ஆசி கூறினார். அனைவரும் விடைபெற்றுக் கொண்டு தத்தம் உலகம் சேர்ந்தனர்.

சிவபெருமானும் உமாதேவியாரும் வீரபத்திரர் பத்திரகாளியை அழைத்தனர். அவர்களுக்கு அருளாசி புரிந்தனர். சிவபெருமான் அவர்களுக்காக ஓர் புதிய புவனத்தைப் படைத்தளித்தார் "அங்கு சென்று வாழுங்கள்" என்றார்.

வீரபத்திரர் பத்திரகாளியுடன் சிவன் தந்த தேரில் ஏறித் தன்னுலகம் சேர்ந்தார். அங்குச் சிவபூசை செய்து கொண்டு இருவரும் சிறப்புடன் உள்ளனர்.

## தட்ச சங்காரக் கதைகள்

சிவபெருமான் தட்சனுடைய யாகத்தை அழித்துத் தேவர்களைத் தண்டித்துப் பின்னர் அவர்களுக்கு அருள்புரிந்த நிகழ்ச்சி மிகமிகத் தொன்மையான காலத்தில் நடந்ததாகும். ஆதலால் வேதம், புராணங்கள், மகாபாரதம் முதலிய தொன்மை நூல்கள் தொடங்கி இன்றுவரை அது பற்றிய குறிப்புக்களைக் காண்கின்றோம். மகா ஸ்காந்தம், சிவமகாபுராணம், பாகவதம், காசிக்கண்டம் முதலான நூல்களில் இக்கதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழில் கந்தபுராணம், தட்சயாகப்பரணி, திருக்குற்றாலப் புராணம், பறியலூர்ப் புராணம் முதலியவற்றில் இந்த வரலாற்றை விரிவாகக் காணலாம்.

அங்காள பரமேசுவரியின் பெருமைகளைக் கூறும் கதைப் பாடல்களிலும் தட்சயாக பங்கம் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானைப் போற்றும் நூல்களில் அட்ட வீரட்டமும் அதிலொன்றாக தட்ச சம்ஹாரமும் பேசப்பட்டுள்ளது.

காலத்திற்கேற்ப இந்நிகழ்ச்சிகள் விரிவுபடுத்தியும், சுருக்கியும் கூறப்பட்டுள்ளன. இது வீரம் செறிந்த கதையாதலின் எதிர் காலங்களிலும் சிறப்பாகப் போற்றப்படும்.

## திருமால் தொடர்பான

# சிவ பராக்கிரமங்கள்

ஒரு சமயம் பிருகு முனிவர் வைகுண்டத்திற்குச் சென்றார். அவரைத் திருமால் முறையாக வரவேற்று உப சரிக்கவில்லை. கோபம் கொண்ட முனிவர் திருமாலைப் பலபிறவிகள் எடுத்து உழலும்படிச் சாபமிட்டார். வருந்திய திருமால் சிவபெருமானை வழிபட்டார். சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்து அவர் பத்து பிறவிகள் எடுத்தால் போதும் என்று கூறினார், அந்தப் பத்திலும் ஐந்து முழுமையாகவும் மற்றைய ஐந்து குறுகியகால எல்லையில் இருக்கவும் அருள்புரிந்தார்.

அதன்படியே, திருமால் குறுகிய கால அவதாரமாக எடுத்தவை மச்சம், கூர்மம், வராகம், சிம்மம், வாமனம் என்ற ஐந்தாகும். நெடிய கால அவதாரங்கள் பரசுராமர், இராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கி என்ற ஐந்தாகும். நெடிய அவதாரங்களில் முதல் நான்கு நடந்துவிட்டன. ஐந்தாவதான கல்கி அவதாரம் எடுக்கப்படவில்லை. நான்கு நெடும் பிறவிகளிலும் அவர் சிவதீட்டை பெற்றுச் சிவபூசை செய்ததால் 'அவருக்குத் துன்பம் உண்டாக வில்லை. குறுகிய கால எல்லை அவதாரங்களில் அகங் காரம் கொண்டு அனைவரையும் அழித்ததால் சிவபெரு மானால் தண்டிக்கப்பட்டார். அப்போது சிவபெருமான் கொண்ட வீரத்திருவுருவங்கள் மச்சாரி, கூர்மாரி, கோலாரி, சிம்ஹாரி, வாமனாரி என்று போற்றப்படுகின்றன.

### 2.1.13. மச்சாரி

ஆதியுகத்தில் பிரமனிடமிருந்து வேதங்களைத் திருடிக்கொண்ட சோமுகன் எனும் அசுரன் கடலுக்கடி யில் சென்று ஒளிந்து கொண்டான். திருமால் சுறாமீனாக அவதாரம் எடுத்துக் கடலுக்கடியில் சென்று அவனைக் கொன்று வேதங்களை மீட்டு, பிரம்மனிடம் அளித்தார். இதனால் அகங்காரம் மேலிட்டு உயிர்கள் கலங்கக் கடலைக் கலக்கி விளையாடினார். அனைவரும் சிவபெருமானிடம் சரணடைந்து தன்னைக் காக்குமாறு வேண்டினர். சிவன் வலைஞனாகி அவரைப் பிடித்து, அவருடைய கண்களைப் பறித்துத் தனது மோதிரத்தில் பதித்துக் கொண்டார். கண்களை இழந்தத் திருமால் சிவபெருமானைத் துதித்தார். சிவபெருமான் அவருக்கு முன்னிலும் பிரகாசமான கண்களை அளித்தார். திருமாலை அடக்கிக் கண்களைப் பறித்த பெருமானின் கோலம் மச்சாரி எனப்பட்டது (இதைக்குறிக்கும் அரிய கதைச் சிற்பம் கபாலீசுவரர் ஆலய ராஜகோபுரத்தில் உள்ளது).

### 2.2.14. மச்சாரி

மற்றுமோர் சமயம் மீன் வடிவம் கொண்ட திருமால் கடலைக் கலக்கச் சிவபெருமான் பெரிய கொக்கு வடிவம் தாங்கித் தனது நீண்ட அலகால் திருமாலைப் பற்றி எடுத்தார். இந்த வீரச்செயலும் "மச்சஹரணம்" எனப்பட்டது. இதனைக் குறிக்கும் பெரிய புடைப்புச் சிற்பம் காஞ்சீபுரம் ஏகாம்பர நாதர் ஆலயத் தூணில் உள்ளது.

### 2.3.15. கூர்மாரி

அமுதம்வேண்டித் தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடல் கடைந்தபோது மத்தாகி நின்ற மந்திர மலையைத் திருமால் ஆமை வடிவம் கொண்டு தாங்கி னார். அதனால் அமுதம்பெறுவது எளியதாயிற்று. அவர் மனதில் தன் உதவியின்றி அமுதம் பெற்றிருக்க முடியாது என்ற அகங்கார எண்ணம் வளர்ந்தபோது கடலைக்கலக்கி உயிர்களை வருத்தினார். சிவபெருமான் (திருமாலாகிய) ஆமையின் முதுகு ஓட்டைப் பிய்த்து எடுத்து மார்பில் பதக்கமாக அணிந்து கொண்டார்.

### 2.4.16. வராகாரி

திருமாலின் மூன்றாவது அவதாரம் வராக அவதாரமாகும். இதில் அவர் பூமியைப் பாய்போல் சுருட்டிக் கடலுக்கடியில் ஒளிந்து கொண்ட இரணியாட் சன் என்ற அசுரனைக் கொன்று பூமியை முன்போல் நிலைப்படுத்தினார். இந்த அரிய செயலால் மிகுந்த அகங்காரம் கொண்டலைந்தார். சிவபெருமான் தண்டத் தால் புடைத்து அவருடைய கொம்பைப் பறித்துத் தன் மார்பில் தரித்தார். கொம்பை இழந்த திருமால் பல தலங்களில் சிவவழிபாடு செய்து பேறுபெற்றார். வராக அவதாரம் கொண்ட திருமாலை அடக்கிய சிவனுடைய திருக்கோலம் "வராகாரி" என்று போற்றப்படுகிறது.

### 2.5.17. சிம்ஹாரி

இரணியாட்சசனின் தம்பி இரணியகசிபு என்பான் பிரம்மனிடம் வரம்பெற்று மூவுலகிற்கும், சக்ரவர்த்தியா னான். அவன் தன்னைப் போற்றி வணங்காதவர்களைத் துன்புறுத்தினான். அவனுக்குப் பிறந்த பிரகலாதன் திரு மாலிடம் அளவற்ற பக்தி கொண்டவனாக இருந்தான். இரணியன் பிரகலாதனைப் பலவகையில் துன்புறுத்தி னான். பிரகலாதன் வேண்டியபடி திருமால் நரசிம்ம மாகத் தூணிலிருந்து வெளிப்பட்டு அவனைக் கொன்று குடலை மாலையாக அணிந்து உதிரத்தைக் குடித்தார். அசுரனின் இரத்தத்தைக் குடித்ததால் திருமாலின் உள் ளத்தில் அசுரகுணம் உண்டாகி அட்டகாசம் புரிந்தார். சிவபெருமான் வீரபத்திரரிடம் "திருமாலை அடக்கி வருக" என்றார். அவர் எட்டு கால்களும் வலிய சிறகு களும் சிங்கமுகமும் நரியின் வாலும் கொண்ட சரபப் பட்சியாகத் தோன்றித் தனது எட்டு கால்களாலும்



அவரைப் பற்றி அலகுகளால் கிழித்து அவருடைய தோலை உரித்துச் சட்டையாக அணிந்துகொண்டார். நரசிம்மரை அடக்க வீரபத்திரர் கொண்ட கோலம் சரபமூர்த்தி என்றும் சிம்ஹாரி என்றும் அழைக்கப் படுகிறது.

வாமனாரி (வடுக மூர்த்தி)

மூவுலகங்களையும் ஆண்டுவந்த மாபலிச் சக்கரவர்த்தியைத் தேவர்களின் வேண்டுகோளால் அழிக்க எண்ணிய திருமால் குறள்வடிவுடன் அவனுடைய வேள்விச் சாலைக்குச் சென்று தமக்குத் தவச்சாலை அமைக்க மூன்றடி மண் வேண்டுமென்றார். அவனும் அப்படியே ஆகட்டும் என்று தாரைவார்த்துத் தந்தான். வாமனனாக இருந்தவர் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓங்கி நின்று விண்ணை ஓரடியாலும் மண்ணை ஓரடியாலும் அளந்தார். மூன்றாவது அடி வைக்க இடம் இல்லாததால் தனது திருவடியை அவன் தலைமீது வைத்துப் பாதாளத்துதிற்கு அவனை அழுத்திவிட்டார். இந்தச் செயலால் உண்டான அகங்காரத்தால் அட்டகாசம் புரிந்தார். சிவபெருமான் பைரவ மூர்த்தியை அனுப்பினார். பைரவர் திருமாலின் தோலை உரித்துச் சட்டையாக அணிந்துகொண்டார். அதனால் சட்டைநாதர் என அழைக்கப்பட்டார். விண்ணை அளந்துநின்ற திருமாலின் தோல்சட்டை வடுக மூர்த்திக்கு முழங்கால் வரையே இருந்தது. வடுக மூர்த்திக்கு வாமனஹரர் என்றும் பெயராயிற்று.

## ஐம்பெரும் வேள்வி

தேவயக்ஞம் - இறைவழிபாடு (பக்தி)
ரிஷியக்ஞம் - பாராயணம் (அறிவு)
பிதிர்யக்ஞம் - பெற்றோர் முன்னோர் பணிவிடை (மரியாதை)
நரயக்ஞம் - மக்களுக்கு தொண்டு (பாசம், நட்பு, உறவு)
பூதயக்ஞம் - பிற உயிர்களிடம் அன்பு (காருண்யம்)

## அட்டமாசித்திகள் (8)

1. அணிமா
2. மகிமா
3. இலகிமா
4. கரிமா
5. பிராப்தி
6. பிராகாமியம்
7. வசித்துவம்
8. ஈசத்துவம்

# ஆசௌச விளக்கம்

"சம்ஸ்கார பராமரிச உண்மை யானும்
அதன் இன்மை கூறப்பட லானும்"
-பிரம்மசூத்திரம் 101 (1.3.36)

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"
-திருக்குறள் 298.

முனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரம சூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும் (சம்ஸ்காரம் - தூய்மைப்படுத்தும் கிரியை)

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டியவை தாமா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. இளைஞர்கள் நாங்கள் இவற்றைப் பரவாய் செய்வதில்லை என்கிறார்கள். அம்மா குளியாமல் வீட்டுக்குள் விடார் என்கிறார்கள். முக்கியமாக மரணவீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்டுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது என்று விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும் கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி துவந்தங்கள் தூய்மை செய்வதே இத்தொகுப்பின் நோக்கம்.

சைவ சமயிகளிடையே கோவிலுக்குப் போதல் விவாகம் போன்ற நற்கருமங்களின் போது எனக்கு ஆசூசம் என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.

'சுசி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி - அழுக்கு ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கின்றவனுக்கு அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும். தொடக்கை நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால் உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும். மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியைப் (அழுக்கை) போக்க

1. காலம்
2. ஸ்நானம் (நீராடல்)
3. காலம், ஸ்நானம் இரண்டும்

ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை. மேளஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோவிற் பூசை நிறுத்தப்படும். நற்காரியங்கள் நடைபெறா. ஊர்த் தொடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் தொடக்கு நீங்கிவிடும்.

இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச் சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும்.

இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய தொடக்குக் காப்போர் உறவு பற்றி மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு, காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம்.

பிறப்பு, இறப்பு, சுடுதல், பிரேதத்துக்குப் பின்னே செல்லல், காவுதல், அழுதல், ஆசௌசிகளிடம் சாப்பிடுதல், கலத்தல், குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை (மயிர் முழுவதும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்) இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்) இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி வீடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யாமை.

**பிறப்பு:**

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் தொடக்கு நான்கு வகையானது.

1) கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்.
2) .5ஆம், 6ஆம் மாதங்களில் நிகழ்தல்.
3) 7ஆம், 8ஆம் மாதங்களில் நிகழ்தல்.
4) பத்தாம் மாதம் தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு.

முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனைமாதச் சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் தொடக்கம் உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச்சிதைந்தால் 6 நாள் தொடக்கு, அதன்பிறகு நிகழ்ந்தால் இயற்கையாகக் குழந்தை பிறக்கும் போது தொடக்குக் காக்கும் நாள் அளவு.

பிள்ளைப்பேற்றில் பெண் பிறந்தால் 40நாளும் ஆண்பிறந்தால் 30நாளும் பிதாமாதா இருவருக்கும் தொடக்கு.

முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் தொடக்குப் போம்.

தொடக்குக் காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம்.

பூரண கருச்சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும் தந்தை 10நாள் தொடக்குக் காக்க வேண்டும்.

10 நாட்களுக்குள் குழுந்தை இறந்தால் மரணத்தொடக்குக் கொள்ளத் தேவையில்லை.

இயற்கையான பிறப்பில் 30 நாள் தொடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40ஆம் நாள் கொணடு போகும் வழக்கம் இருந்துவருகிறது)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார்.

தீட்சை பெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20நாளும் தொடக்குக் காக்க வேண்டும்.

பிரம்மசாரிக்குத் தொடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரம்மசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது.

மூன்றாம் தீட்சையாகிய நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் தொடக்கு.

கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல், வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.

## இறப்பு:

மரண ஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழுந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள இறந்தால் உடன் சுத்தியாம். பல் முளைக்குமுன் (6மாதத்துள்) ஆயின் ஒருநாள் தொடக்கு. 11ஆம் ஆண்டுக்குப் பின் முழுத் தொடக்கு. பெண் மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் தொடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் தொடக்கு காப்பர். பிற ஆத்மசாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்ய வேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம். அன்றிப் புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழுதலைமுறை வரை தொடக்குக் காக்க வேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மருமகன் மகள் வயிற்றுப் பேரன் ஆகியயோருக்கு 8 அல்லது 6 நாள் தொடக்கு.

தானம், வேள்வி, விவிகாம் போன்ற சற்கருமங்களுக்கு இடையிலும் போர், உள்நாட்டுக் குழப்பம், மலைச்சரிவு, மரம் விழுதல், பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும் வரும் தொடக்கு உடனே நீங்கும். ஒரு வரம் கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் தொடக்கு ஏற்பட்டால் தானம், அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை கன்னியைத் தானம் செய்பவர், கோவில் திருவிழாவோ பிரதிட்டையோ செய்யும் ஆசாரியார், செய்விப்போர் (யஜமானார்) துணைப்பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிராத்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது தொடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

**வீரமரணம்:**

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தவருக்கு உடன்சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற்போல குறித்த காலத்தின் பின் செய்ய வேண்டும் என்ற விதியில்லை)

**துர்மரணம்:**

இது இருவகை. 1. புத்திபூர்வமானது. 2. அபுத்திபூர்வமானது.

முதல்வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடுதல்) செய்யலாம். பின்னர் உரிய காலத்தில் செய்யும் போது மந்திரத்துடன் கிரியை செய்யலாம். இதில் சபிண்டருக்குத் தொடக்கு இல்லை. ஸ-பிண்டர் -தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவு முறைக்குள் அடங்குவோர். தன்னையும் சேர்த்து ஏழுதலைமுறை (ஆண்வழியில்) பின்னர் ஆறுமாதம் அல்லது ஒருவருடம் கழித்துக் கிரியை செய்யும் போது ஒருநாள் காக்க வேண்டும். (மூளைப்பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, தொடக்குக் காக்கலாம் என்பர்)

இரண்டாவது வகையான துர்மரணம் இடி, தீ, ஆற்றுப் பெருக்கு, விஷகடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

**பொருள்கள் சுத்தி:**

தொடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் தொடக்கு முடியும் போது நீர் தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். தொடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்து எடுத்துவைத்த பொருள்களுக்குக் குற்றமில்லை. (தானம், பூசை முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்) பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றைத் தொடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.

**கிராம ஆசௌசம்:**

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் தொடக்கு இருப்பதால், கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, ஆநுட்டானம், உண்பது போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்டபின் பிரயாச்சித்தம் செய்து கர்ம அனுட்டானங்களைச் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால் தூரத்தில் பிரேதம் இருந்தால் ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் தொடக்கு இல்லை. எல்லை கணிக்கும் போது (பூசைக்குரிய கைமணி அடிக்கும் ஓசை கேட்கும் தூரம் அல்லது 11 முழம் ஆகிய (விற்) கோல் (நிலஅளவு) 11(சுமார் 35 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக் கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் தொடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிட்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற்கு சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் தொடக்கு இல்லை. பிரேதத்தை தொட்டவர், தூக்கியவர், பின்னே சென்றவர்கள் தொடக்கு உடையவர்.

தொடக்கு நாட்கள் வைதிக முறையில் முத்தீ வளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல் கணிக்குக) இரவில் பிறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலைநாட்டு முறையில் இரவு 12 மணிக்குப் பின் அடுத்தநாள் எனக் கொள்ளக்கூடாது)

பிறப்புத் தொடக்குக்கு இடையில் இறப்புவரின். இறப்புக் கணக்கின் பின்னரே தொடக்கு கழியும். இறப்புத் தொடக்குக் நடுவில் பிறப்பு வந்தால் மரணத்தொடக்குடன் அது நீங்கும். ஒரு மரணம் வந்தால் பிந்திய தொடக்கு முடிவிலேதான் இரண்டு தொடக்கும் நீங்கும். முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு தொடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு தொடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும் இரண்டு நாள் தொடக்குக் காக்க. அச்செய்தி உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி மூன்று மாதத்துக்குள் கிடைத்தால் மூன்று இராத்திரி தொடக்குக் காக்குக. ஒரு வருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்குக. ஒருவர் இறந்த செய்தி தொடக்கு எல்லைக்குள் கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க. உதாரணம்: அயல்நாட்டில் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20ஆம் நாள் கிடைத்தால் மீதி 10 நாள் ஆசௌசம் காக்க. தொடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப்பட்டால் மகன் முழுத் தொடக்குக் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப்பட்டிருந்தால் 3 நாள் காத்தல் போதும்.

தொடக்கு காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம். (மானசீகமாயேனும் செய்க) ஞானநூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஒரு நாள் விலக்கலாம். விசேட தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவபூஜை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனதில் தொடக்குப் பற்றாது. பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப்பூசை செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்த தீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்ய வேண்டும். ஆனால் எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை செய்யக்கூடாது. ஆசௌசம் உடையவர் கோவில் வெளிவீதியில் நின்று வழிபடலாம். உயர்தீட்சை பெற்றோர் மண்டபத்துக்குள் நிற்கலாம். தொடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக் கூடாது. உருத்திராக்கமாலை தரிக்கக் கூடாது.

## பூப்பு:

பெண்கள் முதற்பூப்பு மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் தொடக்குக் கொள்க. 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் தொடக்கு. 19ஆம் நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி உரிய மந்திர ஜபம் செய்து சுத்தி பெறுகின்றனர்.

## மயிர்களைதல்:

தொடக்கு நீக்கும் போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக்கிரியை தொடங்குமுன் மழித்தல் வழக்கமாய் உள்ளது. தொடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன்களைதலே சாத்திரசம்மதம். மத்தியானத்துக்குப்பின் மயிர்களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும். மகன் கடமை செய்யமுடியாமல் இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

# Religious Life

## (Reproduced from the Hindu Organ of 04 June 1928)

Men are different in character, in temperament and in complexion. Thoughts, customs and manners of one nation are different from those of another Similarly he aspriations of a nation and of individual are different. For some Westerners their ideal in life is "Eat, Drink and be Merry for tomorrow we die". Others may say that gaining esperience is their ideal in life But the Easterners say and think that obtaining salvation is their ideal in life. This is the true ideal. The transistoriness of worldly things. the esits and entrances of all living beings clearly tell us that there is something behind the bread and butter problem. The world is a volume of books open to us. It teaches us useful lessons.

We must analyse what is our ideal in life. We must always be awaare of our mission in life. Without an ideal in life without a certain well - thought out aim in life, life is worthless. We must analyse whether earning for bread and butter, obtaining knowledge, gaining experience or obtaining salvation is our ideal in life. Having clearly essn that obtaining salvation is our ideal in life we must work day by day to obtain it. But there are some people who live to eat and drink. They are without any ideal in life. They pass away the time in idle talk. They have base ideals. They are the people who foster. the fivce sins. They are the people who fall victims to vices. They must shun the base ideas. They must not set their mind entirely on worldly things. Worldly matters only help us in a certain ways to the obtaining of the ultimate aim Worldly things are only transitory. The pleasure derived from them is temporary. But there is etenal bliss and happiness in heaven. Worldly things must not deter us from doing the right, telling the truth. The saiva Saints had very little love on earthly things. Manicca Vasagar Says.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரோ டல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை யல்லால் எங்கள் உத்தமனே.

What is mentioned in the stanza? It reveals to us the mystery of the kingdom of heaven. He says that although he is given the work Brahma, he will not mind it but follow the footsteps of the Saints even to hell. Here lies the true ideal in life. Paddanathadikal says:

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமற்
குத்திரங் கோள் களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமல்
கனவிலும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல்
தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே.

Hinduism is rampant with books which tell us about the happiness in the kingdom of God, the character and works of God, and various other thrilling stories of Saints and devotees of God. They have cut many paths for us. "They are landmarks in our journey through life. They are pegs and loops on which we hang up and where we draw the wardrobe of a moral imagination, the relics of our best affections, the records of our happiest hours. They are for thoughts and remembrances" To a man who leads a religious life the Hindu Books are treasures. They guide us in our burry and worry of very day life, They are standing testimonies for the people. such a life of such eminent men will suit the aspirations of our men too. Taking the saints as our guides in our journey through life we must learn to lead a religious life. In every religion there are said to be sayings which every religionist must strictly adhere to. Saivism enumerates various ways for a man to lead a religious life. An Englishman has said that there is religion in whatever a Hindu does. There is religion in talking, in walking and in all actions, This is quite true.

Every Hindu must be initialed into the religion on his or her seventh year or at least under twenty one. Initiation goes to a great deal to make a may happy and pious. Repetition of the Mantras in the mind gives man solace, peace of mind and calmness if he repeats the Mantras every morning and evening with true deavotion he is sure to turn a new leaf. His whole life will be a poem. There is poetry in his life. For him worry and excitement are unknown. He is not affected by circumstances. Not only the repetition of the five Mantras in the mind makes a man happy nad calm but it brings him nearer and nerer to the goal of life. It is said that the five Mantras are like a raft on which a man embarks to swim the sea of births. It must be done with deep concetration and fixity of purpose. Repeating the five Mantras will make a man fearless. The visions of spirits and devils and other horrid objects are new things to him. The solidarity of his undertakings will be given an incentive by repeating the Mantras. He finds that the goal of life can be obtainable through this and this only. There is a famous stanza to illustrate its importance.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

There is another important stanza in Thiruvathavoorar Puranam.

"முக்குணம் புலனைந்துடனடக்கி மூலவாயுவை எழுப்பிருவழியை
சிக்கெனும்படி அடைத்து ஒரு வழியைத் திறந்து
தாண்டவச் சிலம்பொலியுடன் போய்
தக்க அஞ்செழுத்து ஓரெழுத்து உருவாந் தன்மை
கண்டு அரும்பெரு வெளிக்கே
புக்கழுந்தினர் எமதுரும் பெறுவர் புவியில்
வேட்டுவனெடுத்த மென் புழுப்போல்"

Everything a Hindu does is governed by a religious priciple. According to Hindu

Shastras, therr are four fundamental principles. They are சரியை, கிரயை, யோகம், and ஞானம். A man has to go through all the stages before he attains salvatins. Sariyai and Kiriyai, the first two stages, are preliminary stages for the attainment of Mukthi. There is an evolution from Sariyai to gananm. A Hindu has to observe many things and do them woth religious atmosphere. Some ceremonies are done in marriages, funerals and in various other occasions. These ceremonies are performed to give prominence to God. By observing these Ceremonies we are bound with the feet of the God. The tie between the soul and the God is kept unbroken. It is very necessary that a householder shoauld observe ceremonies. Our ancestors have handed down many good legacies to us. They have given us practices of mahy things which develop our mental and physical powerw. SrilaSri Arumuga Navalar of blessed memory, who must be remembered for his fearless fights in the field of religious work have left behind for us many religious observances through the medium of books. If they are done piously, the observances of some of them bring us nearer and nearer to God.

## Regular Daily Prayers

A certain time should be devoted for prayer in the mornings ans well as in the evennings. Life withour prayer, life without the thought of God is not worth living. Pryer gives us harmony, peace of mind and calmness A life without prayer is an animal life. These people have no contentment and peace of mind who do not ofter prayers to God. They are weanlings. Tennyson says.

*More things are wrought by prayer*
*Than this world dreams of wherefore*
*Letthy voice rise like a fountain for the night and day*
*For what are men better than sheep and goats*
*That nourish a blind life within the brain*
*If knowing God they lift not hands of prayer*
*Both for them selves and those who call them friend*
*for so the whole world round earth in every way*
*Bound by gold chains with the feet of God.*

## EFFICACY OF INITIATION

The live Mantras must be repeated in the mind with a certain amount of devotion and piety. A man must find pleasure in doing it. He must know that it is one of the many ditues in life. He must devote half an hour for prayer every day, what on earth is his life worth if a man does not pray to God, Thiruvalluvar says.

"கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்".

As stated above prayer must be done for piety sake. The love of prayer must rise from the bottom of the human heart. It cannot be bought or slod. it must not be done for show. There happiness and calmness only when it is done with fixity of purpose and strong

will. Repeating the five Mantras makes a man a hero of life, It is said

"துஞ்சலும் துஞ்சலில்லாத போதினும்
நெஞ்சகனைந்து நனை மின்நாமொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே"

These observances belong to the first two stages especially. The first two stages must be gone through by householders, the men of the world. They is meaning in doing them. One may ask how is it that by repeating the five Mantras one can obtain salvation. This is quite obvious. As a man goes on repeating them his concentration is centred upon them. He has little time to attend to wicked and evil thoughts and deeds. Thus he paves his way for salvation if he does it with fixity of purpose and strong will. But who can do this is the question? Who ean control the mind? There are among Hindus who are not initiated. There are some who are initiated. But the some do not observe daily. They give all sorts of lame excuses. That shows the want of the religious spirit that should grow in a man.

## TEMPLE WORSHIP

Temple worship makes a man religious and his mission in life more defined. As he attends temples he lessens his love for worldly belongings. He must be in touch with Thevarams and Thruvasagams. They are gems Reading them makes him cheerful. He must befriend with religious men and live in a Hindu atmoshere. Mere observancess of ceremonies would not do A man must be true Hindu in word, deed and thought. He should not dress himself in the garb of a saint and be a tiger at heart. Both in action and thought he must lead a religious life. A man may observe all ceremonies and pray to God daily, but quite the opposite in his actions. He cannot be considered a man leading religious life, although he may appear to the world as such.

## SERVICE TO MANKIND

Some may think that a man who leads a religious life cannot do political and social work, This is not so, He may shut him self up in his house and may be ignorant of the world. This must not be so. Mathew Arnold says "calm is well but caem is not life's crown". Calmness in meeting calamities is well and good. But it does not mean that one should not do service to man kind. A man can very well live a religious life and do service to the people.

Poor People, the sick, the lame, and the blind must be cared for. Chivalry should spring in the hearts of religious men. They are scouts of a high order. Religious men are a light to society. Many people will begin to follow them. They draw many people under their standards by leading a religious life.

## THE STATE OF THE PRESENT WORLD

But what of the present world. The majority of the people eat and drink and chat achieving nothing. Very well has Mathew Arnold pictured such people in one of his poems, He says :-

"What is the course of the life
of the mortal men on the earth
most men eddy about
Here and there - eat and drink
Chatter and love and hate.
Gather and squander, are raised
Aloft are huried in the dust
Striving blindly achieving
Nothing; and then they die
Perish; and no one asks.
Who or what they have been
More than he asks what waves
In the moonlight solitudes mild
Of the Midmost Ocean have swelled
Foamed for a moment, and gone".

They are not aware of the mission in life.

## EDUCATION BASED IN RELIGION

The education imparted in schools and colleges is not sound students are being turned out as machines which can do only certain things. They are not well equipped for the battle of life They have not the germ of true and ideal life First of all the students must lead a religious life. They must be initiated into the religion at the proper age. They must be trained to devote some hours for prayer every day. Heads of Hindu schools and colleges should note that it is a great responsibility for them to make their students live in a Hindu atmosphere. If the students attend school with holy ashes on and after an hour of prayer the goddess of learning is sure to give them a lift, They must attend school with shining morning faces with the object of studying. Then they are kept bound with the feet of God.

## RELIGIOUS LECTURES & GURU POOJAHS OF SAINTS

The ringing of bells in the temples of a village, lectures delivered on religious subjects; celebrations of anniversaries of our Saints keep the lives of the people religious. In such a village the predominating atmosphere is religious atmosphere Religious talks will percolate through the hearts of the people and keep them bound with the feet of God If there is no religious atmosphere in a village or a town that village or town is damned. There should

be progress in religious matters. An inspiring and inborn spirit of a great soul will draw millions of followers round him and make the land a holy land. The lives of our Saints are standing testimonies to this great truth. Great souls create a good and pure atmosphere around them. 'Example is better than precept' so all men must practise what they preach, If they do so they are assets to humanity.

Religious life is better than any other life, If we take up religious life as oure mission in life we bring happiness, prosperity and solace not only to ourselves but to the whole nation and the world at large.

"perish pollcy and cunnin
Perish all that fears the light
Whether winning whether losing
Trust in God and do the right"

## அறங்கள் (32)

1. அறவைச்சோறு
2. அறவைத்தூரியம்
3. அறவைப் பிணஞ்சுடுதல்
4. அறுசமயத்தார்க்கு உண்டி
5. ஆதுலர்க்குச்சாலை
6. ஆவுரிஞ்சுதறி
7. ஏறுவிடுதல்
8. ஐயம்
9. ஓவார்க்குணவு
10. கண்ணாடி
11. கண்மருந்து
12. கன்னிகாதானம்
13. காதோலை
14. சிறைச்சோறு
15. சுண்ணம்
16. சோலை
17. தண்ணீர்ப்பந்தல்
18. தலைக்கெண்ணெய்
19. தடம்
20. தின்பண்டம் நல்கல்
21. நாவிதர்
22. நோய்க்கு மருந்து
23. பசுவுக்கு வாயுறை
24. பெண்போகம்
25. பிறர்துயர் காத்தல்
26. மடம்
27. மகப்பெறுவித்தல்
28. மகவு வளர்த்தல்
29. மகப்பால் வார்த்தல்
30. வண்ணார்
31. விலங்கிற்குணவு
32. விலை கொடுத்து உயிர்காத்தல்

## பதினாறு பேறுகள்

கலையாத கல்வியும் குறையாத வயது மோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியில்லாத உடலும்

சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியம் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
தாய்ய நின்பாதத்தில் அன்பும் உதவி பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அரிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே

## தேவார திருத்தலங்கள் 275
## (1 முதல் 7 முடிய தேவாரங்கள்)

சோழநாட்டு ஒரு நூற்றுத் தொண்ணூற்றொன்று
தொல்லிலிங்கை இரண்டு, தமிழ் பாண்டி நாட்டில்
ஏழிரண்டு, மலைநாட்டில் ஒன்று, கொங்கில் ஏழு
நடு நாட்டில் இருபத்திரண்டு,
ஏழு ஐந்தோடு இருபதாம் தொண்டை நாட்டில்
எண் ஒன்றே துளுவத்தில் வடநாட்டு ஐந்தே
எழுபத்தைந்துடன் இரண்டு நூறு கொண்டது
ஈசனுறை தேவார திருத்தலங்கள்

## சோழநாடு (191)

1. கோயில் (சிதம்பரம்)
2. திருவேட்களம்
3. திருநெல்வாயில்
4. திருக்கழிப்பாலை
5. திருநல்லூர் பெருமணம்
6. திருமயேந்திரப்பள்ளி
7. தென்திருமுல்லைவாயில்
8. திருக்கலிக்காமூர்
9. திருசாய்க்காடு
10. திருப்பல்லவனீச்சரம்
11. திருவெண்காடு
12. கீழைத்திருக்காட்டுப்பள்ளி
13. திருக்குருகாவூர்
14. சீர்காழி
15. திருக்கோலக்கா
16. புள்ளிருக்கு வேளூர்
17. திருக்கண்ணார்கோயில்
18. திருக்கடைமுடி
19. திருநின்றியூர்
20. திருப்புன்கூர்
21. திருநீடூர்
22. திரு அன்னியூர்
23. திருவேள்விகுடி
24. எதிர்கொள்பாடி
25. திருமணஞ்சேரி
26. திருக்குறுக்கை
27. திருக்கருப்பறியலூர்
28. திருக்குரக்கா
29. திருவாழ்கொழிபுத்தூர்
30. பழமண்ணிப் படிக்கரை
31. ஓமாம்புலியூர்
32. கானாட்டு முள்ளூர்
33. திருநாரையூர்
34. திருக்கடம்பூர்
35. பந்தணைநல்லூர்
36. கஞ்சனூர்
37. திருக்கோடிகா
38. திருமங்கலக்குடி
39. திருப்பனந்தாள்
40. திரு ஆப்பாடி
41. சேய்ஞலூர்
42. திருந்து தேவன்குடி
43. திருவியலூர்
44. கொட்டையூர்
45. இன்னம்பர்
46. திருப்புறம்பயம்
47. திருவிசயமங்கை
48. திருவைகாவூர்
49. வடகுரங்காடுதுறை
50. திருப்பழனம்
51. திருவையாறு
52. திருநெய்தானம்
53. பெரும்புலியூர்
54. திருமழபாடி
55. திருப்பழுவூர்
56. திருக்கானூர்
57. அன்பிலாலந்துறை
58. திருமாந்துறை
59. திருப்பாற்றுறை
60. திரு ஆனைக்கா
61. திருப்பைஞ்சீலி
62. திருப்பாச்சிலாச்சிராமம்
63. திருஈங்கோய்மலை
64. திருவாட்போக்கி
65. கடம்பந்துறை
66. திருப்பராய்த்துறை
67. திருகற்குடி
68. முக்கீச்சரம்
69. திரிசிராப்பள்ளி
70. திருஎறும்பியூர்

71. திருநெடுங்களம்
72. மேலைத்திருக்காட்டுப்பள்ளி
73. திரு ஆலம்பொழில்
74. திருப்பூந்துருத்தி
75. திருக்கண்டியூர்
76. திருச்சோற்றுத்துறை
77. திருவேதிகுடி
78. தென்குடித்திட்டை
79. திருப்புள்ளமங்கை
80. சக்கரப்பள்ளி
81. திருக்கருகாவூர்
82. திருப்பாலைத்துறை
83. திருநல்லூர்
84. ஆவூர் பசுபதீச்சுரம்
85. திருசக்திமுற்றம்
86. பட்டீச்சரம்
87. பழையாறை வடதளி
88. திருவலஞ்சுழி
89. குடமூக்கு
90. குடந்தைக் கீழ்க்கோட்டம்
91. குடந்தைக் காரோணம்
92. திருநாகேச்சரம்
93. திருவிடை மருதூர்
94. தென்குரங்காடுதுறை
95. திருநீலக்குடி
96. வைகல் மாடக் கோயில்
97. திருநல்லம்
98. திருக்கோழம்பம்
99. திருவாவடுதுறை
100. திருத்துருத்தி
101. திருவழுந்தூர்
102. மயிலாடுதுறை
103. திருவிளநகர்
104. திருப்பறியலூர்
105. திருச் செம்பொன்பள்ளி
106. திருநனிபள்ளி
107. திருவலம்புரம்
108. திருத்தலைச்சங்காடு
109. ஆக்கூர்
110. திருக்கடவூர்
111. திருக்கடவூர் மயானம்
112. வேட்டக்குடி
113. திருத்தெளிச்சேரி
114. தருமபுரம்
115. திருநள்ளாறு
116. கோட்டாறு
117. அம்பர் பெருந்திருக்கோயில்
118. அம்பர் மகாளம்
119. திருமீயச்சூர்
120. திருமீயச்சூர் இளங்கோயில்
121. திலதைப்பதி
122. திருப்பாம்புரம்
123. சிறுகுடி
124. திருவீழிமிழலை
125. திருவன்னியூர்
126. கருவிலிக்கொட்டிட்டை
127. பேணு பெருந்துறை
128. திருநறையூர் சித்தீச்சரம்
129. அரிசிற்கரைப்புத்தூர்
130. சிவபுரம்
131. திருக்கலயநல்லூர்
132. கருக்குடி
133. ஸ்ரீ வாஞ்சியம்
134. நன்னிலம்
135. கொண்டீச்சரம்
136. திருப்பனையூர்
137. திருவிற்குடி
138. திருப்புகலூர்
139. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்
140. இராமனாதீச்சரம்
141. திருப்பயற்றூர்
142. திருச்செங்காட்டங்குடி
143. திருமருகல்

144. திருச்சாத்தமங்கை
145. நாகைக்காரோணம்
146. சிக்கல்
147. கீழ்வேளூர்
148. தேவூர்
149. திருப்பள்ளியின் முக்கூடல்
150. திருவாரூர்
151. ஆரூர் அரநெறி
152. ஆரூர் பரவையுள் மண்டலி
153. திருவிளமர்
154. கரவீரம்
155. பெருவேளூர்
156. தலையாலங்காடு
157. குடவாயில்
158. திருச்சேறை
159. நாலூர் மயானம்
160. கடுவாய்க்கரை புத்தூர்
161. இரும்பூளை
162. அரதை பெரும்பாழி
163. அவளிவணல்லூர்
164. பரிதிநியமம்
165. கோயில் வெண்ணி
166. பூவனூர்
167. பாதாளேஸ்வரம்
168. திருக்களர்
169. திருச்சிற்றேமம்
170. திருவுசாத்தானம்
171. இடும்பாவனம்
172. கடிக்குளம்
173. தண்டலை நீள்நெறி
174. கோட்டூர்
175. திருவெண்டுறை
176. கொள்ளம்புதூர்
177. பேரெயில்
178. திருக்கொள்ளிக்காடு
179. திருத்தெங்கூர்
180. திருநெல்லிக்கா
181. திருநாட்டியத்தான்குடி
182. திருக்காறாயில்
183. கன்றாப்பூர்
184. வலிவலம்
185. கைச்சினம்
186. திருக்கோளிலி
187. திருவாய்மூர்
188. திருமறைக்காடு
189. அகத்தியன்பள்ளி
190. திருக்கோடி
191. திருஇடைவாய்

## ஈழநாடு (2)

192. திருக்கோணமலை
193. திருக்கேதீச்சரம்

## பாண்டிய நாடு (14)

194. திரு ஆலவாய்
195. திரு ஆப்பனூர்
196. திருப்பரங்குன்றம்
197. திருஏடகம்
198. கொடுங்குன்றம்
199. திருப்புத்தூர்
200. திருப்புனவாயில்
201. இராமேஸ்வரம்
202. திரு ஆடானை
203. திருக்கானப்பேர்
204. திருப்பூவணம்
205. திருச்சுழியல்
206. திருக்குற்றாலம்
207. திருநெல்வேலி

## மலைநாடு (1)

208. திரு அஞ்சைக்களம்

## கொங்குநாடு (7)

209. திருப்புக்கொளியூர்
210. திருமுருகன் பூண்டி
211. திருநணா
212. கொடி மாடச்செங்குன்றூர்
213. வெஞ்சமாக்கூடல்
214. திருப்பாண்டிக்கொடுமுடி
215. கருவூர்

## நடுநாடு (22)

216. திருநெல்வாயில் அறத்துறை
217. பெண்ணாகடம்
218. திருக்கூடலையாற்றூர்
219. திருஎருக்கத்தம் புலியூர்
220. திருத்தினை நகர்
221. திருச்சோபுரம்
222. திருஅதிகை
223. திருநாவலூர்
224. திருமுதுகுன்றம்
225. திருநெல்வெண்ணெய்
226. திருக்கோவலூர்
227. அறையணி நல்லூர்
228. இடையாறு
229. திருவெண்ணெய் நல்லூர்
230. திருத்துறையூர்
231. வடுகூர்
232. திருமாணிகுழி
233. திருப்பாதிரிப்புலியூர்
234. திருமுண்டீச்சரம்
235. புறவார் பனங்காட்டூர்
236. திருஆமாத்தூர்
237. திரு அண்ணாமலை

## தொண்டை நாடு (32)

238. திருக்கச்சி ஏகம்பம்
239. திருக்கச்சி மேற்றளி
240. ஓணகாந்தன் தளி
241. கச்சி அனேகதங்காவதம்
242. கச்சி நெறிக் காரைக்காடு
243. குரங்கணில் முட்டம்
244. மாகறல்
245. திருவோத்தூர்
246. வன்பார்த்தான் பனங்காட்டூர்
247. திருவல்லம்
248. திருமாற்பேறு
249. திருவூறல்
250. இலம்பெயங்கோட்டூர்
251. திருவிற்கோலம்
252. திருவாலங்காடு
253. திருப்பாசூர்
254. திருவெண்பாக்கம்
255. திருக்கள்ளில்
256. திருக்காளத்தி
257. திருவொற்றியூர்
258. திருவலிதாயம்
259. வடதிரு முல்லைவாயில்
260. திருவேற்காடு
261. மையிலாப்பூர்
262. திருவான்மியூர்
263. திருக்கச்சூர்
264. திருஇடைச்சுரம்
265. திருக்கழுக்குன்றம்
266. அச்சிறுபாக்கம்
267. திருவக்கரை
268. திருஅரசிலி
269. திருஇரும்பை

### துளுவநாடு (1)

270. திருக்கோகர்ணம்

### வடநாடு (5)

271. திருப்பருப்பதம்
272. இந்திர நீல பருப்பதம்
273. அநேகதங்காபதம்
274. திருக்கேதாரம்
275. நொடித்தான்மலை

## திருவாசகம் கண்ட திருத்தலங்கள் (33)
## (எட்டாம் திருமுறை)

1. தில்லை மூதூர்
2. மகேந்திரமலை
3. கல்லாடம்
4. பஞ்சப்பள்ளி
5. நந்தம்பாடி
6. வேலம்புத்தூர்
7. சாந்தம் புத்தூர்
8. மொக்கணீஸ்வரம்
9. மதுரை
10. உத்தரகோசமங்கை
11. திருப்பூவணம்
12. திருவாதவூர்
13. திருப்பெருந்துறை
14. திருப்பூவலம்
15. திருவெண்காடு
16. திருபட்டமங்கை
17. ஒரியூர்
18. பாண்டூர்
19. தேவூர்
20. திருவாரூர்
21. திருவிடை மருதூர்
22. திருவேகம்பம்
23. திருவாஞ்சியம்
24. திருக்கடம்பூர்
25. திருவீங்கோய்மலை
26. திருவையாறு
27. திருத்துருத்தி
28. திருப்பனையூர்
29. கழுமலம் (சீர்காழி)
30. திருக்கழுக்குன்றம்
31. திருப்புறம் பயம்
32. திருக்குற்றாலம்
33. சந்திரதீபம்

## ஒன்பதாம் திருமுறைத் தலங்கள் (14)

1. திருவீழிமிழலை
2. திருவாவடுதுறை
3. திருவிடைக்கழி
4. திருக்களந்தை ஆதித்தேச்சரம்
5. திருக்கோட்டூர் மணியம்பலம்
6. திருமுகத்தலை
7. திரைலோக்கிய சுந்தரம்
8. கங்கை கொண்ட சோழேச்சரம்
9. திருப்பூவணம்
10. திருச்சாட்டியக்குடி
11. தஞ்சை ராஜராஜேஸ்வரம்
12. திருவிடை மருதூர்
13. திருவாரூர்
14. சிதம்பரம்

## பதினோராம் திருமுறைத் தலங்கள் (30)

1. திரு ஆலவாய்
2. திருவாலங்காடு
3. திருச்சிற்றம்பலம்
4. தென்குடந்தை கீழ்க்கோட்டம்
5. திருவையாறு
6. திருவாரூர்
7. திருத்துருத்தி
8. திருக்கோடிகா
9. திருவிடைவாய்
10. நெடுங்களம்
11. குழித்தண்டலை
12. திருவானைக்கா
13. திருப்புன்னியங்கானல்
14. அம்பர்மாகாளம் வளைகுளம்
15. பூம்புகார் சாய்க்காடு
16. திருவாச்சிரமம்
17. சிராமலை
18. திரு மழபாடி
19. திருவாய்பாடி
20. ஏகம்பம்
21. திருப்பனந்தாள்
22. திருவொற்றியூர்
23. திருக்கடவூர் மயானம்
24. திருமறைக்காடு
25. திருமாந்துறை
26. திருக்கயிலை
27. திருக்காளத்தி
28. திருவிங்கோய்மலை
29. திருவலஞ்சுழி
30. திருவண்ணாமலை

## வழிபாட்டு நிலைகள் (16)

1. ஆசனம்
2. பாத்யம்
3. ஆசமனம்
4. ஆர்க்கியம்
5. அபிசேகம்
6. வத்திரம்
7. கந்தம்
8. பூ
9. தூபம்
10. நைவேத்தியம்
11. தாம்பூலம்
12. தர்ப்பணம்
13. சாமரம்
14. நமஸ்காரம்
15. பிரதட்சணம்
16. விசர்சனம்

## பக்தி மார்க்கம் (8)

### (எட்டு நிலைகள்)

1. சிரவணம் - கூறக் கேட்பது
2. கீர்த்தனம் - இறைவன் புகழ் பாடுவது
3. நாமஸ்மரணம் - இறைவன் சிந்தனை
4. வந்தனம் - பாதம் பணிவது
5. ஆரோகணம் - உணர்ந்து வழிபடுவது
6. தாஸ்யம் - இறைவனை மனித உருவில் காணல்
7. பாதசேவனம் - அருகிருந்து தொண்டு செய்தல்
8. ஆத்ம நிவேதனம் - சரணாகதி

## வணக்கங்கள் (6)

1. ஒருறுப்பு வணக்கம் - ஏகாங்க நமஸ்காரம்
2. ஈருறுப்பு வணக்கம் - துவிதாங்க நமஸ்காரம்
3. மூவுறுப்பு வணக்கம் - திரிவிதாங்க நமஸ்காரம்
4. ஐந்துறுப்பு வணக்கம் - பஞ்சாங்க நமஸ்காரம்
5. எட்டுறுப்பு வணக்கம் - அஷ்டாங்க நமஸ்காரம்
6. தரை உறுப்பு வணக்கம் - சாஷ்டாங்க நமஸ்காரம்

## சிவனுக்குரிய எட்டு விரதங்கள் (8)

1. சோமாவாரம் விரதம் - திங்கள்
2. உமாமகேஸ்வரர் விரதம் - கார்த்திகை பவுர்ணமி
3. திருவாதிரை விரதம் - மார்கழி
4. சிவராத்ரி விரதம் - மாசி
5. கல்யாணவிரதம் - பங்குனி உத்திரம்
6. பாசுபத விரதம் - தைப்பூசம்
7. அஷ்டமி விரதம் - வைகாசி பூர்வ பட்ச அஷ்டமி
8. கேதார விரதம் - தீபாவளி அமாவாசை

# ஆயகலைகள் (64)

1. அக்கர இலக்கணம்
2. இலிகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதி சாத்திரம்
8. சோதிட நூல்
9. தரும சாத்திரம்
10. யோக நூல்
11. மந்திர நூல்
12. சகுன நூல்
13. சிற்ப நூல்
14. மருத்துவ நூல்
15. உருவ சாத்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுர பாடணம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சத்தபிரமம்
23. வீணை
24. வேணு
25. முழவு
26. தாளம்
27. ஆத்திரபரீட்சை
28. கனகபரீட்சை
29. இரதப் பரீட்சை
30. கச பரீட்சை
31. அசுவ பரீட்சை
32. இரத்தின பரீட்சை
33. பூப் பரீட்சை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்யுத்தம்
36. ஆகருடணம்
37. உச்சாடணம்
38. வித்துவேடணம்
39. மதன நூல்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரசவாதம்
43. காந்தருவவாதம்
44. பைபீலவாதம்
45. கௌத்துவ வாதம்
46. தாது வாதம்
47. காருடம்
48. நட்டம்
49. முட்டி
50. ஆகாயப் பிரவேசம்
51. பரகாயப் பிரவேசம்
52. அதிரிச்சயம்
53. இந்திரசாலம்
54. மகேந்திரசாலம்
55. அக்கினித்தம்பம்
56. ஆகாய சமனம்
57. சலத்தம்பம்
58. வாயுத்தம்பம்
59. திட்டித்தம்பம்
60. வாக்குத்தம்பம்
61. சுக்கிலத்தம்பம்
62. கன்னத்தம்பம்
63. கட்கத்தம்பம்
64. அத்தைப் பிரயோகம்

## சச்சிதானந்தம்

சத் - ஆற்றல் - பதஞ்சலில முனிவர் இயற்றிய யோக சூத்திரங்கள்

சித் - அறிவு - வியாசர் இயற்றிய ப்ரம்ம சூத்திரங்கள்

ஆனந்தம் - அன்பு - நாரதர் இயற்றிய பக்தி சூத்திரங்கள்

## பஞ்ச கிருத்தியங்கள் (5)
### (ஐந்தொழில்)

ஆக்கல் - சிருஷ்டி

காத்தல் - ஸ்திதி

அழித்தல் - ஸம்ஹாரம்

மறைத்தல் - திரோதானம்

அருளல் - அனுக்கிரஹம்

## பஞ்ச நாதம் (5)

விசவ நாதம்

சோமநாதம்

ஐகந் நாதம்

இராம நாதம்

வைத்தியநாதம்

## யுகதர்மம் (4)

கிருதயுகம் - மஹாதவம்

திரேதாயுகம் - தியானம்

துவாபரயுகம் - யாகம்

கலியுகம் - தானம்

## அட்டாங்க யோகங்கள் (8)

1. இயமம்
2. நியமம்
3. ஆதனம்
4. பிராணாயாமம்
5. பிராத்தியாகாரம்
6. தாரணை
7. தியானம்
8. சமாதி

## தத்துவங்கள் (96)

1. பூதங்கள் (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) - 5

2. கர்மேந்திரியம் (வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தயம் ஆகி ஐம்புலன்கள்) - 5

3. கர்மேந்திரிய விஷயங்கள் (வசனம், கமனம், தானம், விசர்ச்சம், ஆனந்தம்) - 5

4. ஞானேந்திரியங்கள் (துவக்கு, சட்சு, சுரோத்திரம், ஜிஹ்வை, ஆக்கிராணம்) - 5

5. தன்மாத்திரைகள் (சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்) - 5

6. அந்தகரணங்கள் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம்) - 5

7. நாடிகள் (இடை, பிங்கலை, சுழு, கண்டம், அட்சி, காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கிலி, குரு) - 10

8. வாயுக்கள் (பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்) - 5

9. உபவாயுக்கள் (நாகன், கூர்மன், க்ருகரன், தேவதந்தன், தனஞ்சயன்) - 5

10. ஆச்ரயங்கள் (அமராச்ரயம், விபஜனாச்ரயம், ஜனாச்ரயம், மலாச்ரயம், சுக்லாச்ரயம்) - 5

11. கோசங்கள் (அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞான மயம், ஆனந்தமயம்) - 5

12. ஆதாரங்கள் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்திம், ஆக்ஞேயம்) - 6

13. தோஷங்கள் (வாதம், பித்தம், சிலேத்துமம்) - 3

14. ஈசனாத்ரயங்கள் (தாரேசன, புத்திரேசன, வித்தேசன) - 3

15. குணங்கள் (சாத்வீகம், ராஜஸம், தாமஸம்) - 3

16. துர்குணங்கள் (இராக, துவேச, காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்ய, டம்ய, தர்ப, ஈர்சை, அசூயை, அகங்கார, மமகார) - 14

17. வினைகள் (நல்வினை, தீவினை) - 2

18. அவஸ்தைகள் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) - 5

96

## வித்யா தத்துவங்கள் (7)

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை

## சிவதத்துவங்கள் (5)

சிவநெறிமுறை, சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம், நாதம்

# ஸ்ரீ விமானமும் - யோகத்தானங்களும்

நடைமுறையில் இன்று நாம் காணும் கருவறையான ஸ்ரீவிமானங்கள் கலைச் சிறப்பாலும், கட்டிடக் கலை உத்திகளாலும் கலைஞர்களின் கற்பனை வளத்தாலும் பல நிலைகளைக் கடந்து புதிய வடிவங்களைப் பெற்றுள்ளன. ஆதியில் இவை ஒரு மனிதன் யோகாசனத்தில் வீற்றிருப்பதற்கு இணையான எளிய வடிவங்களையே கொண்டிருந்தன.

சிவயோகத்தில் நிலைபெற்றிருக்கும் யோகியின் மூலாதாரப் பகுதியே கருவறையின் மையத்தில் (மூலவர் சிலைக்கு) நேர் கீழே அமைந்த மூல இடமாகும்.

ஆலயங்களை அமைக்கத் தொடங்கும்போது இந்த இடத்தில் கருப்ப நியாசம் என்னும் சடங்கு நடத்தப்படுகிறது. இங்குத் தங்கத்தாலான ஆமை வடிவமும் அதன் மீது நவரத்தினங்களும் அமைக்கப்பட்டு அதன் மீது "வலம்புரிச்சங்கு"ம் அமைக்கப்படுகிறது. இதனைச் "சங்குஸ்தாபனம்" என அழைப்பர். இது மண் தத்துவம் ஆகும்.

இதற்கும் மேலே அமையும் உபபீடத்தின் மையத்தில் வெள்ளியால் செய்யப்பட்ட ஆமையும் அதன்மீது வெள்ளித் தாமரையும் அமைக்கப்படுகின்றன. இந்த இடம் நீர்தத்துவமாகும். உபபீடம் யோகியின் பத்மாசன கோலத்தில் கால்பகுதி வரை உள்ள பகுதியைக் குறிப்பதாகும். இதன் மையத்திலேயே சுவாதிஷ்டான நிலையம் உள்ளது.

இதற்கும் மேலே கருவறைக்குள் அமையும் ஆதாரபீடமே யோகநிலையில் சொல்லப்படும் மணிபூரகமாகும். இங்கு நாம் அர்ச்சாமூர்த்தியாக வழிபடும் சிவலிங்கம் அமைந்துள்ளது. இதுவே நாபித்தானம் எனப்படும் அக்கினித் தானமாகும். இதையொட்டியே சிவலிங்கம் அக்னிவடிவாகப் போற்றப்படுகிறது.

இதனையடுத்து, சிவலிங்கத்திற்கும் மேல்தளத்திற்கும் இடையே அமைந்த பகுதி, யோக நிலையின் நான்காவது நிலையமான அநாகதத்தைக் குறிப்பதாகும். இதயத்தானமான இந்த இடம் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருப்பதை உணர்த்த சிவலிங்கத்திற்குப் பின்னணியில் ஒரு தீபம் ஏற்றப்படுகிறது. இந்தத் தானத்தற்கு அதிபதி உருத்திரன், ஆகையால் இது உருத்திர தீபம் என்றழைக்கப்படுகிறது. இது காற்றுத் தத்துவமாகும்.

இதையடுத்ததான விசுக்தி என்பது ஸ்ரீ விமானத்தில் சற்று உள்ளடக்கிய பகுதியைக் குறிக்கிறது. மனித உடலில் விசுத்தித் தானம் கழுத்து என்பதால், விமானத்தில் இது கண்டம் அல்லது கிரீவம் என்றழைக்கப்படுகிறது. இது ஆகாசத்திற்கும் காற்று மண்டலத்திற்கும் இடையிலுள்ள வெட்டவெளியைக் குறிப்பதாகும்.

ஸ்ரீவிமானத்தின் இந்த கிரீவத்தில் நான்கு புறத்திலும் நான்கு தேவர்கள் அமைக்கப்படுகின்றனர். இவர்கள் பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் என்னும் நால்வராவர். இவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் எனும் நான்கு செயலுக்கு உரியவர்.

# உருத்திராக்ஷத்தின் மகிமை

"ருத்திராக்ஷம்" சைவ சமயத்துக்கு உயர்ந்த சின்னமாக விளங்குகிறது. ருத்திராக்ஷம் "அக்கு மணி மாலை, கண்டிகை, தாழ்வடம், உருத்திராக்கம்" எனப் பல பெயரிட்டு அழைக்கப்படுகிறது. ருத்ராக்ஷம் அருளின் சின்னம், சிவனின் சின்னம்.

## ருத்ராக்ஷம் பெயர் வரக் காரணம் :

முருகப் பெருமானால் கொல்லப்பட்ட தாரகாசுரனின் மக்கள் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் அரக்கர்கள் மூவரும் தவம் செய்து, வரம் பெற்று, தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பெருந் துன்பத்தைக் கொடுத்து வந்தனர். இவர்கள் செய்த கொடுமை தாங்காது விஷ்ணு, பிரம்மா, தேவர்கள், ரிஷிகள் முதலியோர் திருக்கைலாயத்தை அடைந்து சிவபெருமான் திருமுன் திரிபுர அரக்கர்களின் கொடுமைகளைக் கூறிக் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். உடனே, சிவபெருமான் திரிபுரத்தை எரித்த போது அவர் உடலிலிருந்து வடிந்த வியர்வை நீர்த்துளிகள் பூமியில் பட்டு ஒரு மரம் உண்டாகியது, இதுவே ருத்ராக்ஷ மரம். அக்கம் என்றால் கண், உருத்திராக்கம் என்பது உருத்திரனின் கண் என்று ஆகிறது.

சூரிய வடிவாகிய வலக்கண்ணில் இருந்து வழிந்த நீரில் 12 உருத்திராக்க மரங்களும், சந்திர வடிவாகிய இடக்கண்ணில் வழிந்த நீரில் 16 உருத்திராக்க மரங்களும், தீ வடிவாகிய நெற்றிக் கண்ணில் வடிந்த நீரில் 10 உருத்திராக்க மரங்களும் தோன்றின. இடக்கண் நீரில் வெண்ணிற உருத்திராட்சமும், வலக்கண் நீரில் கபில நிறமுடைய உருத்திராட்சமும், அதிலிருந்தே செந்நிற உருத்திராட்சமும், நெற்றிக்கண் நீரில் கருநிற உருத்திராட்சமும் தோன்றின. இவ்வாறு தோன்றிய அக்குமணிகளை எல்லாத் தேவர்களும் இறைவன் திருஉள்ளப்படி அணிந்து உய்ந்தனர்.

## நூல் சான்றுகள் :

உருத்திரனைப் பற்றிய முதற்குறிப்பு ரிக் வேதத்தில் வருகிறது. ருத்ராக்ஷத்தைப் பற்றி ஈசனே கூறியதாக பத்ம புராணத்தில் உள்ளதாவது "இம்மரம் என் அம்சமானது. இக்கனிகளை அணிபவரின் பாபத்தை நான் போக்குகிறேன்" என உள்ளது. மேலும், இதன் பெருமை 108 உபநிடதங்களில் திரிபுரதாபினி உபநிடதம், திருபுரோபநிடதம், சாபால உபநிடதம் முதலியவற்றில ஆங்காங்கே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. எனினும் உருத்திராக்க சாபால உபநிடதம், அக்ஷமாபிரா உபநிடதம் என்னும் இரு உபநிடதங்கள் உருத்திராக்க மகிமையை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன.

மேலும், சிவ ரகசிய காண்டத்தில் உருத்திராக்கப் படலமும், சிவபுராணம், கந்தபுராணம் போன்றவையும் உருத்திராக்கத்தைப் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

உருத்திராக்க சாபால உபநிடதம் 108 உபநிடதங்களில் 88வதாக உள்ளது. இது சாமவேத பாகமாய் உள்ளது. புசுண்ட முனிவருக்குக் காலாக்னி உருத்திரர் அருளியது.

இது அரிய உருத்திராக்கத்தின் தோற்றம், வகை, நிறம், தரிசன பலம், உச்சாரண

பலம், பரிசபலம், தாரண பலம், முகங்களின் வகை, அவற்றின் உயர்வு, பாவ நிவாரணம் முதலியவற்றை எடுத்துக் கூறுகிறது.

அக்ஷமாலிகா உபநிடதம் 67வது உபநிடதம், ருக்வேத பாகமாய் உள்ளது. இதில் உருத்திராக்க மாலைகளின் வகைகளையும், மாலையை அணிந்தவர் அடையும் பலன்களையும், மாலை செய்யும் விதிகளையும், பிரதிஷ்டை விதிகளையும், அதற்குரிய மந்திரங்களையும், வேறு விதிகளையும் எடுத்துக் கூறுகிறது. அகரம் முதல் க்ஷகரம் இறுதியாக உள்ள எழுத்துக்கள் முதலில் வரும் மந்திரங்களோடு உருத்திராட்ச பூஜையையும் கூறுகின்றது.

## உருத்திராக்ஷம் அணியும் முறைகள் :

குடுமியில் ஒரு மணி, தலையில் 36 மணியும், காதில் ஒன்று முதல் மூன்று மணிகளையும், கழுத்தில் 32 மணிகளையும், புஜயத்தில் தனித்தனியாக 16, கைகளில் தனித்தனி 12, மார்பில் 108 என்று இவ்வாறு எண்ணிக்கை கொண்ட மாலைகளைத் தரிக்கலாம். ருத்ராக்ஷம் ஞானசாதனம், சிகையில் தரிப்பது ராக தத்துவம், இரு காதுகளில் தரிப்பது பார்வதி, பரமேஸ்வரன். பூணூலில் தரிப்பது பிரம்ம ஸ்வரூபம், கரங்களில் தரிப்பது தேவதா ஸ்வரூபம்.

## உருத்திராக்கம் தானம் அளித்தல் :

சிவனடியார்களுக்கும், சிவ அன்பர்களுக்கும் உருத்திராக்க மணியையோ, மாலையையோ தானமாக அளிப்பது பெரும் சிவ புண்ணியம் ஆகும். தானங்களில் இதற்கு ஒப்பாகவோ, மேலாகவோ இன்னொன்று இல்லை.



# அறுகம்புல்லின் மகிமை

அனலாசுரன் என்றொரு அரக்கன் செந்நிறத் தீம்பிழம்பான மேனியும், கோரைப் பற்கள் துலங்கிய பெரும் வாயுடனும், மிகுந்த சினத்துடனும், புயலை நிகர்த்த வேகத்துடனும் தேவலோகத்தில் நுழைந்தான். மலைகளையும், யானைகளையும் தூக்கிப் பந்தாடும் வலிமையும், நிற்குமிடத்தில் இருந்து வெகுதூரம் வரை அக்கினியாகவும் தகித்த அனலாசுரன் பூலோகத்தில் தென்பட்ட பொருட்களைச் சிதைத்தும், உயிர்களை அழித்துப் பொசுக்கியும் நடத்திய கோர விளையாட்டை அறிந்திருந்த தேவர்களும், இந்திரனும் நடுங்கினார்கள். அந்த முகத்தின் கொடூரமும், நெருப்புத் தன்மையும் அனைவரையும் அஞ்ச வைத்த காரணத்தால், தேவர்கள் அனைவரும் அங்கிருந்து புறப்பட்டு சத்ய லோகத்தை அடைந்து நான்முகனைத் தொழுதனர்.

நான்முகன் அதற்கு வழி தெரியாமல் விழிக்கவே, அனைவரும் பாற்கடலை அடைந்து திருமாலைப் போற்றித் தொழுதனர். தங்கள் இருப்பிடத்தை அனலாசுரனிடம் விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டதையும், அவனுடைய வெம்மையின் கொடூரத்தையும் கூறி முறையிட்டனர். மாகவிஷ்ணுவும், அனலாசுரனின் வெம்மையையும், வலிமையையும் நன்கறிந்தார். பிறகு அவர் கூறினார்.

“தேவர்களே! உங்கள் துன்பம் எனக்குப் புரிகிறது. ஆனால், இதற்கு நான் செய்யக்கூடியது ஏதுமில்லை. இதிலிருந்து அனைவரையும் காப்பாற்ற வல்லவர் விநாயகப் பெருமான் தான். முதலும் முடிவுமற்ற அந்தப் பரம்பொருளை, ஆதிமூர்த்தியை, அடியார்களுக்கு அடியவரை, தர்ம ரக்ஷகரை, நாம் அனைவரும் சரணடைவதே வழி. அவரது பத்ம பாதங்களைப் போற்றித் துதிப்பதே நல்ல தீர்வு அளிக்கும்”

மகாவிஷ்ணு இவ்விதம் கூறியவுடன், தேவர்கள் உட்பட அனைவரும் விநாயகப் பெருமானைப் போற்றித் துதித்தனர். அவர்களுடைய பிரார்த்தனையிலும், பக்தியிலும் மகிழ்ந்த விநாயகப் பெருமான் அவர்கள் முன்னிலையில் தோன்றினார். அப்படித் தோன்றிய பெருமானை அனைவரும் வணங்கி நின்றனர். ஆனைமுகத்து அண்ணலும் தேவர்களை நோக்கி,

“இந்திராதி தேவர்களே! அஞ்சாதீர்கள். உங்கள் அச்சத்துக்குக் காரணமான அனலாசுரனை அழித்து உங்களைக் காக்கிறேன்” என்று அபயம் அளித்தார். தேவர்களும் சற்றே துணிவு கொண்டனர்.

அப்படி அவர்கள் துணிவு கொள்ளும் வேளையிலேயே திடீரென்று இடிமுழக்கம் போன்ற குரல் எழுந்தது.

“அண்டமெல்லாம் தேடியும் அகப்படாத தேவர்களே! நன்றாக அகப்பட்டீர்கள் இப்போது என்னிடம். உங்கள் அனைவரையும் ஒரு சேர உண்பேன் இப்போதே!” என்று ஒலித்த அந்தப் பெருங்குரலால் பெரும் அச்சத்துக்கு ஆளாகி நின்றார்கள் தேவர்கள். ஆம்! அது அனலாசுரனின் குரல்தான்.

அந்தக் குரலைக் கேட்டவுடன் மீண்டும் நடுங்க ஆரம்பித்தார்கள் தேவர்கள். அவன் தொலைவில் நிற்கும் போதே அனலின் வெம்மையைத் தாங்க முடியவில்லை அவர்களால். அவன் மேலும் நெருங்கினால், அந்த நெருப்பில் தாங்கள் அனைவரும் சாம்பலாவது திண்ணம்

என்று எண்ணியதால் மேலும் நடுகத்துக்கு ஆளானார்கள் தேவர்கள். அப்படி அவர்கள் அஞ்சிக் கொண்டிருந்த வேளையில் விநாயகப் பெருமான் தன் துதிக்கையை நீட்டி அனலாசுரனை வளைத்துப் பிடித்து விழுங்கிவிட்டார்.

அண்டமும், அதன் அணுக்களுமாய் விநாயகப் பெருமான் அனலாசுரனை விழுங்கியதும், அவர் வயிறு முழுதும் கொதித்தது. பிரபஞ்ச வெளியெங்கும் அந்த அனலின் வெம்மை தகித்தது. அந்த உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் தேவர்களும், அண்டங்களில் வாழும் ஜீவன்களும் துடித்தன. பெருமானின் அந்த வெம்மையைத் தணிக்க என்ன செய்வது என்பது புரியாமல் தத்தளித்தனர் தேவர்களும், மூவரும்!

இந்திரன் அமுதத்தைப் பொழியுமாறு நிலவுக்கு உத்தரவிட்டான். நிலவும் தன் அமுத தாரைகளை பெருமான் மீது பொழிந்தது. ஆனாலும் வெம்மை அடங்கவில்லை. கிரியா சக்தியும், ஞான சக்தியும் இருபுறமும் நின்று இதமாக்க முயன்றனர். இயலவில்லை. குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர்களால் திருமால், விநாயகரின் மேனியை வருடினார். மாறவில்லை. குளுமையான திரவியங்களைப் பூசினார் சிவபிரான். குறையவில்லை. பெருமானின் உஷ்ணம் அதிகரித்த வண்ணமாகவே இருந்தது. எதைச் செய்தும் அடங்காத அந்த உஷ்ணத்தைத் தணிக்க என்ன வழி என்று ஆய்ந்தனர் முனிவர்கள்.

இறுதியாக ஒவ்வொரு முனிவரும் 21 அறுகம்புல்லை எடுத்து வந்து, வேழமுகப்பெருமானின் உச்சி முதல் பாதம் வரை போர்த்தினர். அப்படி அறுகம்புல்லால் அணி செய்யப்பட்ட பெருமானின் வயிற்றின் வெப்பம் அடங்கத் தொடங்கியது. அறுகம்புல்லின் குளிர்ச்சி, அனலாசுரனின் வெம்மையைக் குறைப்பித்தது. அந்த வெம்மை குறைந்ததால், அனைத்து ஜீவன்களின் வயிறும் குளிர்ந்தது.

உடனே பெருமானும் முகமலர்ச்சியுடன் கூறினார். "தேவர்களே! அன்பர்கள் சொரிந்த அறுகம்புல்லே அதீதமான வெப்பத்தை அடக்கியது. அதைப் போன்றே கழிதற்கரிய பாவங்களும் அறுகம்புல்லால் அர்ச்சித்தால் அழிந்து போய்விடும். ஏராளமான அறுகம்புல் எடுத்துவர இயலாதவர்கள், குறைந்தது இருபத்தொரு அறுகம்புல்லாவது எடுத்து வந்து அர்ச்சிக்க வேண்டும். அறுகுக்கு நிகரான மலரோ, தளிரோ இல்லை".

அன்று முதல் வேழமுகப் பெருமானை அறுகினால் அர்ச்சிக்கப்படுவதும், அலங்கரிக்கப்படுவதும், வழக்கமாயிற்று.

# மூலிகை இலைச் சாறுகள் - பயன்கள்

துளசி, வில்வம், அறுகம்புல், அரசு, கல்யாண முருங்கை, வாழைத்தண்டு, கொத்தமல்லி, கறிவேப்பிலை, கற்பூரவல்லி (ஓமவல்லி), புதினா, வல்லாரை, தூதுவளை, மஞ்சள் கரிசலாங்கண்ணி, செம்பருத்தி, முருங்கை இலை, மணத்தக்காளி, வெந்தயக் கீரை இவற்றில் (ஒரு தடவைக்கு கைப்பிடி இலை போதுமானது) ஏதாவது ஒரு இலையில் (கிடைக்கும் இலை) கைப்பிடி 1 அளவு எடுத்துக் கழுவி மிக்சியில் போட்டு டம்ளர் (250 மிலி) தண்ணீர் விட்டு சட்டினி போல் அரைக்கவும்.

அதைச் சுத்தமான வெள்ளைத் துணியில் ஊற்றிப் பிழிந்து சாறு எடுத்துக் கொள்ளவும். இந்தச் சாறு ஒரு ஆளுக்கு ஒரு நேர உணவுக்குப் போதுமானது. சுவையாக வேண்டும் என்பவர்கள் சிறிது வெல்லம் அல்லது தேனைச் சேர்த்துக் கொள்ளலாம்.

எல்லா இலைச்சாறுகளும் பல நோய்களை குணப்படுத்தும் சக்தி பெற்றுள்ளது. இவ்விலைச் சாறுகளினால் நோய் எதிர்ப்புச் சக்தி பெறலாம். இவ்விலைச் சாறு காலையில் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது. இவ்விலைச்சாறு தயாரித்துச் சாப்பிட முடியாதவர்கள் கீரைகளாகச் சமைத்து உணவில் கலந்து சாப்பிடலாம். அல்லது மூலிகை சூப்பாகத் தயாரித்துச் சாப்பிடலாம்.

## சில இலைகளும் மருத்துவ குணங்களும்

**துளசி :**

ஜீரணக் கோளாறுகள், காய்ச்சல், இருமல், சளி, ஈரல் சம்பந்தமான நோய்கள், காதுவலி, முதலியவற்றிற்குச் சிறந்தது. இரத்தத்தில் உள்ள விஷத்தன்மையை வெளியேற்றிச் சுத்தம் செய்கின்றது.

**வில்வம் :**

காய்ச்சல், அனீமியா, மஞ்சள், காமாலை, சீதபேதி போன்றவற்றிற்குச் சிறந்தது. காலரா தடுப்பு மருந்தாக வில்வம் செயல்படுகின்றது. மலச்சிக்கல், சர்க்கரை வியாதிக்கு மிகவும் பயன்படுகிறது.

**அறுகம்புல் :**

இது விநாயகர் கோயில்களில் கிடைக்கும். எல்லா நோய்களுக்கும் ஏற்ற சிறந்த மருந்து. காலையில் பசி ஆரம்பித்த உடன் வெறும் வயிற்றில் 7 மணிக்குச் சாப்பிட வேண்டும். இதைச் சாப்பிட்டு 1 மணி நேரம் கழித்து ஏதேனும் சாப்பிடலாம்.

இதைக் கடைப்பிடித்தால் பல நோய்கள் குணமடையும். உடல் எடை குறைய, கொலஸ்டிரால் குறைய, நரம்புத் தளர்ச்சி நீங்கி இரத்தப்புற்று குணமடைய அறுகம்புல் மிகவும் சிறந்தது.

இருமல், வயிற்றுவலி, இருதயகோளாறு, மூட்டுவலி, சர்க்கரை வியாதி, அனீமியா போன்ற நோய்களுக்கு மிகவும் சிறந்த மருந்து. இதை ஆரோக்கியமாக இருப்பவர்கள்

பருகினால் சிறந்த (டானிக்) நோய் எதிர்ப்புச் சக்தி தரக்கூடியது. இரத்தத்தில் ஹீமோ குளோவின் அதிகரிக்கப் பயன்படுகிறது. தோல் வியாதிகள் அனைத்தும் அறுகம்புல்லில் நீங்கும். இரத்தத்தில் உள்ள விஷத் தன்மைகளை வெளியேற்றுவதில் திறமையானது.

**அரசு இலை :**

ஏழைகளின் டானிக் அரசிலைச்சாறு எனலாம். ஒரு நல்ல மலமிளக்கியாகும். உடலைக் குளிர்ச்சியடையச் செய்கின்றது. காம உணர்ச்சிகளைத் தூண்டும். கர்ப்பப்பைக் கோளாறுகள் மறையும். காய்ச்சலுக்கும் நல்லது.

அரசமரத்தின் பழங்கள் மலட்டுத் தன்மையை நீக்க வல்லது. எல்லா ஊர்களிலும் பெரும்பாலும், ஊரின் நடுவிலே பொது இடங்களிலே இதை நட்டு வளர்த்திருப்பார்கள். யாருடைய அனுமதியும் இல்லாமல் அனைவரும் இதனை உபயோகப்படுத்திப் பலன் பெறட்டும் என்ற நோக்கத்தில்.

ஆனால் நாமோ ஊர்க்கதைகளை பேசும், பொழுதை வீணடிக்கும் இடமாக அதை ஆக்கி விட்டோம்.

**பூவரசு :**

பேதியாகுதல், சீத பேதி ஆகியவற்றிற்கு இதன் இலைச்சாறுகள் மிகவும் நிவாரணம் அளிக்கக்கூடியது. தீக்காயங்கள், புண்கள், தோல் வியாதிகள், தொழுநோய் எல்லாவற்றிற்கும் இந்த இலையை அரைத்துப் பூசலாம்.

**கல்யாண முருங்கை :**

அதிகமான பித்தத்தை நீக்கும். முடி நரைக்காமலிருக்க உதவுகிறது. காய்ச்சலைக் குறைக்கும். நீர் பிரியும்.

மலமிளக்கி. மாதவிடாய்த் தொல்லையை நீக்கும். கிருமிகளை வெளியேற்றும். வீக்கங்களை குறைக்கும். நீரிழிவு, சீதபேதி, வாதம் குணமடையும். 17 வயது வரை வயதுக்கு வராத பெண்களுக்கு இதன் சாறு நல்ல பலன் தருகின்றது.

**வாழைத்தண்டு :**

சிறுநீரக் கல் "Kidney Stone" ஆபரேஷன் செய்யாமலே குணமடையப் பச்சை வாழைத்தண்டுச் சாறு உதவுகிறது. 100 கிராம் வாழைத்தண்டுடன் ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு மிக்ஸியில் சட்னி போல் அரைத்து சாறு பிழிந்தால் ஒரு நபருக்கு ஒரு நேரத்திற்குப் போதுமானது. பாம்புக்கடி போன்ற விஷத்தை வெளியேற்ற உதவுகிறது. சிறுநீரத் தொல்லைகள் வராமல், சிறுநீரகத்தைக் கழுவிச் சுத்தம் செய்வதற்காக ஆரோக்கியமாக வாழ்பவர்கள்கூட வாரம் இரண்டு நாள் வாழைத்தண்டுச் சாறு குடித்துவர வேண்டும்.

**கற்பூர வல்லி (ஓம வல்லி) :**

மிகச் சிறந்த இருமல் மருந்து. 5 இலைகளை அப்படியே சாப்பிட்டால் உடனே மூக்கடைப்பு, தொண்டை வறட்சி, இருமல் மறையும். புகழ்பெற்ற இருமல் மருந்துகளைப் போல விரைவாக செயல் புரியும்.

**கண்டங்கத்தரி :**

கிராமங்களில் பரவலாகக் காணப்படும். இதன் இலைகளும், காய்களும் முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலையையும், காய், பழங்களையும் முட்கள் நீக்கிக் கஷாயமாகவும், உலர்த்திப் பொடிசெய்தும் சாப்பிட்டு வருவதால் காசநோய், ஆஸ்த்துமா, மார்ச்சளி, காய்ச்சல், தொழுநோய், இரத்த அழுத்தம், பக்கவாதம், கல்லீரல் நோய்கள் முதலியவற்றிற்கு மிகவும் சிறந்தது.

ஒரு பிடி (10 இலைகளை) பாத்திரத்தில் போட்டு 1 டம்ளர் நீர் விட்டு காய்ச்ச வேண்டும். நீர் அரை டம்ளர் ஆகும் வரை காய்ச்சிப் பின் வடிகட்டி ஆறவைத்து உணவுக்குப் பின் குடிக்கவேண்டும். இத்துடன் கைப்பிடி அளவு வேப்பிலையையும் ஆடாதோடை இலை ஒரு ஐந்தும் சேர்த்துக் கஷாயம் தயாரிக்கலாம்.

**பவுடர் முறை :** இலை, காய், பழம் எதுவானாலும் வெய்யிலில் உலர்த்திப் பின் உரலில் இட்டு இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு ஒரு டம்ளர் நீரில் ஒரு ஸ்பூன் தூள் வீதம் கலந்து காலை மாலை இரு வேளையிலும் உணவுக்குமுன் குடித்து வரலாம். பவுடர் தயாரிக்கும் போதும் அத்துடன் வேப்பிலை, ஆடாதோடை பவுடர்களைச் சம அளவில் கலந்து உபயோகப்படுத்தலாம்.

**செம்பருத்தி :**

செம்பருத்தி இலைகளை உலர்த்திப் பொடி செய்து பவுடராக 1 டீஸ்பூனை நீரில் கலந்து குடித்தும், இலைகளைக் கஷாயமாகத் தயார்செய்து அரை டம்ளர் குடித்தும் கீழ்க்கண்ட நோய்களின் தொல்லைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். மாதவிடாய்த் தொல்லையில் இருந்தும், சிறுநீர்ப் பிரச்சனையிலிருந்தும் விடுபடலாம்.

உடலின் உள்ளே, வெளியே உண்டாகும் வீக்கங்களை குணப்படுத்தும், முக்கிய உறுப்புக்களின் மேலுள்ள பாதுகாப்பான சவ்வுகளைப் (Mucus Membranes) பாதுகாக்கின்றது. காமத்தை வளர்க்கும், சர்க்கரை வியாதிக்கும் நல்லது. இதன் பூக்களையும் சாப்பிடலாம். அதில் தங்கச் சத்து நிரம்பியுள்ளது. பூவில் உள்ள மகரந்தத்தை நீக்கி விடவும்.

**தும்பை :**

தும்பை இலைகளைப் பறித்துவந்து மேலே கூறியது போல் பவுடராகவும், கஷாயகமாகவும் குடித்து வந்தால் பக்க வாதம், சளி, இருமல், தலைவலி, மார்புச்சளி, மூட்டு வாதம் முதலியவற்றுக்குச் சிறந்தது. பாம்புக் கடிக்குத் தும்பை இலைச்சாறு பாதியும் வாழைத்தண்டுச் சாறு பாதியும் கலந்து கொடுக்க வேண்டும். தும்பை இலை ஒரு தடவைக்குப் பத்து இலை போதும்.

**வெங்காயமும் பூண்டும் :**

இவை இரண்டையும் உணவுடன் அதிகமாக சேர்த்துக் கொள்வதினால் வயிற்றில் உள்ள கிருமிகளை வெளியேற்றி விடும். மற்றும் சொறி, சிரங்கு, யானைக்கால் வியாதி, சைனஸ், டான்சில், இரத்த அழுத்தம், இருமல், ஆஸ்த்மா, காய்ச்சல், காமாலை முதலியன குணமாகும். கொலஸ்ட்ரால் குறையும். பச்சைப் பூண்டுகளை அதிகமாக சாப்பிடக்கூடாது.

**குப்பை மேனி :**

ஒரு நேரத்தில் ஐந்து இலை சாப்பிட்டால் போதுமானது. இது கிருமிகளை வெளியேற்றும். பாம்புக் கடிக்கும் நல்லது. மூட்டு வாதம், சொறி, சிரங்கு, தோல் வியாதி, மூலம் முதலிய நோய்கள் குணமடையும். எந்தப் புண்ணுக்கும் இலையை அரைத்துப் பூச வேண்டும். சொறி, சிரங்கிற்குக் கட்டாயம் இலையை அரைத்துப் பூச வேண்டும். வெகு நாட்களுக்குச் சிரங்கைக் குணப்படுத்தாவிட்டால் அது சிறுநீரகத்தைப் பாதிக்கும்.

**உண்ணாநோன்பும் அதன் தேவையும் :**

ஒவ்வொரு மனிதனுக்கும் ஜீவசக்தி உயிராற்றல் (Vital force) இருக்கின்றது. இந்த சக்தியை நாள் தோறும் செலவு செய்து கொண்டிருக்கிறோம். வங்கிக் கணக்கில் இருக்கும் பணம் எடுக்க, எடுக்கக் குறைந்து கொண்டே வருவரைப் போல் மனிதன் தன்னுடைய (ஜீவசக்தியை) உயிராற்றலைச் செலவு செய்து கொண்டே இருக்கின்றான்.

ஆயிரத்தில் ஒரு மனிதன்தான் இன்று அந்த ஜீவ சக்தியை வளர்க்க முயற்சி செய்கிறான். நாம் சாப்பிடுவதை நிறுத்தியவுடன், நமது உடலில் உள்ள ஜீவசக்தி உடலில் உள்ள விஷங்களை, கழிவுகளையெல்லாம் வெளியேற்றுகின்றது. உண்ணா நோன்பு எல்லாரும் வாரத்தில் ஒரு நாள் கண்டிப்பாக இருந்தால் உடல் வளமுடன் நோயின்றி வாழ முடியும்.



# கோமாதா

## - சைவப் புலவர் சு. செல்லத்துரை -

பசு சாதுவான மிருகம்

"பசு பால் தரும்" - என்பது நாம் பாலர் வகுப்பில் படித்த பாடம்.

- தாய் தன் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் பாலூட்டி வளர்ப்பாள். நம் அனைவர்க்கும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப் பருவம் வரை பால் தந்து காப்பது பசு.

- நம் உயிர் பிரியும் வேளையிற்கூட இறுதியாக (உற்றார், உறவினர்) எம் வாயில் விடப் பால் தருவது பசு.

- ஆதலால் தாய்மார்களுக்கெல்லாம் அரசியாகவும் (கோ - அரசு, மாதா - தாய்) பசுத்தாயாகவும் (கோ - பசு, மாதா - தாய்) கோமாதா எனப் போற்றப்படுவது பசு.

- நாம் கழித்து விடும் புல், தவிடு, கஞ்சி, கழிநீர், வைக்கோல், புண்ணாக்கு, இலை, குழை முதலானவற்றை உண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பூரண சத்துள்ள பாலைத் தருவது பசு.

- தனது கழிவுப் பொருள்களான சாணியையும், மூத்திரத்தையும் கூடப் பயிர்வளர்க்கும் உயர்ந்த இயற்கை உரமாகவும், கிருமி நாசினியாகவும் தருவது பசு.

- நமது வீட்டையும் சுற்றாடலையும் கூடச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உபகாரமான சாணியைத் தருவது பசு.

- எல்லாத் தேவர்களும், முனிவர்களும், புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் எழுந்தருளி இருத்தற்குரிய தெய்வத் திருவுரு பசு.

- எல்லாத் தேவர்களின் அனுக்கிரகத்தையும் பெறுதற்குரிய வழிபாட்டுப் பொருளாயிருப்பது பசு.

- சைவ சமயக் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணிய ஆவாகனத்துக்குரிய பாலைத் தருவது பசு.

- இறைவன் உவக்கும் அபிஷேகத்துக்குரிய பஞ்ச கௌவியத்துக்கான பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பவற்றைத் தரும் தெய்வீகத் தன்மையுடையது பசு.

- சைவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிட்டை செய்யுமுன் கருவறையைத் தூய்மை செய்து தேவர்களின் ஆசியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுவது பசு.

- சைவாலய நித்திய பூசையில் கோபூசை செய்து மலரிட்டுத் தூப தீப ஆராதனை செய்து பிரசாதம் கொடுத்து வணங்கப்படுவது பசு.

- சிவபூசையின் இறுதியில் செய்யப்படும் கபிலா பூசைக்கு உரியது பசு.
- கோதானப் பொருளாவதன் மூலம் பாவம் நீக்கிப் பெரும் சிவ புண்ணியத்தை ஈட்டித் தருவது பசு.
- சிவகதி நல்கும் சிவ சின்னமான திருநீற்றின் மூலப்பொருளான சாணியின் உற்பத்தித்தானமாய் இருப்பது பசு.
- புது வீடு அமைக்கும் போது தானசுத்திக்காக அங்கு கட்டப்படுவது பசு.
- திருமணத்தின் போது மாங்கல்யதாரணம் முடிந்தவுடன் எல்லாத் தேவர்களின் ஆசிர்வாதத்தையும் பெறுவதற்காகத் தரிசனமாவது பசு.
- மணமக்கள் நாள் முகூர்தத்தில் அருந்துவதற்குரிய பால் பழத்துக்கான பாலைத் தருவது பசு.
- அபரக்கிரியையில் அந்தியேட்டி முடித்து வீட்டுக்கு வரும் போது வாயிலில் தரிசனமாவது பசு.

இவ்வண்ணம் நம் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளிலும் உடனிருந்து எம் வாழ்வைப் புண்ணிய நெறிப்படுத்தவல்ல பசுவைப் போற்றி வளர்ப்பது நம் தலையாய கடமையாகும்.

பசுவுக்கு உணவு கொடுத்தல் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமை என்பது "யாவர்க்கும் ஆம் பசுவுக்கும் ஒருவாயுறை" என்னும் திருமூலர் திருமந்திரத்தால் உணரப்படும்.

பசு ஓம்புதல் இம்மை, மறுமையாகிய இருமைப் பயனையும் தரவல்லது.

திருமூலர், சண்டேசுரர், ஆனாயநாயனார், மனுநீதிகண்டசோழன், ஞானப்பிரகாசமுனிவர் பசு ஓம்புதல் மூலம் சிவகதி பெற்ற செய்திகள் இதற்கு ஆதாரமாகும்.

## திருமூலர்

இமயத்திலிருந்து தென்னாடு நோக்கி வந்த சுந்தரமுனிவர் என்பவர் வரும் வழியில் பசு மேய்க்கும் மூலன் எனும் இடையன் இறந்து கிடக்க அவனைச் சூழ்ந்து நின்று பசுக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதைக் கண்டார். பசுக்களின் துயர் துடைக்காது செல்வது பாவமெனக்கருதித் தன் யோக சிந்தனையில் தனது உடலை ஒரு மரத்தின் மேல் கிடத்திவிட்டு மூலன் உடலிற் புகுந்து பசுக்கள் மகிழுமாறு செய்து அவற்றை உரியோரிடம் சேர்ப்பித்தார்.

மீண்டு வந்தபோது தன் உடலைக் காணாமையால் இறைவன் ஆணைப்படி அவ்விடத்தல் தவமிருந்து மூவாயிரந் தமிழ் எனும் திருமந்திரத்தைத் தந்து திருமூலநாயனார் எனும் சிறப்புப்பெயர் பெற்றுச் சிவகதி அடைந்தார்.

## சண்டேசுரர்

பசு மேய்ப்பவன் ஒருவன் பசுவைக் கோலால் அடிப்பதைக் கண்டு மனம்

பொறுக்கமாட்டாத விசாரசருமர் எனும் பிராமணச் சிறுவன் அன்று முதல் மேய்ப்பானை விலக்கித் தானே பசுக்களை மேய்த்து வந்தான். மண்ணியாற்றங்கரையில் முறையாகப் பசுக்களை மேய்த்து அவை தாமாகச் சுரந்து பொழிந்த பால் கொண்டு அப்பால் வீணாகா வகையில் மணலில் அமைத்த சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து வழிபட்டார். இதன் உண்மையை அறியாத மூடர் சொற்கேட்ட தந்தையார் பாலை மண்ணில் சொரிந்து பாழ் செய்கிறானே என அதைக் காலால் இடறத் தன் சிவபூசைக்குக் குந்தகம் செய்தவர்களைச் சிறுவன் கோலால் அடிக்க அது மழுவாகித் தந்தையின் கால்கள் தறிபட்டன. சிவபூசையின் உறுதி கண்ட சிவபெருமான் தந்தைக்கும் தனயற்கும் அருள்புரிந்து விசாரசருமருக்குச் சிவவழிபாட்டின் பயன் நல்கும் சண்டேசுவரர் பதம் நல்கினார். பசு ஓம்பலின் பயன் சண்டேசுரர் பதம் நல்கியது.

### ஆனாய நாயனார்

பசுக்குலம் மேய்த்தலையே சிவப்பணியாகக் கொண்டவர். புல்லாங்குழல் இசைக்கும் பேரிசையாளர். பஞ்சாட்சர மந்திரத்தைப் புல்லாங்குழலில் இட்டு இசைத்துப் பசுக்களை மகிழச் செய்பவர். இவரது பஞ்சாட்சர இசையில் தேவர்களும் தம்மை மறந்து மகிழ்ந்தனர். சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளும் தம் மூர்க்கம் தணிந்து தெய்வ இசைப்பட்டன. இசையால் பசு மேய்த்த சிவபுண்ணியத்தால் ஆனாயர் சிவபதம் பெற்றார்.

### மனுநீதி கண்ட சோழன்

அரசனின் மைந்தன் அரச வீதியில் உலாவரும்போது தேரின் இடைப்புகுந்த பசுக்கன்று அடியுண்டு இறந்தது. இதனைக் கண்ட தாய்ப்பசு தாங்கொணாத் துயரால் கண்ணீர் விட்டுக் கதறி அழுதது. இதை அறிந்த மன்னன் பெருந்துயர் உற்றான். மந்திரிகள் சொன்ன வழிமுறைகள் பசுவின் துயரைத்துடைக்க உதவா என உணர்ந்தான். கன்றை இழந்து வருந்தும் தாய்ப்பசு போலத் தானும் தன் ஒரே மகனை இழந்து வருந்துவதே முறை எனத் துணிந்தான். தன் மகனை வீதியிற் கிடத்தித் தானே அவன் மீது தேர் செலுத்திக் கொன்றான். தருமம் தன் வழிச்செல்கை கடனென்று தன் மைந்தன் மருமந்தன் தேராழி உற ஊர்ந்த அருமந்த செயல் கண்ட சிவபெருமான் அருளால் பசுக்கன்றும், அரசிளங் குமரனும் உயிர் பெற்று அனைவரும் சிவகதி பெற்றனர். ஒரு பசுவின் கன்றைக் கொன்றததற்காகத் தன் மகனைக் கொன்று பசு ஓம்பலில் பரகதி பெற்றார் மனுநீதிச்சோழன்.

### ஞானப்பிரகாச முனிவர்

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நடந்த காலம்; யாழ்ப்பாணத்தில் கொலையும் புலாலும் மறுத்த சைவமக்கள் வாழ்ந்த காலம். போர்த்துக்கேயர் பறங்கியர்க்கு உணவாக நாளுக்கொரு வீட்டார் கொழுத்த பசுக் கொடுக்க வேண்டிய கொடிய சட்டம். தன்முறை வந்தபோது பசுக் கொலையாகிய கொடிய பாவம் செய்வதிலும் பார்க்கப் பரதேசம் போவதே மேல் எனக் கருதி இரவோடிரவாகக் கடல் கடந்து இந்தியா சென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அங்கு சிதம்பரம் சேர்ந்து தவமியற்றிச் சிவஞானம் பெற்றுச் சிவகதி சேர்ந்தார். பசுக் கொலைக்கஞ்சிப் பரதேசம் போய்ச் சிவகதி பெற்றவர் ஞானப்பிரகாச முனிவர்.

இவ்விதம் சிவகதி நல்கவல்ல தெய்வப் பசுவுக்கு அதன் குலமான மாடுகளுக்கும் இன்று என்ன நடக்கிறது? கொன்று தின்கிறார்களே. உடல் வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைச் சேர்த்துப் பாழ்படுகிறார்களே. பசுவின் ஊனைத் தின்று தம் ஊனைப் பெருக்குன்கிறார்களே.

வள்ளுவரையும், திருக்குறளையும் வானளாவ வாயாரப் போற்றிப் புகழ்பெறும் கனவான்கள்.

*"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்"*

என்பதை அறியார்களா?

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்"*

என்ற குறளை ஏன் படித்தார்கள். கொல்லும் போது என்னைக் கொல்லாதே என்று கண்ணீர் வடித்து "அம்மா" எனக் கதறும் அவல ஒலி காதில் விழவில்லையா?

புலால் உண்பவர் புலையர் என்பதை மறந்து யார் யாரையோ புலையரெனப் போலித்தனங் காட்டுவது கொடுமையல்லவா?

பால் வற்றிய பசுவையும், இளைத்த பசுவையும் இறைச்சிக்கு விற்பது அடுக்குமா?

சைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு, தம் நெற்றியில் திருநீற்றைப் பூசிக் கொண்டு மாட்டிறைச்சி உண்பவர்களே! இக்கொடிய பாவத்திற்கு என்ன பிராயச்சித்தம் செய்யப்போகிறீர்கள்.

பசுவின் குருதி ஒருதுளி நிலத்தில் வீழினும் அதிலிருந்து பல கோடி அசுரர்கள் தோன்றி உலகைக் கெடுப்பர் என்று நீதிநூல் சொல்வதைக் கேளுங்கள்.

அதை உண்பவர்கள் அரக்கர்களாகி அவர்களால் இந்த உலகம்படும் அவலத்தைக் கண்முன்னால் காண்கிறீர்களல்லவா.

கொன்றவனும் கொடுத்தவனும் தின்றவனும் கொடும்பாவிகளாகி மீளாத் துன்பத்தில் அழுந்துவர் என்பதை உணர்வதெப்போ?

அதிகபால் எடுக்க வேண்டுமென்பதற்காகப் புலால் எச்சங்களை அரைத்துப் பசுவுக்கு உணவாகக் கொடுப்பதும், புலால் உண்ட பசு தரும் பாலைச் சிவாலயத்திற்குக் கொடுப்பதும் பாவமான செயல் அல்லவா.

சைவச் சான்றோர்களே! பசுக் கொலையைத் தடுத்து நிறுத்தாமல், அதன் பாவத்தை உலகுக்குணர்த்தாமல் இருப்பது அப்பாவத்தில் பங்காளிகளாக்கி விடுமன்றோ.

மாட்டைத் தின்று மக்கள் அர்க்கர்களாகும் நிலையை மாற்றி மாட்டைக்காத்து மக்களைத் தேவர்களாக்கும் மார்க்கம் காட்ட முன் வாருங்கள்.

# துளசி

தருமத்துவஜ மன்னனுக்கும், அவன் பிரய மனைவி மாதவிக்கும் கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் திருமகளின் அம்சத்துடன் ஒரு பெண்குழந்தை பிறந்தது.

குழந்தையின் அழகுக்கு இணையாக எதையும் காண முடியாதிருந்ததால், அதற்கு துளசி என்று பெயரிட்டார்கள். (துள என்றால் ஈடு, சி என்றால் இல்லை)

துளசி பருவமெய்தியபோது அவள் அழகுக்கு இணையாகத் தேவலோகத்தில்கூட எந்தப் பெண்ணும் இல்லை. அவளை மணமுடிக்க உலகனின் அத்தனை ஆண்களும் விரும்பி ஏங்கினார்கள். ஆனால், பருவ வயதால் அவயவங்கள் ஏக்கமுற்றாலும், துளசிக்கு எந்த ஆணிடமும் விருப்பம் வரவில்லை.

ஓர் இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அவள் ஒரு கனவு கண்டாள். அவளும் முகம் புரியாத பல தோழிகளும் ஒரு நதி தீர்த்தத்தில் நனைந்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அப்போது, நீரில் ஒரு நீலநிற மேனி. தாமரை மொட்டுகள் போல் வெள்ளையும் சிவப்பும் கலந்த கண்கள். பார்த்த நொடியிலேயே உயிரினங்கள் அத்தனையையும் வசியம் பண்ணும் குறும்புப் புன்னகை.

காணக்கிடைக்காத இந்த ஆணழகன் யார்? என்று துளசி மிகத் தவித்தபோது, அவளுக்கு விடை கிடைத்தது. இது மாயக் கிருஷ்ணனின் தோற்றமல்லவா, பாற் கடலில் சயனித்து தன் வசீகரத்தால் பிரபஞ்சத்தையே காத்து ரட்சிக்கும் சாட்சாத் நாராயணன் தான் கனவில் வந்து அலைக்கழித்தவனா?

அவனை அடைவது ஒன்றே இலக்கு என்று, கொடும் கானத்தில் ஒற்றைக் காலில், நின்று அவள் கடுந்தவம் இயற்றினாள்.

தவத்தின் பலனால் அவளுக்குப் பழைய பிறவிகளின் நினைவுகள் அலை மோதின. கிருஷ்ணன், கோபிகைகளுடன் ஆனந்தித்து இருந்த காலத்தில், அவனையே மோகித்திருந்த அந்த கோபிகைகளில் ஒருத்தியாக இருந்தவள் அல்லவா நான்! என்பால் கிருஷ்ணன் மிகுந்த பிரியம் காட்டி இன்புற்றிருந்தது கண்டு ராதை கோபம் கொண்டாளே! என்னை மானிட இனத்தில சென்று பிறக்கச் சாபமிட்டாளே! கிருஷ்ணன் என்னைச் சமாதானம் செய்து 'பூலோகத்தில் தவமிருந்து பிரும்மனின் வரம் பெற்று என் அம்சமும் நான்கு விழிகளும் கொண்ட மேன்மையானவனைக் கணவனாக அடைவாய் என்று ஆறுதல் தந்தானே!

அந்த மாயக் கண்ணனை அடைந்தே தீருவது என்று அவள் பசி தூக்கம் மறந்து தவமிருந்தாள். அவள் தவம் கண்டு பிரம்மன் அவள் முன் தோன்றினார்.

"கிருஷ்ணன் மட்டுமல்ல, கிருஷ்ணன் தேகத்திலிருந்து உருவான சுதாமன் என்பவனும் உன்னிடத்தில் மிகுந்த மோகம் கொண்டிருந்தான். கிருஷ்ணனுக்கு அவன் பிரிய தோழனாய் இருந்தது கண்டு அவனையும் ராதை சபித்துவிட்டாள். அவன் அரச குலத்தில் பிறந்து சங்கசூடன் என்ற பெயருடன் வளர்ந்து வருகிறான். அவனுக்கு நீ பத்தினியாகி அவன் மனக்குறையை நீக்க வேண்டும் என்பது இப்பிறவியின் விதி. முற்பிறவியின் நினைவுகள்

அகன்று, நீ இயல்பான நங்கையாக அவனைக் கரம் பிடிப்பாய், அதன்பின், உன் நாயகனை அடையும் பாக்கியம் பெறுவாய்'' என்று வரம் அருளி மறைந்தார்.

பதரிகாவனத்தில் அவள் தோழிகளுடன் விளையாடிக் களித்திருக்கையில், அந்தக் காதல் நாயகனை சந்தித்தாள், அவனைப் பார்த்த கணத்தில் உடலில் மோகம் கூடியது. நாணத்தால் தலை குனிந்தது.

அப்போது அவர்களுக்கு முன் பிரம்மன் தோன்றினார். "திருமாலுக்குத் திருமகள். சிவனுக்கு உமை. சங்கசூடா, உனக்கு துளசி. இப்பிறவியில் இவளே உற்ற துணை. இவளை காந்தர்வ விவாகம் செய்து கொள். காலகதியில் இவ்வுலகை நீத்த பிறகு, வைகுந்தத்தில் துளசியும், நீயும் நாராயணனைச் சென்றடைவீர்கள்'' என்று ஆசிகள் சொல்லி மறைந்தார்.

சங்கசூடன், துளசியை காந்தர்வ விவாகம் செய்து கொண்டான். முற்பிறவிகளின் நினைவுகள் ஏதுமின்றி, துளசி சங்கசூடன் மீது அபரிதமான மோகம் கொண்டு அவனிடத்தில் தன்னை சமர்ப்பித்தாள்.

ஆனால், காலம் தன் காய்களை நகர்த்தியது.

நாராயணனுக்கு, பிரம்மனிடமிருந்தும், தேவர்களிடமிருந்தும் கவலையான கோரிக்கைகள் வந்து குவிந்தன.

"சங்கசூடன் ஆட்சியில் தேவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு கூடக் கிடைக்கவில்லை. இதற்கு முடிவு கட்டவில்லையென்றால், நாம் சங்கசூடனுக்கு அடிமையாகிக் கிடக்கும் கேவலம் நேரும்''

எல்லாம் அறிந்த நாராயணன் புன்னகைத்தார்.

"நீங்கள் அனைவரும் சிவபெருமானிடம் சென்று முறையிடுங்கள். அவர் தான் சங்கசூடனை சம்ஹாரம் செய்ய வல்லவர்'' என்று அருளினார்.

அதன்படியே தேவர்கள் ஈசனிடம் முறையிட, அவரது ஆணைப்படி அத்தனை சிவகணங்களும், குமரனும், அவன் படையினரும் பூலோகம் அடைந்து போருக்குத் தயாரானார்கள்.

போர் துவங்கியது. இருபுறமும், தலைகள் உருண்டன. போர் மும்முரமாகியது. ஆனாலும் போர் நீண்டு கொண்டே போனதே தவிர, சங்கசூடனை வீழ்த்த யாராலும் இயலவில்லை.

இறுதியில், பரமேஸ்வரனே அவனை எதிர்கொள்ளத் தீர்மானித்தார். போரில் வீழ்த்தப்பட்ட தேவகணங்களையும், சிவகணங்களையும் தம் சக்தியால் உயிர்தெழச் செய்தார். பல வருடங்கள் அந்தப் போர் தொடர்ந்தது. ஆனால், பிரம்மன் கொடுத்திருந்த வரத்தினால், சங்கசூடனை வீழ்த்துவது பரமனாலும் முடியவில்லை.

துளசியைச் சந்திக்கும் காலம் வந்துவிட்டதை நாரணன் உணர்ந்தார். புன்னகையுடன் எழுந்தார். போர்க்களம் சென்றார். சங்கசூடன் முன் முதிய பிராமணன் போல் உருவெடுத்து வணங்கி நின்றார்.

சங்கசூடன் அவரைப் பணிந்து, "அரசவையில் வீற்றிருந்தபோது வந்திருந்தீரகளென்றால், பொன்னும், பொருளும் இன்னும் வேண்டுவன எல்லாம் தந்திருப்பேன். போர்முனையில் அல்லவா இருக்கின்றேன்..." என்று வருந்திச் சொன்னான்.

"இப்போது உன்னிடம் இருப்பதைக் கூட நீ கொடுக்கலாமே. நீ அணிந்திருக்கும் மந்திரக் கவசத்தை எனக்கு வழங்குவாயா?"

வந்திருப்பவர் உள்நோக்கத்தை சங்கசூடன் புரிந்துகொண்டான். ஆனால், சொன்ன சொல் தவறாதவனாக, தன் மந்திரக் கவசத்தைக் கழற்றி அவரிடம் கொடுத்துவிட்டான்.

நாராயணனன் அந்த மந்திரக் கவசத்தை அணிந்து சங்கசூடன் போன்றதொரு உருவம் எடுத்தார். மாயையாக பல லட்சம் படை வீரர்களை உருவாக்கி பூமி அதிர, சங்கசூடனின் அரண்மனைக்குத் திரும்பினார்.

துளசி, போலி சங்கசூடனை எதிர்கொண்டு மார்போடு தழுவினாள். "சங்கரையே வெற்றி கொண்டுவிட்டீர்களே!".

துளசி மயக்கத்துடன் அவரைத் தன் பஞ்சணைக்கு அழைத்துச் சென்றாள்.

அவ்வளவு தான் அதுவரை சங்கசூடனுக்குக் காவலாக இருந்த தர்மம் நிலை குலைந்தது. போர்க்களத்தில் பரமன் தன் சூலாயதத்தைச் சங்கசூடன் மீது எய்தார். அவனை சம்ஹாரம் செய்தார்.

சங்கசூடன் சிவனால் சம்ஹாரம் செய்யப்பட்டதும், சுதாமனாக மாறி நின்றான். அவனை அழைத்துப் போகக் கிருஷ்ணர் அனுப்பிய புஷ்பக விமானத்தில் ஏறினான். கோலோகம் அடைந்து, ராதாகிருஷ்ணரைப் பணிந்து நின்றான்.

அதே நேரத்தில், சங்கசூடனின் அந்தப்புரத்தில் துளசிக்கு, சந்தேகம் வந்துவிட்டது. உண்மை புரிந்தது.

நாரணன் உணர்த்தலால் மறந்து போன நினைவுகள் அத்தனையும் துளசிக்குத் திரும்பின.

ஆனாலும், கற்புக்கரசியாக இருக்க வேண்டிய தர்மத்திலிருந்து நழுவிவிட்ட துயரம் அவளை அலைக்கழித்தது.

"துளசி, ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள். எத்தனை பிறவிகள் எடுத்தாலும், ஆன்மா மாறுவதில்லை. உடல்தான் வெவ்வேறு வடிவங்கள் கொள்கின்றது. வெவ்வேறு பெயர்களுடன் உலாவுகிறது. இப்போது நீ குடிகொண்டுள்ள உடலுக்கான பெயர்தான் துளசி. அந்த உடலை நீத்துவிட்டு என்னுடன் ஆனந்த ரூபத்தில் கலந்துவிடப் போகிறாய்.

பாவம் பண்ணிவிட்டதென்று நீ ஒதுக்கும் இந்த உடலும் பாரத தேசத்தில் கண்டகி என்னும் புண்ணியநதியாக உருவெடுத்து, மனிதர்களின் பாவங்களைக்களையும் புனிதத் தன்மை பெறும். என்னுடன் இருந்தபோது சிலிர்த்திருந்த உன்னுடைய ரோமம், துளசி என்ற புனிதத் தாவரமாக உருவெடுக்கும். தாவரங்களிலேயே துளசிக்குத் தனிச் சிறப்புக்கள் இருக்கும்" என்று ஆறுதலளித்தார் திருமால்.

அன்றிலிருந்து துளசி, மருத்துவ குணங்கள் கொண்ட புண்ணியச் செடியாக விளங்குகிறது. பெருமாளுக்கான பூஜைகளில் முக்கியப் பங்குகொண்டு விளங்குகிறது. இல்லங்களில் துளசிச் செடியை வளர்த்து பக்தியுடன் வணங்குபவர்களுக்கு, திருமால் எல்லா நலன்களையும் குறைவின்றி அருள்கிறார்.



# அஸ்திர தேவரும் சண்டேசுவரரும்

பல ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. விழாக்காலங்களில் உச்சி மீது ஒரு மூர்த்தத்தைக் கொண்டுள்ள கம்பம் ஒன்று எடுத்துச் செல்லப்படும். கொடிமரப் பூசையின்போது காட்சி தரும் கம்பத்திலமைந்த இம்மூர்த்தம் பின் சுற்றுப்பலி (ஒன்பது சந்திகளில் இடப்படும் பலி) இடும்போது வீதியில் பலிபீட மேசையுடன் எடுத்துச் செல்லப்படும். தீர்த்தோற்சவத்தின் போது தீர்த்தம் கொண்டருளுபவரும் இந்தக் கம்பத்திலமைந்த மூர்த்தமே.

கம்பத்திலமைந்த மூர்த்தத்தைப் பாமர மக்கள் "சண்டேசுவரர்" எனக் குறிப்பிடுகின்றனர். இது பிழை. இம்மூர்த்தம் சண்டேசுவரர் அல்ல. இறைவனின் பிரதிநதியாக இருந்து நவசந்தி பலி, தீர்த்தம் கொண்டருளுதல் முதலியவற்றை நிகழ்த்துபவரே இந்த மூர்த்தம். சிவாலயமெனில் இம்மூர்த்தம் சூலத்தினடியில் அமைந்த ஆண் - பெண் உருவுமாயமைந்திருக்கும். விநாயகராலயமெனில் இந்த மூர்த்தம் விநாயகப் பெருமானின் திருக்கரமொன்றில் விளங்கும் அங்குசம் (யானையை அடக்க யானைப் பாகன் உபயோகிக்கும் ஆயுதம்) என்ற ஆயுதமாக அமைந்திருக்கும். முருகன் ஆலயமெனின் வேலாக அமையும். இந்த மூர்த்தத்தின் பொதுப்பெயர் அஸ்திரதேவர். அஸ்திரம் என்ற சொல்லுக்குக் கம்பம் என்று பொருள். கம்பத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மூரத்தமாதலால் அஸ்திரதேவர் எனப்படுகிறார். அஸ்திரம் என்றால் நிலையாகவிராது அடிக்கடி இடம்பெயர்வது எனவும் பொருள். இம்மூர்த்தம் இறைவனின் பிரதிநிதியாகச் சுற்றுப்பலி, தீரத்தம் கொண்டருளல் போன்றவற்றிற்கு நிலைபெயர்ந்து செயல்வதாலும் அஸ்திரதேவர் என அழைக்கப்படுகிறார் எனக் கொள்ளலாம். இம் மூர்த்தியை ஒருவர் தனியே கையிலேந்தித் தோளில் சுமக்கும் எளிமையை உடையவராயமைந்திருப்பதால் அஸ்தராஜா எனவும் சிலவிடங்களில் வழங்கப்படுகிறார்.

சைவாலயங்களில் வடக்கு வீதியில் கோமுகிக்கு (மூலமூர்த்தியின் அபிடேக தீர்த்தம் வெளிவரும் இடம்) அருகில் சண்டேசுவரருக்குத் தனிக்கோயில் அமைந்திருப்பதைக் காணலாம். ஆலய வழிபாட்டின் இறுதியில் கட்டாயமாக வணங்கப்பட வேண்டியவர் இவர். பஞ்சமூர்த்திகள் எழுந்தருளும் விழாக்களில் விநாயகர், சிவன், அம்பாள், முருகனுடன் ஐந்தாவதாக எழுந்தருளுபவர் சண்டேசுவரர். பஞ்சமூர்த்திகளில் ஒருவராக விளங்கும் பேறும் மூலஸ்தானத்துக்கருகே தனிக்கோவில் சிறப்பும் பெற்ற இந்த சண்டேசுவரர் யார்?

சண்டேசர் என்பது "சிவகணங்களுள் ஒரு பதவி. அப்பதவியில் உள்ளோர், சிவாலயத்தில் வந்து வழிபடுவோருக்கு வழிபாட்டின் பலனைக் கொடுக்கும் அதிகாரமுடையவர்கள். சண்டி என்ற சொல்லுக்குப் பொறுப்பாளர், காவலர், பராமரிப்பவர், பரிபாலகர் எனப்பொருள். ஆங்கிலத்தில் CUSTODIAN. ஆகவே சண்டேசர்தான் கோவிலின் அறங்காவலர் - பரிபாலகர்.

பெரிய புராணத்தில் சண்டேசுவர நாயனார் என்ற திருத்தொண்டரது வரலாற்றைச் சேக்கிழார் 59 பாடல்களில் தந்துள்ளார். சோழ நாட்டிலுள்ள மண்ணியாற்றங்கரையில் அமைந்திருப்பது திருச்செய்ஞலூர் எனும் பதி. இங்கு அந்தண குலத்தில் பிறந்தபோதிலும் பசுக்களின் மேற்கொண்ட அன்பால் பசுக்காக்கும் பணியில் ஈடுப்பட்டான் விசாரசருமன் என்னும் சிறுவன். மண்ணியாற்றங்கரை மணல் மேட்டில் மணலால் இலிங்கம் செய்து சிவவழிபாடு செய்த விசாரசருமர் அவரது அன்பு காரணமாகப் பசுக்கள் மேலதிகமாகச் சொரிந்த பாலையெல்லாம் திருமஞ்சத்திற்கு உபயோகித்தார். பாலெல்லாம் வீணே மணலில்

ஊற்றப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டினாலே கோபமுற்ற விசாரசருமரின் தந்தை திருமஞ்சனப் பாற்குடத்தைச் காலால் இடறினார். சந்நிதியில் நிட்டை கூடியிருந்த சிவசருமர் பூசைத் திரவியத்தை அவமதிப்பதைப் பெறாது பக்கத்தேயிருந்த கோலை எடுத்து எறிந்தார். அது மழுவாகித் தந்தையின் கால்களைத் துண்டித்தது. அச்சமயம் சிவபெருமான் காட்சி கொடுத்து "நம்பொருட்டாய்ப் பெற்ற தந்தையை விழ எறிந்தாய். இன்று முதல் நாமே உனக்குத் தந்தை" எனக் கூறி "நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதந் தந்தோம்" என்று திருவாய் மலர்ந்தருளித் தனது திருமுடியில் இருந்த கொன்றை மாலையை எடுத்து விசாரசருமரின் சிரசில் சூட்டியருளினார். அன்று முதல் அவர் வேறு சிந்தனையின்றி சிவ சந்நிதியில் ஆழ்ந்த தியானத்தில் சிவனையே சிந்தித்த வண்ணம் இருக்கிறார்.

விசாரசருமர் என்ற தொண்டர் சண்டீசர் பதவிக்கு உயர்த்தப்பட்டவர். ஏற்கனவே சிவகணங்களுள் சண்டீசர் பதவியில் இருந்தவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக அவர்களை ஆதிசண்டேஸ்வரர்கள் என அழைப்பதுண்டு.

சிவனடியார்களுள் தலைசிறந்தவர் சண்டேசுவர நாயனார். அதனாற்றான் அவருக்கு சண்டீசர் பதவி கிடைத்தது. சிவனுக்குச் சாத்தி எடுக்கப்பட்ட பூக்கள், பத்திரங்கள், மாலைகள், உடைகள் ஆகியனவே (நிர்மாலியங்கள்) சண்டீசருக்குச் சாத்தப்படும். சிவனுக்கு நிவேதிக்கப்பட்ட உணவே (நிர்மாலியமே) சண்டீசருக்கு நிவேதிக்கப்படும். இது அவருக்குக் கிடைத்த பரிசு.

"தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கு இவ்வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே".

என்கிறார் சேந்தனார்.

சண்டேசுவர நாயனார் ஆதிசண்டேசுவரர்கள் போலன்றி எந்நேரமும் சிவத்தியானத்தில் இருப்பவர். ஆதலால் சூழ்நிலை இவருக்கு நினைவிராது. நாம் வழிபாட்டின் முடிவில் வழிபாட்டின் பயனைப் பெற அவாவுகின்றோம். ஆகவே இவரைத் தியானத்திலிருந்து சிறிது கலைத்து நம் வழிபாட்டை உணர்த்திப் பலன் கேட்கிறோம்.

"நீலகண்ட பதாம் போஜ
பரிஸ்புரித மாநஸ
ஸம்போ: ஸேவா பலம் தேஹி
சண்டேச்வர நமோஸ்துதே!"

என்பது சண்டேசுவரர் ஸ்தோத்திரம். "நீலகண்டத்தையுடைய பரமேசுவரனுடைய பாதாரவிந்தங்களில் பதிந்த மனத்தையுடைய சண்டேசுவரப் பெருமானே! நான் பரமேசுவரனைத்

தரிசித்ததற்குரிய பலனைத் தாருங்கள். உங்களுக்கு வணக்கம்'' என்பது இச்சுலோகத்தின் பொருள்.

கையை மூன்று தடவை மெதுவாகத் தட்டி சிவபூஜா பலனை மேற்கண்டவாறு வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும். பெரிதாக ஒலியெழுப்பக் கூடாது. கைதட்டித் தியானத்தைக் கலைக்காது அமைதியாகப் பிரார்த்திக்க வேண்டுமென்று கூறுவாருமுளர்.

சண்டேசுரரின் தியானத்தைச் சிறிது கலைப்பதற்காகக் கைதட்டுவதைப் புரிந்து கொள்ளாத பலர் அவரைச் செவிட்டுச்சாமி என்று தவறாகக் கூறுவர். அது பிழை.

சண்டேசுவரர் சிவனது நிர்மாலியத்தை மட்டுமே ஏற்றுக்கொள்பவர். அதை விளங்கிக் கொள்ள முடியாத சிலர் தமது ஆடையிலிருந்து நூலைப் பிரித்துப் போடுகின்றனர். இதுவும் பெரும் பிழை. சமயநெறிக்கு முரண்பட்டது.

கோவிலில் சண்டேசுவரருக்கும் மூலமூர்த்திக்கும் குறுக்கே போகக் கூடாது என்பது விதி. சிவத்தியானத்தில் மூழ்கியிருப்பவரையும் சிவனையும் நாம் ஊடறுத்துக் குறுக்கே செல்லலாகாது.

"கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படி சேர்ந்த பால் கொண்டங் காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ண மறிவார் சொலக் கேட்டு மன்றே''

- சம்பந்தர்

"தழைத்ததோர் ஆத்தி யின் கீழ்
தாபரம் மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைந்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கை வீரட்டனாரே''

- அப்பர்

"மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த
வம்மையானடிச் சண்டிப் பெருமானனுக் கடியேன்''

- சுந்தரர்

"தந்தையிரு தாள் துணித்துத்
தம்பிரான் தாள் சேர்ந்த
எந்தையிரு தாளிணைக்கே
இன்புறுவ தெந்நாளோ''

- தாயுமானவர்

# இந்துசமய ஆசாரங்களும் இணுவையூரும்

இந்துசமயம் பண்பாடு, கலை, தத்துவம், வாழ்க்கை ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளது. மதம் என்றால் சாத்திரங்களால் சம்மதிக்கப்படுவது என்பது பொருள். ஆசாரம் என்பது சாத்திர முறைப்படி அல்லது குலமுறைப்படி நடத்தல் எனப் பொருள்படும். இந்துமதத்தில் எல்லா உட்கிளைகளும் அவற்றின் கொள்கை எதுவாயிருப்பினும் வீடுபேறடைவதற்கு அறநெறி வாழ்வின் தேவையை வலியுறுத்துகின்றன. எவனுடைய வாழ்க்கை ஒழுக்கமற்றதோ எவன் தன்னுடன் வாழும் மனிதர்ககளோடு சரியான உறவு வைத்துக் கொள்ளாமல் இருக்கின்றானோ அவனுக்கு இறைவன் காட்சியளிக்கமாட்டான் என்கிறது இந்துமதம்.

"ஒட்டகம் ஒன்று ஊசியின் காதில்
நுழைந்தாலும் நுழைந்துவிடலாம் - ஆனால்
ஒழுக்கநெறி யிழந்த ஒருவன் இறைவனின் - எல்லை
வரம்புக்குள் வருவதென்பது இயலாத காரியமாகும்"

தன்னைத் தன் இயற்றன்மையோடும் தன்னுடன் வாழும் மக்களோடும், பரம்பொருளோடும் இணைத்துக் காட்டுகின்ற ஆளுமை ஒன்றிப்பினை அடைதலையே இந்துவானவன் தனது சமய லட்சியமாகக் கொள்கிறான். அனுபவ வாழ்க்கையானது ஆன்மாவை முழு விடுதலை அடையக்கூடிய தன்மையினை உணராதபடி செய்துவிடுகின்றது. இந்துசமயமானது எல்லாத் தளைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் ஆன்மாக்கள் விடுதலைபெற இயலும் என்று உறுதியளிக்கின்றது. இந்த விடுதலை / முத்தி மார்க்கம் என்பது உலகச் சிந்தனையே இன்றி வேறு உலகம் ஒன்றைப்பற்றி எண்ணிக் கொண்டிருப்பது என்பது அன்று. இந்துமதச் சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் ஊன்றிப் பார்ப்போமேயானால் இந்துசமயமானது இந்த உலக இன்பங்களை எட்டி உதைந்துத் தள்ளவில்லை என்பது புலனாகும். இந்துமதத்தைச் சார்ந்தவனும் மற்றைய உயிரினங்களைப் போன்றவனே. முத்தியைத் தவிர வேறு மூன்று நோக்கங்களும் இந்துமதத்தைச் சார்ந்தவனுக்குண்டு. அவை அறவழியிலான பொருளாதார மேம்பாடு, புலனின்பம், புனிதமான நெறிகள் என்பவைகளாகும். ஆனால் அவை நீண்டகால வாழ்விற்கு வழிபடுதல், உலக சுகத்திற்குப் பாடுபடுதல், நன்மக்களைப் பெற விரும்புதல் ஆகிய எல்லாவற்றையும் பழைய நூல்களில் அதிகமாகப் பார்க்கலாம். இவைகளை ஒருவன் ஆன்ம வளர்ச்சி குன்றிவிடாதபடி அனுபவித்து, புனிதமான அடிப்படையில் வாழ்வானேயானால் முத்தி நோக்கிய ஆன்மாவின் பயணம் தடைப்படாது. இதுவே இந்துசமய பழக்கவழக்கங்களின் பின்நிற்கும் பொருத்தமான விளக்கமாகும்.

வேதகாலச் சடங்குகளில் பல்வேறு காரணங்களுக்காகப் பொருட்களை இறைவனுக்கு அர்ப்பணம் கொடுப்பது வழக்கமாயிருந்தது.

"நான் உனக்கு பால் தருவேன்; தயிர் தருவேன்;
நெய் தருவேன்; நீ எனக்கு மழையைத் தா;
பயிர்களை விளையச் செய்; மந்தைகளை
பயன்தரவை; ஆண்சந்தியைக் கொடு"

எனப் பலவாறு வேண்டினர். இம்முறையானது முதலில் சாதாரணமாகவே இருந்தது.

ஆனால் காலப்போக்கில் அது நுணுக்கமான ஒரு சடங்காக மாறிவிட்டதைக் காணமுடிகின்றது. வேதங்களிலுள்ள கிரியைகள், வேள்விகள், யாகங்கள், மந்திரங்கள், தத்துவங்கள் என்பன விரிவடைந்து அவையே ஆகமங்களின் தத்துவங்களாகவும் அமைகின்றன. இவை பற்றிச் சொல்லும் வேதநூல்கள் கட்டாயக் கட்டளைகளாக அமையாது விருப்பக் கட்டளைகளாகவே அமைந்திருக்கின்றன. கட்டாயத்தின் நிமித்தம் செய்ய வேண்டிய சடங்குகளும் அக்காலத்தில் உள்ளன. உதாரணமாக "சந்தியாவந்தனம்" என்பது கட்டாயமாக எல்லாரும் செய்ய வேண்டுவதாகும். "இது உன் கடமை; எனவே இதை நீ செய்யத்தான் வேண்டும்" என்கிற முறையில் சடங்குகள் அமைந்திருக்கின்றன. இவைதவிர பிறப்பு, இறப்புக் காலங்களிலும் சாந்திக்காக ஒருவன் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகச் செய்ய வேண்டுபவைகள் என வேறு சடங்குகளும் பலவுள. வேதக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலே மனிதன் கடமை என்று கருதினார்கள். அதிலிருந்துதான் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி உண்டாகின்றது. அதனால் தான் மனிதன் அவனது இறப்பிற்குப் பின்னர் சொர்க்க சுகத்தை அனுபவிப்பான். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தை அடைவதற்கு சடங்குகளைச் செய்வது அவசியம் என நம்பினார்கள்.

பிற்காலத்தில் வேதகாலச் சடங்குகளுக்குப் பதிலாக வழக்கிலிருந்த மதாசாரங்களின் நூல்களது அடிப்படையில் எழுந்த ஆகமங்கள் என்னும் சடங்குகள் வழக்கிற்கு வந்தன. "ஸத்யம் வத", "தர்மம் சர" என்பன சுட்டும் உண்மை பேசு, அறத்தைப் பேணி நட என்பன போன்ற உபநிடத மகாவாக்கியங்கள் வேதாகம சாஸ்திரங்களில் பிரசித்தமானது. மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள ஆன்மீக உறவை விளக்குவது சமயம் ஆகையால் குடும்பத்தில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் மதச்சடங்குகள் இல்லாமல் அவை நடைபெறுவதில்லை என்பதை இந்துமத நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

இந்தவகையில் இணுவில் பதியையும் இவ்வாரசாரங்களுடன் ஒன்றிணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி ஆகும். இவ்வாக்கை உறுதிப்படுத்துவது போல இணுவில் கிராமம் முழுவதும் இருபத்தியொரு கோவில்கள் அருளாட்சி செய்து வருகின்றன. எடுத்துக்காட்டாக இணுவில் செகராச சேகரப் பிள்ளையார் கோயில், பரராஜசேகரப் பிள்ளையார் கோயில், பெரிய கோயில் எனப்படும் கந்தசுவாமி கோயில், சிவகாமியம்மன் கோயில், காரைக்கால் சிவன் கோயில், பல்லப்பை வைரவர் கோயில் என இவ்வாறு எல்லைப்படுத்தப்பட்ட நம் வழிபாட்டுத் தலங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். தர்மத்தைப் பேணி அறநெறி பிசகாது மனித விழுமியங்களை மதித்து வாழ்வோர் கிராமங்களிலேதான் வாழ்கிறார்கள். அந்தணர்கள், இன்னிசைக்கலைஞர்கள், அறிஞர்கள், அருளாளர்கள், சித்த புருஷர்கள், வைத்தியர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், சைவசிந்தாந்த அறிஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் நிறைந்த நிறைவான ஊர் இணுவையம் பதியாகும்.

வேதகாலத்திலே சாமவேதத்தில் இறைவனை இசையப்பிரியனாக வழிபட்டமையை நூல்கள் எடுத்தியம்புகின்றன. இந்த இசை கோயில்களில்தான் வளர்ச்சியடைந்து வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இசையின் மூலம் இறைவனை அடையலாம் என்பதை சைவ நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடியுள்ள திருப்பாடலகள்வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. ஒழுக்க நெறிமுறையமைந்த வாழ்க்கைக்கு இசைமரபு இன்றியமையாதது என்பதை இணுவைப்பதியில் வாழ்ந்த இசைக்கலைஞர்கள் வாழ்க்கை பிரதிபலிக்கின்றது. இந்த இசைக் குருகுல மரபில் மிகப்பெரும் வித்துவான்களாக சிவஸ்ரீ சி. வைத்தீஸ்வரக்குருக்கள், ஏரம்பு சுப்பையா, கவிமாமணி பிரம்மஸ்ரீ இ. வீரமணி ஐயர் ஆகியோர் இசை, நடனத்துறையிலும்

தவில், நாதஸ்வர மேதைகளாக விசுவலிங்கம், உருத்திராபதி கோதண்டபாணி, மாசிலாமணி, தெட்சணாமூர்த்தி, சுந்தரமூர்த்தி குடும்பம், புண்ணியமூர்த்தி, கோவிந்தசாமி குடும்பம், சின்னராசா குடும்பம், உ. இராதாகிருஷ்ணன் (வயலின் வித்துவான்), கந்தசாமி பிள்ளைகள், உதயசங்கர், தமிழக அரசின் விருதுபெற்ற கலைஞர் கணேசபிள்ளை, சண்முகம்பிள்ளை, இராமையாபிள்ளை, பெரியபழனி, சின்னப்பழனி, பழனிமலை சங்கரசிவம் (மிருதங்க வித்துவான்) என இவ்வாறு இசைமரபுப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இவர்கள் குருகுல மரபில் பேணப்படும் ஆசாரங்களை மக்களுக்கும் தெளிவுபடுத்தி மேலும் பல கலைஞர்களை உருவாக்கி இன்று தேசமெல்லாம் இசைமரபை விதைத்து செழிப்படையச் செய்துள்ளார்கள்.

இதேபோன்று ஆரம்பகாலத்தில் குருகுலக் கல்வியும் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக நம் சடங்குகளில் கையாளப்பட்டிருக்கின்றது. உபநிடத காலத்தில் குருசீட பரம்பரை இருந்து வந்துள்ளது. பிரமச்சரியத்தில் கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றுத் தெளிந்த ஒரு மாணவன் குருவின் ஆசியுடன் கிருகஸ்தம் என்னும் வாழ்க்கை நிலைக்குச் சென்று பின் குடும்பப் பொறுப்புக்களை அதன் பேறாக விளைந்த நன்மக்களிடம் ஒப்படைத்துவிட்டு வானப்பிரஸ்த நிலைக்குச் சென்று சந்நியாசியாகி மோட்சத்திற்கான வழியைத் தேடி அடைந்ததாகத் தத்துவங்கள் கூறுகின்றன. இத்தகைய படிநிலை வளர்ச்சி நிலையானது இணுவைக் கிராமத்திலும் இருந்து வந்துள்ளமையைக் கோடிட்டுக் காட்டலாம். அந்நிய போர்த்துக்கேயர் ஆக்கிரமித்து ஆண்ட காலங்களில் பிறசமயப் பிடிக்குள் அகப்படாது இன்றுவரை சிவமணம் கமழும் இணுவிலில் தேசபிதா ஆறுமுகநாவலரின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்துத் தேசமெங்கும் தமிழ், சைவம் இரண்டையும் இலவசமாகக் கற்பிக்கும் திண்ணைப் பள்ளிகள் நடைபெற்று வந்துள்ளதாகத் தெரியவருகிறது. அதை நடத்தியவர்களில் வடிவேல் சுவாமிகள், சேதுச்சட்டம்பியார், சுப்பிரமணியச் சட்டம்பியார் போன்றோர் சிறப்பிடம் பெறுகின்றனர். புலவர் நடராசையர் அவர்களும் இப்பணியில் குறிப்பிடத்தக்கவராவர். இவர் சைவசிந்தாந்தம், சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கியதோடு பல பண்டிதர்களையும், புலவர்களையும் தமது கல்வி மேம்பாட்டால் உருவாக்கிய பெருமைக்குரியவராவார். புலவர் அம்பிகைபாகர் அவர்களின் பணிக்கு அம்பிகைபாகர் பாடசாலை (இன்று இணுவில் இந்துக்கல்லூரி) எடுத்துக் காட்டாகும். அதேபோன்று அப்பாக்குட்டி என்பவரால் நிறுவப்பட்ட அப்பாக்குட்டி பாடசாலை தற்போது இணுவில் மத்திய கல்லூரியும் குருகுலக் கல்வியின் படிமுறை வளர்ச்சியினை காட்டுவதாக இன்று மிளிர்கின்றது.

இத்தகைய பணியினால் கீழ்ப்படிவுள்ள சிறந்த ஆசார சீலர்களை உருவாக்கி பெருமையுடன் விளங்கி வருவது வட்டுவினிப் பகுதியில் அமைந்துள்ள காயத்திரி பீடம் என்று சொல்லப்படும் இணுவை கண்ணகா பரமேஸ்வரி ஆலயமும் தர்மசாஸ்தா குருகுலமும் ஆகும். பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள், இங்கு வந்து குடியமர்ந்த காலத்திலிருந்து நித்திய, நைமித்தியக் கிரியைகள் போதிக்கப்பட்டு அதன்வழி உலகளாவிய ரீதியில் பல அந்தண சிவாச்சாரயார்கள் உருவாக்கப்பட்டுத் தேசமெல்லாம் தமது கலாசாரப் பணியை ஆற்றி வருகின்றனர். அதுமட்டுமன்றி உலக க்ஷேமத்திற்காக பூஜை வழிபாடுகள் தாயக வழிபாட்டு மரபைப் பின்பற்றி நடைபெற்று வருகின்றன. சிறப்பாக நவராத்திரி காலத்தில் கொலுப்பூஜை, ஸ்ரீசக்ர பூஜை அதனைத் தொடர்ந்து வரும் இறுதிநாளில் குரு ஆசீர்வாதம், குருதானம், குமாரி பூஜை என்பன இன்றும் சிறப்புற நடைபெற்று வருகின்றமையை நாம் கண்கொண்டு பார்க்கலாம்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எல்லோருக்கும் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகும் அந்தணர்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்றமை பசுமரத்தாணி போல் தெரிகின்றது. அந்தவகையில் சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள், வைத்தியத் துறையிலும் விரிவுரையாளராகவும் விளங்கிய பெருமைக்குரியவரான சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்கள், சிவஸ்ரீ. இராமநாதக்குருக்கள், சிவஸ்ரீ சி. வைத்தீஸ்வரக்குருக்கள் (சங்கீதம், பண்ணிசைத் துறைகளில் திறமைமிக்கவர்), சைவசிந்தாந்த நூல்களில் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகியவற்றிற்கு உரையெழுதி வெளியிட்ட பெருமைக்குரிய புலவர் நடராசா ஐயர், சிவஸ்ரீ சின்னையாக்குருக்கள், சிவஸ்ரீ. குமாரராஜக் குருக்கள், சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள், இணுவில் கந்தசுவாமி கோயில் குருகுல பரம்பரைப் பூசகர் வழிவந்த நடராசக் குருக்களின் மகன் சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள், இவரது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர் என இவ்வாறு வளர்ந்து கொண்டே வருகிறது. விருந்தோம்பல் மரபில் கூறியது போன்றே செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் மாண்புடை மக்களாக இணுவையம் பதியின் குருகுல மரபினைத் துலங்க வைத்திருக்கும் பெருமைக்குரியவர்களாக இவர்கள் திகழ்கின்றனர்.

வேதகாலச் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு யாகங்கள், வேள்விகள், கிரியை முறைகள், தீக்குளித்தல் போன்றவை நடைபெற்றுக் கொண்டே வருவதை இன்றும் நாம் பார்க்கலாம். குழந்தையின் பிறப்பு, அதற்குப் பெயரிடுதல், முதல் முதலாக உணவு கொடுத்தல், ஆரம்பக் கல்விக்கு அனுப்புதல், திருமணம், இறப்பு எனப் பல்வேறு நிகழ்வுகளுக்கும் மதச் சடங்குகள் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றன. மனிதனின் ஆன்மீக முன்னேற்றம் அவன் வாழ்க்கையில் அனுசரிக்கும் மதக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டது என்பது இதிலிருந்து நன்கு புலனாகின்றது. குழந்தை பிறந்த சில நாட்களுக்கு ஆசௌசம் காத்து அந்தணர்களை வீட்டுக்கு அழைத்து அதை நீக்குதல், திருமணத்தின் போது பிதிர் தேவர்களது ஆசீர்வாதம் பெறுதல், மணமக்களுக்கு உபசாரஞ் செய்தல், கன்னிகாதானம், கூறை கொடுத்தல், திருமாங்கல்ய நாண் அணிதல், அக்கனி பூசை, பால்பழம் கொடுத்தல், நவக்கிரகதானம், பசு தானம், பாணிக்கிரகணம், அம்மி மிதித்து அருந்ததி காட்டல், பிராயச்சித்தம், அக்கினியை வலம் வருதல், பெரியோர் வாழ்த்துதல் ஆகிய கிரியைகள் நடைபெறும். இம்முறை இன்றும் நம்மவர்கள் மத்தியில் கடைப்பிடிககப்பட்டு வருகின்றது. இதே போன்று இறந்தபின் செய்ய வேண்டிய கிரியைகளும் உள்ளன. அமாவாசை, பௌர்ணமி நாட்கள் இந்துசமய ஆசாரப்படி பிதிர்களுக்குரியதாகும். ஒரு குடிப்பிறப்பாளன் எவ்வகையான ஆன்மாக்களை உபசரிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்று
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கமைய விருந்தோம்பல் மாண்பு கூட இணுவைக் கிராம மக்களிடையே பேணப்பட்டு வருகின்றது. ஆடியமாவாசை தினத்தில் இணுவில் கந்தசுவாமி கோயில் நடுவிளாத்தி வைரவர் கோவில் கிணற்றடியில் பிதிர்க்கடன் செய்யும் மரபினை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். அத்துடன் இறந்தவர்களை நினைத்து திவசம் கொடுத்தல் அவ்வாறு இயலாதவர்கள் வருடத்தில் ஒருமுறை புரட்டாதி மாதத்தில் வரும் மாகாளய பட்சத் திதியில் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து உறவினர்களுடன் கூடி விருந்தோம்பல் செய்யும் மரபும் பேணப்பட்டு வருகின்றது. அத்துடன் ஆலயங்களில் அன்னதாம் செய்துலும் வளர்ந்து கொண்டே வருகின்றது.

ஆரம்பகாலத்தில் இயற்கையைக் கண்டு பயந்து வணங்கிய மனிதன் காலப்போக்கில் அதைவிட உயர்ந்த சக்தி ஒன்று இருப்பதை உணர்ந்து அந்த சக்தியின் மூலம் தான் விரும்பியதை அடையலாம் என நம்பினான். நாம் உலகத்தைக் காண்கின்றோமே ஒழிய அதை இயக்கும் சக்தியைக் காண்பதில்லை. இதேபோலத் தான் இயற்கையின் சக்திகள் ஒன்று சேர்ந்து பலதெய்வ வழிபாட்டிற்கு வழி வகுத்தது. இந்த மரபும் இணுவிலில் வைரவர், இளந்தாரி, அண்ணமார், பத்திரகாளி, நரசிங்கர், ஆஞ்சநேயர், சிவன், பிள்ளையார், முருகன், அம்மன் வழிபாடு என்ற ரீதியில் அமையப் பெற்றிருக்கின்றது. மடைவைத்தற் சடங்கு, சித்திரைக் கஞ்சி, தினை, பட்டிப் பொங்கல், மேளக் கட்டு, பங்குனி அவியல், பாற்காவடி, பழக்காவடி எடுத்தல் போன்றனவும் சிறப்பாக நடைபெறுகின்றது. ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தமான உருவங்களை சிலை வடிவில் பூஜைப் பலகை மீது வைத்திருப்பது வழக்கம். வழிபடுவோர் முதலில் அச்சிலையின் மீது இறைவனை வந்தருளும் படி வேண்டிப் பின் மரியாதைக்குரிய மிகப் பெரிய விருந்தினராகக் கருதுகின்றனர். அவற்றை முழுக்காட்டி நிவேதனப் பொருட்களை அர்ப்பணஞ் செய்தனர். ஒவ்வொன்றைச் செய்யும் போதும் அதைச் செய்ய வேண்டிய முறைப்படி வணக்கத்தோடு செய்கின்றனர். இவ்வாறு ஆதியில் கோயிலானது வழிபாட்டுக்குரிய சிறிய சிலையைக் கொண்ட ஒரு குடிலாக அமைந்து வழிபாடும் அவ்வாறே இருந்தது. ஆனால் காலப்போக்கில் இறைவணக்கமானது வீடுகளில் நடைபெறுவதைப் பின்பற்றி பெரியளவிலும் விரிவாகவும் நடைபெற்று வருகின்றது. எந்தத் தனிமனித இல்லமும் இந்துசமயப் பற்றினால் எழுந்துள்ள கோவில்களுக்கு ஈடாகாது. கோயிலுக்கும் மனித வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பினை நம்முன்னோர் கண்டு கோயில் என்பது உடல் என்னும் கோயிலின் புறச்சின்னம் என விளக்கினர். புறச்சின்னத்தை உடலிலுள்ள தத்துவங்கள் ஒத்திருக்கும்படி கட்ட வேண்டும் என்ற ஆகமக் கொள்கையைப் பின்பற்றியே கோயில்கள் கட்டப்பட்டன. முடிவற்ற பரம்பொருளை ஐக்கியமடைய விளையும் ஆன்மாவின் துடிப்பை விளக்கும் முறையாகவே கோயில்களின் நுழைவாயிலின் மேலே வானுயர ஓங்கி நிற்கும் கோபுரங்கள் அமைந்திருக்கின்றன. கோயிலின் மூலஸ்தானம் இறைவன் அமரந்திருக்கும் இதய பீடமாகத் திகழ்கின்றது. கடவுள் வழிபாடுகளைத் தவிர கோவிலுக்கு எனச் சிறப்பான விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பண்டைய மக்கள் செய்துவந்த தலயாத்திரை, மலையேறிச் சென்று கடவுளை வணங்குதல், புனித நதிகளில் நீராடி தமது அக, புற அழுக்குகளை நீக்கி அருளும்படி வேண்டுதல், விரதம், தியானம், தீட்சை, அங்கப் பிரதட்சை, தீக்குளித்தல் என்பவற்றைப் பின்பற்றியே வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வழியில் இட்டுச் சென்ற சமய நாயன்மார்கள் காட்டிய வழிகாட்டுதலை சிரமேற்கொண்டு வீதிகள் தோறும் பண்ணிசைத்தல், வீதிவலம் வரும் போது தேவாரம் ஓதல், இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இறைவனை மகிழ்வித்தல் போன்ற பல்வெறு கைங்கரியங்களையும் இணுவிலூர் கடைப்பிடித்து வருகின்றது. இளந்தொண்டர்சபை, சைவத் திருநெறிக் கழகம், திருநெறிய தமிழ்மறைக் கழகம், இந்துமகாசபை, அறிவாலயம் போன்ற நிறுவனங்கள் வாயிலாக இவை இன்றும் அழியாது பேணப்பட்டு வருகின்றது. கூத்துக்கள், நாடகங்கள் என்பனவும் ஆரம்பகாலத்தில் நடைபெற்றது போன்றே இவ்வூரிலும் பல அறிஞர்களாலும் மக்களாலும் ஆதரிக்கப்பட்டு வருவதைக் காணலாம். அதன் வாயிலாக கௌரவிக்கப்பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளது.

ஆசார சீலர்களாக "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற வாக்கை உறுதிப்படுத்தியவர்களாக புலவர் நடராசையர், புலவர் அம்பிகைபாகர், வைத்திலிங்க உபாத்தியாயர், ஆறுமுகதாசர உபாத்தியாயர், தா. வைத்தியலிங்க சட்டம்பியார், சுப்பையா உபாததியார், சி. கனகசுந்தர ஆசிரியர், சேதுலிங்க சட்டம்பியார், மாணிக்க சட்டம்பியார், சின்னத்தம்பிச் சட்டம்பியார், சதாசிவச் சட்டம்பியார், பெரியதம்பி உபாத்தியாயர், வை. கதிர்காமநாதன், த. கந்தையா உபாத்தியாயர், பண்டிதர் சபா. ஆனந்தர், பண்டிதர் நா.

இராசையா, சோ. பரமசாமி, மாணிக்கம் ஆனந்தர், வை. நடராசா ஆசிரியர், புலவர் வை.க. சிற்றமபலம், இ. திருநாவுக்கரசு, கு. சண்முகநாதன் போன்றோர் திகழ்கின்றனர். இவர்கள் கோவில்களில் சைவப் பிரசங்கள் செய்தும், புராண படன மரபிலும் வித்துவான்களாகத் திகழ்ந்தனர். இவர்களுடன் வேலாயுதபிள்ளை ஆசிரியர், பண்டிதர் வே. சண்முகலிங்கம், திரு, திருமதி. இரத்தினம் ஞானகலா (மும்மொழிகளிலும் ஆய்வுகளை வளமுறச் செய்தவர்கள்), பேராசிரியர் சபா. ஜெயராசா, தமிழ்வேள் இ. கந்தசாமி, கா.செ. நடராசா, இரா. சுந்தரலிங்கம், செ. சோதிப்பெருமாள், துரை எங்கரசு, ச. வே. பஞ்சாட்சரம், வை. இராசலிங்கம், விரிவுயைாளர் க. தேவராசா என்றவாறு வளர்ந்து கொண்டே போகின்றது.

கல்வி, சமயம், பண்பாடு, கலாசாரம் வளர்த்த பெண்கள் வரிசையில் திருமதி ஆயிலியம் வேலுப்பிள்ளை, திருமதி இரத்தினம் செல்லப்பா, திருமதி சிவபாக்கியம் பதஞ்சலி, திருமதி அன்னலட்சுமி சின்னராசா, திருமதி இராசம்மா (பஞ்சவர்ணம்) ஆனந்தர், திருமதி புவனேஸ்வரி, திருமதி தங்கேஸ்வரி கந்தையா, திருமதி தையல்நாயகி, திருமதி பராசக்தி சந்திரசேகரம், திருமதி நாகரத்தினம் தேவராசா, திருமதி சரஸ்வதி ஆறுமுகம், திருமதி புவிநாயகம் செல்லையா, திருமதி வைகுந்தம் (பூங்கொடி) கணேசபிள்ளை (பண்டிதை), திருமதி தனலக்சுமி மகாலிங்கம் (பண்டிதை), திருமதி விசாலாட்சி துரைசிங்கம் என்றவாறு பட்டியலிடப்பட்ட பெரியார்கள் வரிசை நீண்டுகொண்டே செல்கின்றது.

இவர்களது சேவை இணுவில் கிராமத்தில் மட்டுமன்றி வேறு பல பாடசாலைகளின் வளர்ச்சி நிலைக்கும் வழிகோலியதாக அறிய முடிகின்றது. அந்தளவிற்கு இவர்கள் சேவை எல்லா இடங்களிலும் நிரம்பியிருந்தது. இது கலாசார மரபை மேலும் மேம்பாடடையச் செய்துள்ளமையை இங்குள்ள மக்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்டுள்ளமை சிறப்பானதே, அதுமட்டுமன்றி மானிப்பாய் வாசியான சேர்.பொ. இராமநாதன் அவர்களால் இங்கு அமைக்கப்பட்ட நுண்கலைக் கல்லூரியும் இயல், இசை, நாடக, சித்திர மரபை வளர்த்து வருவதுடன் இசைக்குருகுல மரபை புதிது புதிதாக உருவாக்கி வருகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சித்த மருத்துவக் கல்வியும் இக்கிராமத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது. சித்த வைத்தியர்களான திரு. செல்லப்பா, மணியத்தார், நாகையர், சீவரத்தினம், விநாசித்தம்பி, இராமலிங்கர், சீனிவாசம், செல்லையர், சிவமணி போன்றவர்களால் இம்மரபும் கல்விமுறையும் இங்கு நிலைபெற்றிருந்தது. அத்துடன் அதர்வவேதத்தில கூறப்பட்டது போன்று சோதிட மரபையும் உள்ளடக்கியதாயிருந்தது. சித்தர், நாகலிங்கர், கனகர், கதிர்காமர், அண்ணாமலையார், நாகர், வேலர், சடாசிவப்பா போன்ற பெரும் சோதிடர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்ததாக இவர்கள் வழிவந்தவர்களால் கூறப்படுகின்றது. காலக்கிரமத்தில் வைத்தியத்துறை வளர்த்து வருபவர்கள் என்ற பெருமைக்குரியவர்களாக டாக்டர்.க. பாலசுப்பிரமணியம், எம். பஞ்சலிங்கம் போன்றோர் திகழ்கின்றனர்

எனவே ஒரு நாட்டின் கலாசாரமும், பண்பும் அதில் வசிக்கும் ஆண், பெண்கள் அவர்களைச் சுற்றி ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்கள் இவைகளைப் பொறுத்தே அமைவதாகும். ஒவ்வொரு கலாசாரமும் மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நன்மைகளில் ஒன்றின் மீது முக்கியத்துவம் காட்டுவதாக உள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது, தமிழர் தம் வாழ்வியற் நெறி அறநெறியையே அகவாழ்விலும், புறவாழ்விலும் பின்பற்றி வாழ்ந்து வரும் தமிழர் சமுதாயத்தோடு காலங்கடந்த காலததிலருந்தே பின்னிப் பிணைந்து வருவது கடவுள் நெறி. நம்முன்னோரகள் வாழத் தெரிந்தவர்கள். தெய்வபக்தி இல்லாமல் வாழ்க்கையில ஜீவன் இராது என்பதை நன்கறிந்தவர்கள். அவர்கள் வகுத்த

வழியிலேயே நம்மில் பெரும்பாலானவர்கள் இன்றும் சென்று கொண்டிருக்கின்றோம்.

இணுவையம்பதியில் அறிவிலும், ஆன்மீக வளர்ச்சியிலும் முழுமை பெற்றுள்ள மனிதர்கள் என்றுமே இருந்து வருகின்றார்கள். காரைக்கால் சாமியார், தியாகராசா சாமியார், பெரிய சந்நாசியார், நயினாதீவுச் சாமியார், சாத்திரம்மா, வடிவேல் சுவாமிகள், வேதாரணியம் குருக்களய்யா போன்றோர் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக திகழ்ந்தனர். மிகவும் சீர்கேடான காலம் என்று வழங்கப்படும் காலங்களிற் கூட அறிவுச் சுடரை அணையாமல் காத்து அனைவருக்கும் வழிகாட்டி குறிக்கோளை நோக்கி நடத்திச் செல்லக்கூடிய மகான்கள் தோன்றியுள்ளதனாலும், நிலவளமும், நீர்வளமும், கனிவளமும், தினைவளமும் உள்ளதாக பெருஞ் சீரும் சிறப்பும் பெற்ற பேரூராக இது விளங்கி வருகின்றது என்றால் அது மிகையாகாது. சோழப் பேரரசுப் படைத்தலைவன் கருணாகரத் தொண்டமான் பாதுகாப்புக்காக இங்கு வந்து தங்கியிருந்த பெருமை இவ்வூருக்குண்டு. இங்குள்ள கலைவளத்தையும் கல்வி வளத்தையும், சமய, சமூக, நற்சிந்தனைகளையும், முத்தமிழ் பெருமையையும், கலாசாரச் சிறப்பையும் பாரம்பரியங்களையும் பேணிக்காத்து வருகின்ற மக்கள் குழாத்தினர் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற வாக்கிற்கமைய பிஞ்சு நெஞ்சங்களில் ஆன்மீக சிந்தனைகளை அறநெறியை, கலாசாரப் பற்றுதலை எல்லாம் பசுமரத்தாணியாக ஏற்றுவதற்குக் கல்விச் சாலைகள், அறநெறிப் பாடசாலைகள், ஆலய நிறுவனங்கள் என்பனவுமாக நிறை பொலிவுடன் விளங்கும் இப்பெரும்பதி அன்பு, அருள், இரக்கம், அறிவு, சமத்துவம், ஈகை, நீதி, புதுமை, பக்தி, பொறுமை, ஆன்மநேயம் ஆகியவை நன்கு இணைந்து எல்லோரையும் ஒன்றுபடுத்தி நல்வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டியது என்றே கூற வேண்டும். நகரங்களிலே மிகச் சிறந்தது என்று காளிதாசர் காஞ்சிபுரத்தைக் குறிப்பிட்டது போன்றே இணுவையம்பதியும் அக்காஞ்சிபுர நகரச் சிறப்பை பெற்ற கிராமமாகப் பெருமை பெற்றுத் திகழ்கின்றது.

-- திருமதி ஆனந்த தாண்டவேஸ்வரன்,
இணுவில்.

26 SEP 2019
2124
09 OCT 2019
2124



DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195.